28 /26

# உதயன்

30

■ பதிப்பு: ★
■ விலை: ரூபா 25
■ சுடர் 28
■ கதிர் 129
■ வள்ளுவர் ஆண்டு 2044
■ பங்குனி 22, வியாழன் 04.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

இலங்கைப் படையினர் மீது வழக்குத் தொடர வேண்டும் **6**

விரைகிறது அமெ. போர்க்கப்பல் **7**


செல்வந்தர் - ஏழைகள் இடையே இடைவெளி தற்போதைய ஆட்சியிலேயே அதிகரிப்பு **9**

# 'உதயன்' மீது நேற்று காடையர் ஊர்க்கம்

படங்கள் 21 ஆம் பக்கத்தில்

## கிளிநொச்சி அலுவலக பணியாளர் 4 பேர் காயம்

## பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களும் சேதம்




கிளிநொச்சி, ஏப்ரல் 4

'உதயன்' பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மீது நேற்று அதிகாலை மிலேச்சத்தனமான, காடைத்தனமான, கோழைத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முகங்களை துணிகளால் மூடிக் கட்டிக்கொண்டு வந்த காடையர் கும்பல் ஊழியர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கியும் வாகனங்கள், கணினிகளை உடைத்தும் வெறியாட்டம் நிகழ்த்தியது.

இந்தக் கொலை வெறித் தாக்குதலில் கிளை முகாமையாளர் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர். பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களும் சேதமடைந்துள்ளன.

கிரிக்கெட் விளையாடப் பயன்படுத்தப்படும் விக்கெட்

பார்க்க பக்கம் 04

## ஐ.நா. மீது படையினர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.4

இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மரணங்கள் தொடர்பான உண்மைத் தகவல்கள் அடங்கிய அறிக்கையை ஐ.நா. வெளியிடாமல் வைத்துள்ளது எனத் தெரிவித்த இராணுவ

பார்க்க பக்கம் 04

## தமிழீழம் அமையும் வரை போராட்டங்கள் ஓயாது

**தமிழக மாணவர் கூட்டமைப்பு அறிவிப்பு**

சென்னை,ஏப்.4

தனித் தமிழீழம் அமையும் வரையில் எங்கள் போராட்டம் ஓயாது. பரீட்சைகள் முடிவுற்ற பின்னர் மீண்டும் பேரெழுச்சியுடன் மாணவர் போராட்டங்கள் தொடரும். "இவ்வாறு தமிழக மாணவர் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஈழத்தமிழருக்கு ஆதரவாக தமிழகமெங்கும் மாணவர்கள் நடத்திய தொடர் போராட்டத்தைத் தொடர்ந்து தமிழகத்திலுள்ள சகல கல்லூரிகளும் கால வரையறையற்ற விடுமுறை வழங்கப்பட்டது.

இரண்டுவார விடுமுறையின் பின்னர் தமிழகத்திலுள்ள கலை, பொறியியல், சட்டக் கல்லூரிகள் அனைத்தும் நேற்று புதன்கிழமை மீண்டும் திறக்கப்பட்டன.

மாணவர்களின் வரவுகள் நேற்யை தினம் சகல கல்லூரிகளிலும் குறைவாகவே இருந்ததாக இந்தி

பார்க்க பக்கம் 04

## வெடிபொருளுடன் கைதானோருக்கு பிணை

யாழ்ப்பாணம்,ஏப். 4

பெருந்தொகையில் சி-4 ரக வெடி மருந்துகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குருநகரைச் சேர்ந்த 5 பேரும், யாழ். மேல் நீதிமன்றத்தினால் நேற்று புதன்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களைப் பிணையில் விடுவிக்கக் கோரும் பிணை விண்ணப்பம் யாழ். மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

கடந்த வருடம் குறித்த 5 பேரும், முழங்காவில் பகுதியில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். சித்திரவேல் அன்ரனி, பிலிப்பு பிள்ளை அன்ரனி, கோபாலசாமி ராஜ்குமார், ஜோன் வலன்ரைன் கவிசாந்தன், ஸ்ரீஸ்கந்தராஜா டொனால்ட் நீகன் ஆகியோரே விளக்க

பார்க்க பக்கம் 04

## தமிழ் இனப் படுகொலைகளை அம்பலமாக்கியதால் தாக்குதல்

**■ கண்டிக்கிறார் வை.கோ.**

யாழ்ப்பாணம்,ஏப்.4

சிங்கள அரசு மேற்கொண்ட இனவாத-தமிழ் இனப் படுகொலைகளை ஜெனிவாவில் அம்பலப்படுத்தியதற்காக கிளிநொச்சியில் அமைந்துள்ள 'உதயன்', 'சுடர் ஒளி' அலுவலகம் மீது சிங்களக் குண்டர்கள் தாக்குதல் நடத்தியதை வன்மையாகக் கண்டிப்பதாக ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்றுக் காலை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரி

பார்க்க பக்கம் 04

## ஜெனிவாக் குற்றச்சாட்டுகளை நிரூபித்த 'உதயன்' மீதே தாக்கு

**■ ஐ.தே.க. கடும் கண்டனம்**

கொழும்பு, ஏப். 4

'உதயன்' பத்திரிகை அலுவலகம் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தொடர் தாக்குதல்கள் இலங்கையில் ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. ஊடக அடக்குமுறைகள் தொடர்கின்றன என்ற ஜெனிவாக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தியுள்ளன. மிலேச்சத்தனமான இந்தத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் தாக்குதலின் பின்னணியில் இருந்து செயல்படும் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிரணியின் கொரடாவுமான அஜித்பி.பெரேரா இதனைத் தெரிவித்தார்.

நேற்று கொழும்பு சி.எப். பி.எஸ். மத்திய நிலையத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றுக் காலை கிளிநொச்சியில் உள்ள 'உதயன்' அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது. பலர் ஆபத்தான

பார்க்க பக்கம் 04

## சீன பாதுகாப்பு குழுவுக்கு இங்கு அமோக வரவேற்பு

**■ பாதுகாப்பு ஒத்துழைப்பில் நெருக்கம்**



யாழ்ப்பாணம்,ஏப்.4

சீன பாதுகாப்புத் துறையின் உயர் அதிகாரிகள் குழு நேற்று திடீரென யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்தது. இராணுவத்தினரால் அந்தக் குழுவுக்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டது.

பார்க்க பக்கம் 04

## தமிழ் ஊடகங்களைக் காக்க படைகள் வெளியேறட்டும்

**■ ஐ.நாவிடம் ராமதாஸ் வலியுறுத்து**

சென்னை, ஏப்.4

இலங்கை அரசின் அடக்குமுறையிலிருந்து தமிழ் மக்களையும், ஊடகங்களையும் காப்பாற்ற வேண்டுமானால், தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் இருந்து இராணுவத்தை உடனடியாக வெளியேற்றுவது தான் ஒரே வழி என்பதை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை ஐ.நாவும், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளும் மேற்கொள்ள வேண்டும் என்று பா.ம.க நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் 'உதயன்' அலுவலகம் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டித்து, விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்

பார்க்க பக்கம் 04

## மூதூர் படுகொலைச் சம்பவத்துக்கு பொறுப்பானோரைத் தண்டியுங்கள்

**இலங்கையிடம் கோருகிறது 'அக்ஷன் பாம்'**

பரிஸ்,ஏப்.4

இலங்கையில் போரின் போது தமது 17 பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டதற்குப் பொறுப்பானவர்களை இலங்கை அரசு கண்டறிந்து, அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று பிரான்ஸ் தொண்டர் நிறுவனமான 'அக்சன் பாம்' வலியுறுத்தியுள்ளது.

மூதூரில் உள்ள, 'அக்சன் பாம்' பணியகத்துக்குள் வைத்து, அதன் 17 பணியாளர்களும் 2006ஆம் ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்டனர்.

பக்தாத்தில் உள்ள ஐ.நா. வளாகத்தின் மீது 2003 இல் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பின்னர், மனிதாபிமான நிறுவனத்தின் மீதான மோசமான தாக்குதலாக இது கருதப்படுகிறது.

இதுதொடர்பாக 'அக்சன் பாம்' நிறுவனத்தின்

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனின் தமிழ்த் தேசியப் பற்றை சிதைக்கவோ முடக்கவோ முடியாது

## தாக்குதல் குறித்து வினோ எம்.பி.

வவுனியா, ஏப்.4

காய்க்கின்ற மரத்துக்குத்தான் கல்லெறிகள் விழுவது போல் உதயன் பத்திரிகை மீது தொடர்ந்தும் தாக்குதல்கள் மேற்கொள்வதன் மூலம் உதயனின் தமிழ்த் தேசியப் பற்றினையும் அதன் உறுதிப்பாட்டையும் சிதைக்கவோ, முடக்கவோ முடியாது. இதுதான் உதயனின் வரலாறு.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம்.

உதயனின் கிளிநொச்சி அலுவலகம் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலை அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'உதயன்' தமிழ்த் தேசியத்தின் பத்திரிகை. தமிழ் மக்களின் தேசிய பத்திரிகை இருட்டில் மேற்கொள்ளப்படும் அயோக்கியத்தனமான, கோழைத்தனமான காட்டுமிராண்டித்தனத்துக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும். அரச இயந்திரங்களின் ஏவல் கூட்டங்களினால் முன்னெடுக்கப்படும் இதுபோன்ற ஊடக சுதந்திரத்துக்கு எதிரான தாக்குதல்களை அரசு கட்டுப்படுத்த வேண்டும். தாக்குதல்தாரிகள் கண்டு பிடிக்கப்படுவார்கள் என்றோ, கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள் என்றோ, நம்புவதற்கு தமிழ் மக்கள் இன்னமும் இந்த அரசின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. ஆனால் அரசு பொறுப்புடன் செயற்பட வேண்டும். உதயன் பத்திரிகை மட்டுமல்ல எந்தவொரு இனம், மொழி, மதம் சார்ந்த பத்திரிகை என்றாலும் கருத்துக்களைக் கருத்துக்களால் சந்திக்க வேண்டும். பத்திரிகை விமர்சனங்களையோ, தவறுகளையோ நேருக்கு நேர் பகிரங்கமாக முன்வைக்க வேண்டும்-என்றார். (த)

# 'உதயன்' தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டுபிடிக்காத கோத்தாவின் பொலிஸ்

## சாடுகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஏப்.4

'உதயன்' பத்திரிகை தாக்கப்படுவது இது முதல் முறையல்ல. இவ்வாறு 'உதயன்' பத்திரிகையின் தாக்குதலுடன் தொடர்புடைய எவரும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதைத்தான் கோத்தபாய ராஜபக்ஷவின் பொலிஸார் செய்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார். அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகம் சென்ற பிக்குமார்களைத் தாக்கியவர்களைத் தமிழக அரசு கைது செய்துள்ளது. ஆனால் இங்கே பெப்பிலியானவில் முஸ்லிம் வர்த்தக நிலையத்தை தாக்கி, ஒருவரின் மண்டையை உடைத்த காடையர்களைக் கைது செய்து மன்னிப்பு வழங்கி விடுவித்துவிட்டார்கள்.

கிளிநொச்சியில் சனிக்கிழமை நடந்த கூட்டமைப்புக் கூட்டத்தில் மக்கள் பிடித்துக் கொடுத்த காடையர்களைப் பொலிஸார் உடனடியாகவே விடுவித்து விட்டனர். அதில் ஒருவர் பொலிஸ் புலனாய்வுத்துறை அதிகாரி. இதே போல் தெல்லிப்பழையிலும் மக்கள் பிடித்துக் கொடுத்த குற்றவாளிகளைப் பொலிஸ் விடுவித்தது.

இன்று (நேற்று) காலை கிளிநொச்சியில் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டுப் பணியாளர்கள் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இது முதல் முறை அல்ல. இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுவோர் எவரும் எப்போதும் கண்டுபிடிக்கப்படுவது இல்லை.

இதுதான் இலங்கையின் கோத்தபாய ராஜபக்ஷவின் பொலிஸ். ஆனால் கோத்தபாய ராஜபக்ஷவின் பொலிஸை விட ஜெயலலிதாவின் தமிழ்நாடு பொலிஸ் நேர்மையாகத் தனது கடமைகளைச் செய்துள்ளது - என்றார். (த-5)

# ஊடக சுதந்திரம் இங்கு அறவே இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 04

'உதயன்' பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மற்றும் பணியாளர்கள் மீதான தாக்குதல், இங்கு ஊடக சுதந்திரம் அறவேயில்லை என்பதைக் காட்டியுள்ளது.

இராணுவத்தினரும் ஒட்டுக்குழுக்களும் இணைந்தே நேற்று இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளனர் எனச் சந்தேகம் எழுகிறது. இதனை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாக தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட இளைஞரணித் தலைவர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது :-

உதயன் பத்திரிகையாளர்கள், பணியாளர்கள், நிறுவனம் என்பன மீதான தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தாக்கியவர்கள் என்றைக்குமே கைது செய்யப்பட்டதில்லை.

சிலவாரங்களுக்கு முன்னரும் 'உதயன்' பத்திரிகை விநியோகஸ்தர் தாக்கப்பட்டு அவர் கொண்டு சென்ற பத்திரிகைகள் எரிக்கப்பட்டன.

நேற்று அதிகாலை கிளிநொச்சி அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் அலுவலக முகாமையாளர், பணியாளர்கள் காயமடைந்தனர்.

இராணுவத்தினரும் ஒட்டுக்குழுக்களும் இணைந்தே 'உதயன்' கிளிநொச்சி அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகச் சந்தேகிக்கிறோம்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் மற்றும் உண்மை நிலைகளை உடனுக்குடன் வெளிப்படுத்தி வருவது 'உதயன்' பத்திரிகை. ஆனால் அவ்வாறு உண்மைகள் எதுவுமே வெளியில் வரக்கூடாது என்பதற்காகவும் ஊடகப் பணியாளர்களை அச்சுறுத்திச் செயலிழக்க வைக்கவும் 'உதயன்' பத்திரிகையை முடக்கவுமே இதுபோன்ற தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன-என்றார். (த-4)

# தமிழரின் கருத்துச் சுதந்திரத்துக்கு அடிக்கப்படும் சாவு மணியே இது

## மாவை எம்.பி. கண்டனம்

'உதயன்' மீது தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதல்கள் இலங்கைத் தமிழர்களின் சுதந்திரமான கருத்து வெளிப்பாட்டுக்கு அடிக்கப்படும் சாவு மணி எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய உணர்வை எப்போதும் பிரதிபலிக்கும் ஊடகங்களுள் ஒன்றான 'உதயன்' மீது மீண்டும் ஒருமுறை வன்முறைத் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது.

யாழ்.கண்டி பிரதான வீதியில் கிளிநொச்சியில் அமைந்துள்ள 'உதயன்' பிராந்திய அலுவலகத்தின் மீது விடிகாலை 5 மணியளவில் பொல்லுகள், தடிகளுடன் வந்த குண்டர் குழு ஒன்று மிக மோசமான அராஜகத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றிருக்கின்றது. 'உதயன்' கிளை முகாமையாளர் உட்பட ஐவர் படுகாயமடைந்திருக்கின்றனர். வாகனங்கள், உடைமைகள் மோசமாகச் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் ஊடகங்களுக்கு எதிரான-குறிப்பாக 'உதயன்' போன்ற தமிழர்களின் உணர்வெழுச்சியை வெளிப்படுத்துகின்ற ஊடகங்களுக்கு எதிரான தாக்குதல்கள் வரண்முறையற்று எல்லைமீறித் தொடர்ந்த வண்ணம் உள்ளன. ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். மோசமாகத் தாக்கப்பட்டு காயப்படுத்தப்படுகிறார்கள். உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஊடகவியலாளர்களும், ஊடகங்களும் அச்சுறுத்தப்படும் அபாய நிலைமை நீடிக்கின்றது. ஊடகங்கள் மீதான நேரடித் தாக்குதல்களும் தீவிரமடைந்துள்ளன. ஆனால், இவ்வாறு தமிழ் ஊடகங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் மட்டும் சட்டத்தின் முன் எப்போதுமே கொண்டுவரப்படுவதேயில்லை. அதை நோக்கும்போது இரண்டு சந்தேகங்கள் வெளிப்படையாக எமக்கு ஏற்படுகின்றன.

ஒன்று அவ்வாறான தாக்குதல்கள் அதிகாரத் தரப்பின் ஆசீர்வாதத்துடனேயே தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஊடகங்கள் மீது-குறிப்பாக 'உதயன்' மீது தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் இலங்கைத் தமிழர்களின் சுதந்திரமான கருத்து வெளிப்பாட்டுக்கு அடிக்கப்படும்சாவு மணியாகவே அமைந்திருப்பது வேதனைக்குரியது.

இலங்கையின் ஊடக சுதந்திரம் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாவது குறித்து சர்வதேச சமூகம் உரத்துக் குரல் எழுப்பிவரும் சூழலிலும் இத்தகைய அராஜகங்கள் இங்கு கட்டுமட்டில்லாமல் தொடர அனுமதிக்கப்பட்டிருப்பது இந்த நாட்டின் ஆட்சி எத்தகைய சர்வாதிகார நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்பதற்கு நல்ல சான்று.

ஊடகங்கள் மீதான அராஜகங்கள் புரிவோரை பேணிப் பாதுகாத்து, சட்டவிலக்களிப்பு வழங்குவதை விடுத்து இனிமேலாவது அவர்களைக் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனையை பெற்றுக்கொடுக்க இந்த நாட்டின் ஜனாதிபதி முன்வர வேண்டும் என நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

சர்வதேசமும் இத்தகைய ஊடக அடக்குமுறைக்கு எதிராகத் தொடர்ந்து வெறுமனே கண்துடைப்புக் கண்டன அறிக்கைகளை விடுப்பதை விடுத்து காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், இத்தகைய அராஜகங்கள் புரிவோரை உரிய முறையில் தண்டிப்பதற்கான அழுத்தங்களைப் பயனுள்ள வழியில் மேற்கொள்ளவும் முன்வர வேண்டும் எனக் கோருகிறோம். அத்துடன் உதயன் நிறுவனம் உள்ளிட்ட ஊடகத்துறைக்கு அரசு போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றோம்.

கடந்த வாரம் கிளிநொச்சியில் நடந்த எமது கட்சிக் கூட்டத்தின் மீது நடத்தப்பட்ட அராஜகத் தாக்குதல்கள் பற்றிய விவரங்களை தெளிவான, விவரமான படங்களுடன் 'உதயன்' வெளியிட்டுச் சூத்திரதாரிகளை வெளிச்சம் போட்டு அம்பலப்படுத்திய பின்னணியிலேயே அந்தப் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் இத்தகைய கொடூரத் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றது என்பது கவனிக்கத்தக்கது-என்றுள்ளது. (த)

# அடக்குமுறைகளைத் துணிந்து எதிர்க்கும் 'உதயன்' மீது காட்டுமிராண்டித்தனம்

## குமுறுகிறார் பாஸ்கரா

கொழும்பு, ஏப்.4

தமிழ்ப் பேசும் மக்கள் மீது ஆட்சியாளர்களும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணைக் குழுக்களும் கட்டவிழ்த்து விட்டுவரும் அடக்குமுறைகளுக்கு எதிராக தளராத துணிவோடு களமாடிவரும் தமிழ் ஊடகங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மீதும் ஊழியர்கள் மீதும் நேற்று நடத்தப்பட்ட தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் பேச்சாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான பாஸ்கரா கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ்த் தேசியத்தின்பால் அக்கறை கொண்டு எழுதி வருவதையும், செய்தி வெளியிட்டு வருவதையும் பொறுத்துக் கொள்ள முடியாத ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்காத கருத்துக்களை கருத்துக்களால் வெல்லத் திராணியற்று வன்முறைக் கலாசாரத்திலும் கொலைக் கலாசாரத்திலும் நம்பக்கை கொண்டுள்ள ஜனநாயக விரோத சக்திகளே இத்தாக்குதலை நடத்தியுள்ளன என்றும் அவர் குமுறியுள்ளார்.

இந்தத் தாக்குதலின் மூலம் சிறுபான்மை மக்களான தமிழ் முஸ்லிம்களின் உரிமைக்காகவும் அவர்களின் குரலை யார் எதிரொலித்தாலும் எந்த வழியில் எவரொருவர் போராடினாலும் அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் உயிருக்கு சிறிதும் பாதுகாப்புக் கிடையாது என்பது மற்றுமொருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைக் காலமாக தமிழ்ப் பத்திரிகைகள் மக்களின் கைக்குச் செல்வதைத் தடுப்பதற்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக வடக்கில் சில தமிழ்ப் பத்திரிகைகள் அண்மையில் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்கள் அரங்கேறின.

உதயன் மீதான தாக்குதல்கள் தொடர்கின்ற போதும் இதுவரை அரசு தாக்குதல் மேற்கொண்டவர்களை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். (த)

## தாக்குதல்களைத் தடுப்பதற்கு ஒன்றிணைக

'உதயன்' பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மற்றும் பணியாளர்கள் மீதான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதுபோன்ற தாக்குதல்களை அனைவரும் ஒன்று சேர்ந்து முறியடிக்க முன்வர வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தனது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாணத்தில் ஜனநாயக உரிமையை மீறும் செயலாகவே 'உதயன்' கிளிநொச்சி அலுவலகம் மீதான தாக்குதல் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

இதுபோன்ற தொடர்ச்சியான செயற்பாடுகள் மூலம் இங்கு ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கும் நிலைமை ஏற்படுத்தப்படுகிறது. இந்த அரசும் அதற்குத் துணை போகிறது- என்றார். (த-4)

# தமிழரின் கருத்தறியும் உரிமையை குழிதோண்டிப் புதைக்கும் முயற்சி

## சிவசக்தி ஆனந்தன்

கிளிநொச்சி உதயன் பத்திரிகை அலுவலகம் அடித்து நொருக்கப்பட்டு விநியோகப் பணியாளர்கள் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டு பிரசுர உபகரணங்கள், வாகனங்கள் சேதப்படுத்தப்பட்ட சம்பவமானது, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கான கடப்பாடுகளை அடியோடு குழிதோண்டிப் புதைக்கும் செயலாகும். இவ்வாறு தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக நடமாடுவதை உறுதி செய்வதோடு, தகவல்களுக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்குச் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் எல்.எல்.ஆர்.சியில் தெளிவாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான அட்டூழியங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன- என்றுள்ளது. (ஐ-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல் நடத்தியோர் புலனாய்வாளர்களே!

## சந்தேகம் வெளியிடுகிறார் சரவணபவன் எம்.பி.

'உதயன்' பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மீது தாக்குதல் நடத்திய காடையர்கள் அணிந்திருந்த ஆடைகள், தாக்குதல் நடத்திய விதம் என்பவற்றைப் பார்க்கும்போது அவர்கள் இராணுவப் புலனாய்வாளர்கள் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

அரசுக்குத் தெரியாமல் அல்லது அரசின் அனுமதி இல்லாமல் இவ்வாறான அராஜகங்கள் இடம்பெற வாய்ப்பில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'உதயன்' பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மீது 7 பேர் கொண்ட காடையர் கும்பலொன்று நேற்று அதிகாலை மிலேச்சத்தனமான முறையில் நடத்திய தாக்குதலில் அலுவலகம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. அத்துடன் கிளை முகாமையாளர் உட்பட பணியாளர்கள் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 'உதயன்'- 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் நிர்வாகப் பணிப்பாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தவை வருமாறு:-

உதயன் பத்திரிகைக் பிரதிகளை வன்னிக்கு எடுத்துச்செல்லும் வாகனம் வழமைபோன்று நேற்று அதிகாலை பத்திரிகைப் பிரதிகளை எடுத்துச் சென்றது.

இவ்வாறு சென்ற வாகனம் கிளிநொச்சி - கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள உதயன் அலுவலகத்தில் பத்திரிகைகளை இறக்குவதற்கு ஆயத்தமானபோது அங்கு முகமூடி அணிந்து வந்த காடையர்கள் உதயன் பணியாளர்களைக் விக்கெட் கொட்டன்களினால் கடுமையாகத் தாக்கினர்.

அத்துடன் அலுவலகத்தினுள்ளே புகுந்து கணினிகள், தளபாடங்களை அடித்து நொறுக்கினர். பத்திரிகைகளை எடுத்து வெளியே வீசியுள்ளனர். அங்கு தரித்து நின்ற வாகனங்களும் காடையர்களின் காட்டுமிராண்டித்தனத் தாக்குதலுக்கு இலக்காகின. மொத்தத்தில் கிளிநொச்சி அலுவலகம் முற்றாக சேதமடைந்துள்ளது.

காடையர்களின் இந்த வெறிபிடித்த தாக்குதலில் கிளை முகாமையாளர் உட்பட மூன்று பணியாளர்கள் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதே வேளை, இருவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த இடத்துக்கு உடனே விரைந்த நான் நிலைமைகளை அவதானித்தேன்.

கிளிநொச்சி பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் அறிவித்தோம். இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சி பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கில் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் துணிவுடன் செய்திகளாக வெளியிடும் உதயன் பத்திரிகையை முடக்கும் நோக்குடன் காடையர்கள் கடந்த காலங்களில் இருந்து பல்வேறு வடிவங்களில் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதில் எமது ஊடகவியாளர்கள், பணியாளர்கள் பலர் பலியாகினர்; பலர் காயமடைந்தனர். எனினும், உதயன் எதற்கும் அடிபணியவில்லை.

இந்நிலையில் உதயன் பத்திரிகையின் விநியோகப் பணியை முடக்கும் நோக்குடன் அண்மைக் காலமாக காடையர்களினால் தொடர்ச்சியாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விநியோகப் பணியாளர்கள் நடுவீதியில் வைத்து கொடூரமான முறையில் தாக்கப்பட்டிருந்தனர். பத்திரிகைகள் நடுவீதியில் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் நேற்று அதிகாலை உதயனின் கிளிநொச்சி அலுவலகம் மீது காடையர்கள் கும்பலொன்று தாக்குதல் நடத்தியுள்ளது. எமது விநியோகப் பணியாளர்களைக் காயப்படுத்தியுள்ளது.

கறுப்புத் துணியினால் தம்து முகத்தை மறைத்துக் கொண்டு தாக்குதல் நடத்திய காடையர்கள் அணிந்திருந்த அரைக்காற்சட்டைகள், தாக்குதல் நடத்திய விதம் என்பவற்றைப் பார்க்கும்போது அவர்கள் இராணுவப் புலனாய்வாளர்கள் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கில் 24 மணிநேரமும் இராணுவத்தின் ஆட்சி இடம்பெறுகின்றது. இந்நிலையில், இராணுவத்தின் துணை இல்லாமல் அல்லது அரசுக்குத் தெரியாமல் அல்லது அரசின் அனுமதி இல்லாமல் இவ்வாறான அராஜகங்கள் இடம்பெற வாய்ப்பில்லை - என்று தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் பத்திரிகை அலுவலகங்களை தாக்கியோ அல்லது விநியோகப் பணியாளர்களை அடிபணிய வைத்தோ உதயன் பத்திரிகையை முடக்கலாம் என்று தப்புக்கணக்குப் போடுபவர்களிடம் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். அதாவது தடைகள், அராஜகங்களைத் தகர்ந்தெறிந்து உதயன் வீறுநடைபோடுவான். அவனின் பணி தொடரும்.

கடந்த சில நாள்களாக சில இடங்களில் 'உதயன்' பத்திரிகையை வாங்காதிருக்குமாறு எச்சரித்து வன்னியின் பல இடங்களில் அதாவது; தமிழ் மக்களின் உரிமைக் குரலாக அச்சமின்றி உண்மைகளை வெளியிட்டு வரும் உதயன் பத்திரிகை மக்கள் கரங்களுக்குச் சென்றுவிடாமல் தடுப்பதற்கு வகுக்கப்பட்ட ஒரு பெரும் வஞ்சக நிகழ்ச்சித் திட்டமே இது.

எத்தனையோ விதமான நெருக்கடிகளை உதயன் சந்தித்தபோதும் உதயன் எவ்விதத் தளர்வுமின்றி, தமிழ் மக்களுக்காகவும், தமிழ்த் தேசியத்துக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறான். இவ்வாறு வன்முறைகள் மூலமும், நரித்தந்திர வேலைகள் மூலமும் உதயனின் அர்ப்பணிப்புடன் கூடிய பயணத்தை நிறுத்த முடியாத நிலையில் உதயன் மக்கள் கைக்குச் சென்றடைவதைத் தடுக்கும் வகையிலான கீழ்த்தர நடவடிக்கைகளும், வன்முறைகளும் திட்டமிட்ட வகையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. - என்றார் சரவணபவன்.

# ஊடக சுதந்திரம் பேணப்படுகிறதா?

நாட்டில் ஊடகத்துறை மீது தொடர்ச்சியாக அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. ஊடகவியலாளர், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் என அவற்றைப் பட்டியலிட்டுக்கொண்டு செல்லலாம். ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. எனினும், ஊடகத்துக்கு எதிரான அடக்குமுறை ஒழிந்ததாக இல்லை.

இந்நிலையில், ஊடக சுதந்திரம் குறித்து கருத்து வெளியிடுகையில் அரசியல் பிரமுகர்கள் கூறியவை வருமாறு:-

## ஒருபோதும் திருந்தாது அரசு

### சிறிதரன்

ஊடகங்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அராஜகங்களைப் பார்க்கும்போது சர்வதேசத்தின் அறிவுரைகளை இலங்கை அரசு இனியும் பின்பற்றாது என்பது நிரூபணமாகியுள்ளது. இதற்கு உதாரணமாக கிளிநொச்சியில் உதயன் அலுவலகம் தாக்கப்பட்டதை எடுத்துக்காட்டலாம்.

இந்தத் தாக்குதலை அரசின் அனுமதியுடன் இராணுவப் புலனாய்வாளர்களும், ஒட்டுக்குழுக்களும் இணைந்துதான் நடத்தியுள்ளனர். உதயனை அடிபணிய வைப்பதுதான் அரசினதும், அதன் அடிவருடிகளினதும் நோக்கமாக உள்ளது என்று கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

## இனவாதிகளுக்கே சுதந்திரம்

### லோரன்ஸ்

கடந்த காலமாக இருந்தாலும் சரி, தற்போதைய நிலையிலும் சரி இலங்கையில் ஊடக சுதந்திரத்துக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை. ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றனர். சிவராம், நடேசன், லசந்த போன்ற பிரபல்யமான ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டனர்.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் பேசப்படுகையில், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. எனவே, ஊடகவியலாளர்களுக்கு முழு அளவிலான சுதந்திரம் வழங்கப்படவேண்டும்; ஊடகத்துறையைக் கட்டியெழுப்பவேண்டும் எனத் தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணியின் உபதலைவர் அ.லோரன்ஸ்.

## குழிதோண்டிப் புதைப்பு

### சிறிதுங்க ஜயசூரிய

நாட்டில் ஊடக சுதந்திரம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. அரசுக்கு அடிபணியாததால் ஊடக அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்படுகின்றது.

ஊடகத்துறையுடன் அரசு விளையாட முனையக் கூடாது. அதனை சுதந்திரமாக இயங்கவிடவேண்டும். வடக்குத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதில் வெற்றிபெறுவதற்கான குறுக்குவழிச் செயற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. இதற்கு ஒத்திகை பார்ப்பதற்காகவே 'உதயன்' மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசின் ஊடக அடக்குமுறைக்கு எதிராக விரைவில் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் எனக் குறிப்பிட்டார் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய.

# நாட்டில் 100 வீத ஊடக சுதந்திரம்

## இப்படிக் கூறுகிறார் இராணுவப் பேச்சாளர்

இலங்கையில் ஊடக சுதந்திரம் முழுமையாக இருக்கின்றது. இருப்பினும், இங்கு ஊடக சுதந்திரம் இல்லையெனக் காட்ட பலர் முயற்சிக்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டிய இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய, இலங்கையில் ஊடக சுதந்திரம் இல்லையா என்று ஊடகவியலாளர்களிடம் கேள்வியும் எழுப்பினார்.

நாட்டில் ஊடக சுதந்திரம் இல்லை என்ற எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் வகையில், கிளிநொச்சியிலுள்ள 'உதயன்' பத்திரிகையின் கிளை அலுவலகம் மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்நிலையிலேயே இராணுவ ஊடகப் பேச்சாளர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் நேற்றுக்காலை இடம்பெற்ற பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது இராணுவ ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

செய்திகளை வெளியிடுவதில் ஊடகங்களுக்கிடையே போட்டித்தன்மை இருக்கலாம். ஆனால், கூட்டுப் பொறுப்பை ஊடகங்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

பிரசுரிக்கும் செய்திகள் தொடர்பில் இராணுவத்தினருடன் கருத்துகளைப் பகிர்ந்து அவர்களது கருத்துக்களையும் கேட்டு அதனையும் பிரசுரிக்க வேண்டும். அதைவிடுத்து எம்மிடம் கருத்துக் கேட்காது மற்றவரது கருத்தை மட்டும் பிரசுரிக்க வேண்டாம். ஊடகங்கள் எம்முடன் கைகோர்த்து செயற்படவேண்டும் - என்றார்.

**கேள்வி:** இலங்கையில் ஊடக சுதந்திரம் இருக்கிறது என நீங்கள் கூறுகிறீர்கள். அவ்வாறெனில், அண்மையில் யாழ். 'உதயன்', 'தினக்குரல்' பத்திரிகை விநியோகஸ்தர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அத்துடன், நேற்று அதிகாலை கிளிநொச்சியிலுள்ள 'உதயன்' பத்திரிகை கிளை அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவங்களை நீங்கள் எவ்வாறான கண்ணோட்டத்தில் பார்க்கின்றீர்கள்?

**பதில்:** பத்திரிகை விநியோகஸ்தர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்குத் தனிப்பட்ட சில காரணங்கள் இருக்கின்றன. அதேபோல, இன்று 'உதயன்' காரியாலயமும் தாக்கப்பட்டமை குறித்து நாம் ஆராய வேண்டும்.

# உதயன் தாக்குதலின் பின்னணியில் அரசு!

## தமிழ்க் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மீது குண்டர்கள் நேற்று நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலின் பின்னணியில் அரசே உள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களின் ஆடை (ஹபாயா) விவகாரத்தில் மூக்கை நுழைத்து அவர்களின் தனிப்பட்ட மத உரிமைக்குப் பங்கம் விளைவித்த அரசு, தனது அடுத்த கட்ட நடவடிக்கையாக ஊடகத்துறையின் மீதும் கைவைக்க ஆரம்பித்துள்ளது. இதன் எதிரொலியாகவே கிளிநொச்சியில் இயங்கி வந்த 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது நேற்று குண்டர்கள் குழு தாக்குதல் நடத்தியுள்ளது. அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் சுமந்திரன் கூறினார்.

கொழும்பில் நேற்று 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' என்ற அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் தற்போது அடாவடித்தனங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இது தொடர்பில் அரசும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காது அமைதியாகவே இருந்து வருகிறது.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தின் மீது இனந்தெரியாத நபர்கள் தேசியக் கொடியை ஏந்தியவாறு சென்று சுமார் அரை மணி நேரம் வரை கற்களால் எறிந்து தாக்கியுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஏறக்குறைய 11 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நடைபெற்றபோது அங்கிருந்த பொலிஸாரும், இராணுவத்தினரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். எனினும், இரகசியப் பொலிஸ் அடையாள அட்டையை வைத்திருந்த ஒருவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த போது, அவர் தாக்குதலை மேற்கொள்ளவில்லை எனப் பொலிஸார் கூறி அவரை விடுவித்தனர். முகமூடிகளை அணிந்து வந்து மிகவும் லாவகமாகத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டிருந்தோரின் புகைப்படங்கள் பத்திரிகைகளிலும், ஏனைய ஊடகங்களிலும் வெளியாகியிருந்தும் கூட இன்றுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. இத்தாக்குதலை நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

முஸ்லிம் மக்களின் தனிப்பட்ட உரிமையில் மூக்கை நுழைத்த இந்த அரசு தற்போது ஊடக சுதந்திரத்தையும் பறிக்க முனைகிறது. இதற்கான முயற்சியே இது போன்ற அடாவடித்தனங்கள் - என சுமந்திரன் தன் ஆதங்கத்தை வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
சீனக் குழுவின் திடீர் யாழ்.வருகை அரசியல் அவதானிகள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை வரவழைத்துள்ளது. பாதுகாப்புத் துறையில் சீன-ஸ்ரீலங்கா உறவின் நெருக்கத்தை இது குறிப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

சீனப் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் தலைமையிலான குழுவினர், யாழ். நகரின் கரையோரப் பிரதேசங்களை நேற்றுப் பார்வையிட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து விசேட விமானம் மூலம் நேற்றுக் காலை பலாலியை வந்தடைந்த சீனக் குழுவினர், ஹெலி மூலம் துரையப்பா விளையாட்டரங்கை வந்தடைந்தனர்.

யாழ். நகருக்கு வந்த சீனப் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் செகுயு தியுக் தலைமையிலான குழுவினரை, இலங்கை இராணுவத்தின் 512 ஆவது பிரிக்கேட் தளபதி அஜித் பன்னவல வரவேற்றார்.

யாழ். கோட்டைப் பகுதியைப் பார்வையிட்ட இந்தக் குழுவினர் ஹெலி மூலம் யாழ். நகரின் கரையோரப் பிரதேசங்களை நோட்டமிட்டவாறு சென்றனர். இவர்கள் கிளிநொச்சிக்கும் சென்றதாக படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

## மூதூர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மனிதாபிமானச் சட்ட ஆலோசகர் போலின் செற்கியூற்றி ரொய்ட்டருக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றில்,

இதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது முக்கியமானது. இலங்கையில் எமக்கு உண்மையான அமைதி, நல்லிணக்கம், நீதி தேவையென்றால், எந்தவொரு விசாரணைகளும் வெளிப்படையானதாக இருக்கவேண்டும். ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை 'அக்சன் பாம்' வரவேற்கிறது.

ஆனால் இத்துடன் இது முடிந்துவிடாது. ஏனென்றால் தீர்மானத்தின் வாசகங்கள் கடுமையானவை அல்ல. சிலவற்றைச் செய்வதற்கு இது இலங்கைக்கு உறுதியான அழுத்தம் கொடுக்கவில்லை.

போர்க்குற்றங்கள் குறித்து நம்பகமான அனைத்துலக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கை இராணுவமே மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள நிலையில், இலங்கையையே சொந்தமாக விசாரணை நடத்தும்படி கோருவது முரணானது.

மூதூர்ப் படுகொலைகள் குறித்து இலங்கையின் மூன்று நீதி விசாரணைகளை நெருக்கமாக அவதானித்தோம்.

ஆனால் அரசியல் தலையீடுகள் மற்றும் தவறுகளால் விசாரணைகள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இழுபறியாக உள்ளது என்று கூறியுள்ளார். (த)

## தமிழ் ஊடக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டுள்ளதாவது:-

இலங்கையில், கிளிநொச்சி நகரில் உள்ள 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது இன்று அதிகாலை கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 'உதயன்' பணியாளர்கள் 4 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

தமிழர்களுக்கு எதிரான படையினரின் அத்துமீறல்களை அம்பலப்படுத்தியதாலும், ஜெனிவா மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கை அரசுக்கு எதிராக உலக நாடுகளின் தூதுவர்கள் தெரிவித்த கருத்துக்களை 'உதயன்' விரிவாக வெளியிட்டதாலும் ஆத்திரமடைந்த ஆட்சியாளர்கள் தான் இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டு நடத்தியுள்ளனர். தாக்குதலை நடத்தியவர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை.

இராணுவத்தினரைக் கொண்டு தமிழர்களை அடக்கி வரும் சிங்கள அரசு, ஊடகங்களையும் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்காமல் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகிறது என்பதற்கு இதைவிடச் சிறந்த ஆதாரம் இருக்க முடியாது.

இலங்கை அரசின் அடக்குமுறையிலிருந்து தமிழ் மக்களையும், ஊடகங்களையும் காப்பாற்ற வேண்டுமானால், தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் இருந்து இராணுவத்தை உடனடியாக வெளியேற்றுவது தான் ஒரே வழி என்பதை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை ஐ.நாவும், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளும் மேற்கொள்ள வேண்டும்-என்றுள்ளது. (த)

# ஆயுத விற்பனை ஒப்பந்தம் ஐ.நாவில் நிறைவேற்றம்!

உலகளாவிய ரீதியில் ஆயுத விற்பனையை முறைப்படுத்துவதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கை ஐ.நா. பொதுப் பேரவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

மனித குலத்துக்கு எதிரான அட்டூழியங்களை இழைப்பதற்கு ஆயுதங்களைப் பயன்படுத்தும் நாடுகளுக்கும் குழுக்களுக்கும் ஆயுதங்கள் சென்றடைவதை இந்த உடன்படிக்கை தடுக்கின்றது.

ஐ.நா. பொதுப் பேரவையில் இந்த உடன்படிக்கைக்கு ஆதரவாக 154 நாடுகள் வாக்களித்தன. ஈரான், சிரியா, வடகொரியா ஆகிய மூன்று நாடுகளும் எதிர்த்து வாக்களித்தன. இந்தியா உட்பட 23 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

## தமிழ் இன...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
விக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை இராணுவத்தின் முன்னிலையிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை அரசு மேற்கொண்ட தமிழ் இனப் படுகொலையை ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அம்பலப்படுத்தியதாலேயே கிளிநொச்சியில் அமைந்துள்ள இந்த அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது.

சர்வாதிகாரி ஹிட்லரின் நாசிகள் நிகழ்த்திய கொலைவெறித் தாண்டவத்தையே, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டத்தினரும் தமிழ் ஈழத்தில் நடத்தி வருகின்றனர்.

இதனைச் சர்வதேசமும் ஐ.நா. சபையும் உணரவேண்டும். தமிழ் ஈழப் பிரதேசங்களிலிருந்து இராணுவத்தினரையும் சிங்களவர்களையும் வெறியேற்றுவதன் மூலமே அங்கு ராஜபக்ஷ அரசின் கொலைவெறித்தனத்தை நிறுத்த முடியும்- என்றுள்ளது. (த-5)

## ஜெனிவாக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஜனநாயக ரீதியாக முகம் கொடுக்க முடியாத கோழைகளே இப்படியான தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.

உதயன் நிறுவனத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பது முதலாவது தடவை அல்ல.

இறுதிப்போர் முடிவடைந்த பின்னர் தொடர்ச்சியாகப் பல தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

'உதயன்' செய்தி ஆசிரியர் நா.குகநாதன் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாகப் பல ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். வாகனங்களும் பத்திரிகைகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

ஆனால் இன்றுவரை இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் ஒருவர் கூட கைதுசெய்யப்படவில்லை.

நேற்று அதிகாலை கிளிநொச்சி பிரதான வீதியில் அமைந்துள்ள உதயன் பத்திரிகை அலுவலகம் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த பலர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். அலுவலகத்தின் உடைமைகள் அடித்து நொருக்கிச் சேதமாக்கப்பட்டுள்ளன.

தாக்குதலை நடத்திய குண்டர்கள் சர்வசாதாரணமாக அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். கிளிநொச்சி இராணுவத்தின் கேந்திர நிலையம். இரவு பகலாக இராணுவ, பொலிஸ் சேவைகள் இடம்பெறுகின்றன. இப்படியாக சூழ்நிலையில் இந்தத் தாக்குதல்களை நடத்திவிட்டு தப்பிச் செல்லும் இனந்தெரியாத நபர்கள் யார்? எங்கிருந்து வருகின்றனர் இவர்கள் ஏன் கைதுசெய்யப்படுவதில்லை. என்ற கேள்வி எழுகின்றது. வடக்கு, கிழக்கு உட்பட்ட சகல பகுதிகளும் உள்ள ஊடகவியலாளர்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இவ்வாறான செயல்கள் இலங்கையில் ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. என்ற குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

இந்த விடயத்தில் அரசு தொடர்ந்தும் மௌனம் காக்குமேயானால் அது சர்வதேச சமூகத்தின் நேரடி நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை நடத்துபவர்கள் கைது செய்யப்பட வேண்டும். இந்தத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளை இனம்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்ட வேண்டும்.

அதேவேளை- இதே நிலைமை தொடர்ந்தால் நாமும் அமைதியாக இருக்க முடியாது.

அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் பின் விளைவுக்கும் [illegible] பொறுப்பேற்க வேண்டும் என்றுள்ளது. (த-2)

## வெடிபொருளு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

பிணை விண்ணப்பங்களைப் பரிசீலித்த மேல் நீதிமன்ற ஆணையாளர் பிணை அனுமதி வழங்கினார். அதன்படி தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணையில் அவர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிடவேண்டும் என்று ஆணையாளர் நிபந்தனை விதித்தார். (த-4)

## ஐ.நா....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய, அந்த அறிக்கையை ஐ.நா. ஏன் வெளிப்படுத்தாமல் வைத்துள்ளது எனத் தெரியவில்லை என்றும் தெரிவித்தார்.

நாட்டில் தீவிரவாதம் மட்டுமே இல்லாதொழிக்கப்பட்டுள்ளதே தவிர பிரிவினைவாதம் இன்னும் அப்படியேதான் இருக்கின்றது. இதுதான் நாட்டின் நல்லிணக்கத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. எனவே, நாம் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் முடிவடையவில்லை என்றும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற மரணங்கள் தொடர்பான உண்மைத் தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை ஐ.நா. தயாரித்துள்ளது. இந்த அறிக்கையானது 2008 ஒகஸ்ட் முதல் 2009 மே வரையிலான காலப்பகுதிக்குரியதாகும். குறித்த காலப்பகுதியினுள் போர்க் களத்தில் பணியாற்றிய அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட ஏனைய அமைப்புகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய ஐ.நா. அந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது.

இதன்படி இலங்கையின் இறுதிக்கட்ட போரில் 7ஆயிரத்து 721 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 18ஆயிரத்து 479பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அந்த அறிக்கையை ஐ.நா. வெளியிடவில்லை.

ஏன் அந்த அறிக்கையை ஐ.நா. வெளியிடவில்லை எனத் தெரியவில்லை. அதற்கு மாறாக தமிழ் ஆதரவாளர்களின் சர்வதேச அமைப்புகள், இணையத்தளங்களூடாக வெளியிடப்பட்ட தகவல்களுக்கமைய 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் எனக் கூறுகிறது.

இதேவேளை- 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் மே மாதம் 31ஆம் திகதிவரையிலான போர் குறித்து இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட உள்ளக ஆய்வறிக்கையில் இறுதிக்கட்ட போரில் 7 ஆயிரத்து 896 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் இவர்களுள் புலிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போர் தொடர்பில் ஐ.நாவினதும், இலங்கையினதும் உத்தியோக பூர்வ தகவல்கள் இருக்கின்றபோதும் உத்தியோகப்பற்றற்ற தகவல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. இவை எமக்குப் பாதகத்தை ஏற்படுத்தும். இலங்கை எதிர்ப்பு நடவடிக்கைகள் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே, எமக்கெதிரான நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

தமிழக முதல்வர் ஜெயலலிதா, தி.மு.க. கருணாநிதி ஆகியோர் இலங்கையில் தனி நாடொன்றை அமைக்கவேண்டும் எனக் கூறுகின்றனர் - என்றார் இராணுவப் பேச்சாளர் வணிகசூரிய.

## தமிழீழம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
யச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சகல கல்லூரிகளிலும் தமது போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில் மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்தே கல்லூரிகளுக்கு சமூகமளித்துள்ளனர்.

பரீட்சைகள் மே மாதம் முடிவுற்ற பின்னர் மீளவும் பேரெழுச்சியுடன் மாணவர் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று தமிழக மாணவர் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

தனித் தமிழீழம் இலங்கையில் அமையும் வரையில் தமது போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் கூறினர்.

தொடரும் புறக்கணிப்பு

சேலத்தில் மறவநேரி அரச கலைக்கல்லூரி மாணவர்கள், ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு மாற்றமடைய வேண்டுமெனக் கோரியும், மாணவர்கள் மீது தடியடி நடத்திய காங்கிரஸ் கட்சியைக் கண்டித்தும் நேற்றைய தினமும் போராட்டம் நடத்தினர்.

சேலம் ஏற்காடு சாலையில் வீதி மறியலில் ஈடுபட்ட மாணவர்கள் நேற்றைய தினம் கல்லூரிக்குச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## உதயன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
பொல்லுகளைக் கொண்டு காடையர் கும்பல் கண்மூடித்தனமாக இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

யாழ்.நகரில் அமைந்துள்ள 'உதயன்' தலைமையகத்திலிருந்து வன்னிக்கான பத்திரிகை பிரதிகளை எடுத்துக்கொண்டு 'உதயன்' வாகனம் சென்றது. 'ஏ-9' பிரதான வீதியில் கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையிலுள்ள 'உதயன்' அலுவலகத்துக்கு முன்னால் வாகனம் நிறுத்தப்பட்டது.

அதிகாலை 4.50 மணியளவில் குறித்த வாகனத்திலிருந்து பத்திரிகை விநியோக ஊழியர்களால் பத்திரிகைக் கட்டுகள் இறக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

இதன்போது அலுவலகத்துக்கு அருகிலுள்ள சென். திரேசா மகளிர் பாடசாலை ஒழுங்கைக்குள் இருந்து சிங்களத்தில் கூச்சலிட்டபடி திடீரென்று சிலர் ஓடிவந்தனர்.

வந்த வேகத்தில் வெளியில் நின்று பத்திரிகைகளை இறக்கிக் கொண்டிருந்த விநியோகப் பணியாளர்களை கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

அதன் பின்னர் அலுவலகத்தினுள் சென்று அலுவலகத்திலிருந்த முகாமையாளர் ஆறுமுகம் பொன்ராஜா (வயது-66) மீது சரமாரியாகத் தாக்கினர். அவரது உடம்பிலிருந்து இரத்தம் கொட்டியது. வயதைக்கூட கணக்கிலெடுக்காமல் தமது வெறி தீர காடையர்கள் அவர் மீது மீண்டும் மீண்டும் தாக்கினர்.

அத்துடன் அங்கு விநியோகப் பணிக்காக நின்றிருந்த ஊழியர்களையும் கலைத்து கலைத்துத் தாக்கினர்.

மேலும் அலுவலகத்திலிருந்த கணினி பிறிண்டர், 'போட்டோக் கொப்பி' இயந்திரம் உட்பட பெறுமதியான பொருள்களையும் அடித்துச் சேதமாக்கி நாசப்படுத்தினர்.

பின்னர் வெளியில் நிறுத்தப்பட்டிருந்த விநியோக வாகனத்தின் கண்ணாடிகளையும் அடித்து நொறுக்கினர். அங்கிருந்த இரு மோட்டார் சைக்கிள்களையும் அடித்து நொறுக்கிவிட்டு மீண்டும், சென். திரேசா மகளிர் பாடசாலை ஒழுங்கைக்குள்ளால் ஓடித்தப்பி விட்டனர்.

ரீசேட்டும், முக்கால் காற்சட்டையுடனுமே தாக்குதலாளிகள் வந்துள்ளனர். வந்த 7 பேரில் 6 பேர் முகம் தெரியாதவாறு கறுப்புத் துணியால் மூடிக்கட்டியிருந்தனர். இந்தக் காடையர்கள் 20 நிமிடம் வரையில் தங்கி நின்று தாக்குதல் நடத்தினர்.

கிளிநொச்சி 'உதயன்' முகாமையாளர் ஆறுமுகம் பொன்ராஜா (வயது-66), விநியோகப் பணியாளர்களான கிட்டிணன் பிரதீபன் (வயது-28), குப்புசாமி விஸ்வநாதன் (வயது-38), வி.சுகிர்தன் (வயது-29) ஆகியோர் தாக்கப்பட்டனர். பொன்ராஜா தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். பிரதீபன், விஸ்வநாதன் ஆகியோர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறினர். சுகிர்தன் உட்காயங்களுக்கு சிகிச்சை பெற்றார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், ஈ.சரவணபவன் ஆகியோர் தாக்குதல் இடம்பெற்ற இடத்தை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். (உ-5-6-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தென்னிலங்கைத் தலைவர்களிடம் இனியும் ஏமாறலாமா...?

நாட்டில் வாழும் இனங்களிடையே நல்லுறவை உண்டாக்க வேண்டும். அவர்கள் மத்தியில் ஒற்றுமையையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்ப வேண்டும். அதன் பின்னர் அதிகாரப் பகிர்வை நாட்டின் சகல இன மக்களும் ஏற்றுக்கொள்வர். -

இப்போதைய அரசின் நிர்வாகத்தில் சீரழிந்து செல்லும் நாட்டைக் காப்பாற்றுவதற்கு இந்த வழியே உகந்தது. - என்று இராணுவத் தளபதியாகப் பதவி வகித்து அரசியல் வாதியாக மாறியுள்ள சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சி என்ற வகைக்குள் முன்னாள் இராணுவத் தளபதியின் ஜனநாயகக் கட்சியின் சின்னம் "தீப்பந்தம்". 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர் பொன்சேகா. இத்தனைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவரை ஆதரித்து தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தது. ஆனால் அது இன்னமும் சர்ச்சைக்குரிய ஒன்றாகவே தொடர்கிறது.

"தீப்பந்தம்" சின்னத்துக்கு அங்கீகாரம் கிடைத்தது. இறுதிப் போரில் பிரபாகரனைத் தோற்கடித்த வேளை உண்டாகிய மகிழ்ச்சிக்கு ஒப்பானது என்று அவர் கருத்து வெளிப்படுத்தி உள்ளார்.

மாவிலாறில் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பமாகிய நான்காவது ஈழப் போரின்போது, இலங்கை இராணுவத்தின் பிரதம தளபதியாக இருந்து இலங்கைப் படையை வழிநடத்தியவர் பொன்சேகா. வன்னி இறுதிப்போரில் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு இவர் பொறுப்புக் கூற வேண்டியவர். சர்வதேச போர்க்குற்ற விசாரணை இடம் பெறுமானால் அதில் விசாரிக்கப்படும் முக்கிய புள்ளியாகக் கருதப்படுகிறார்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் வன்னி மக்கள் வாக்களிப்பதைத் தடுத்தார் பிரபாகரன். ராஜபக்ஷ ஆட்சிக்கு வர அது உதவியது. விடுதலைப்புலிகள் இழைத்த பெரும் தவறாக அது இன்னும் கருதப்படுகிறது. அதனைவிட மோசமான தவறே 2010 தேர்தலில் கூட்டமைப்பு எடுத்த முடிவு. தமிழரை அழித்தவரையே தமிழர் ஆதரித்தனர் என்ற கறுப்புப் புள்ளி கரைவதற்கு இன்னும் பல ஆண்டுகள் செல்லும்.

கூட்டமைப்பின் நிலைப்பாடு காரணமாக 2010 ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் தமிழ் மக்கள் செறிந்துவாழும் கொழும்பிலும் கூடுதல் வாக்குகளைப் பெற்றார் பொன்சேகா. ஆனால், அவரிடம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு எதுவும் கிடையாது. இதுவரை அவர் தீர்வு குறித்து வாய்திறக்கவில்லை. தமிழ் மக்களின் துயரங்களுக்கு எதிராக குரல் கொடுக்கவில்லை.

ராஜபக்ஷ அரசு எவ்வாறு முற்றுமுழுதாக சிங்கள வாக்கு வங்கியில் தங்கியுள்ளதோ அதே வழியையே பொன்சேகா பின்பற்றுவது உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிகிறது.

பொன்சேகா தெரிவித்துள்ளது போன்று நாடு இன்று இருளில் இருப்பது உண்மையே. நாட்டில் ஜனநாயகம் இல்லை. நீதி நியாயம் இல்லை. சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள் கூட ஏறெடுத்தும் பார்க்கப்படுவதில்லை. இனங்களிடையே நல்லிணக்கம் சீர்குலைந்து வருகிறது. பொருளாதாரம் பின்னடைந்து வருகிறது.

இவற்றுக்கு முடிவு காணப்பட வேண்டுமாயின் பலம் வாய்ந்த ஓர் எதிர்க்கட்சி வேண்டும். அது தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவையும் பெறக்கூடியதாக இருக்க வேண்டும். பிரபாகரனைத் தோற்கடித்த மகிழ்ச்சியை "தீப்பந்தம்" சின்னத்துடன் ஒப்பிடும் ஜனநாயகக் கட்சியினால் இதனைச் சாதிக்க முடியுமா?

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அதிகாரப் பரவலாக்கல் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பொன்சேகா பதிலளிக்கையில், அதிகாரப் பகிர்வு என்பது அவசரமாகச் செய்யக்கூடியது அல்ல. அதற்கு நீண்டகாலம் செல்லும் என்று கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் மூலம் வென்றெடுப்பது என்பது எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடும் நிலையையே தோற்றுவிக்கும்.

உள்நாட்டுத் தலைவர்களின் நல்லெண்ணத்துடன் தமிழர்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கலாம் என்ற காட்சிகளும் காலத்துக்குக்காலம் சிதைந்து போய் விட்டன.

இனிமேல் அனைத்துலக அரசுகளின் உதவிகளை நாட வேண்டிய தேவையே உருவாகி வருகிறது. அப்போதும் அவற்றின் வலைப்பின்னலுக்குள் அகப்படாமல் இருப்பதில் எச்சரிக்கை மிகவும் அவசியம்.

# சாதாரணதர மாணவர்களுக்கு விரைவில் அடையாள அட்டைகள்

## சிரமம் இன்றி விநியோகிக்க ஆள்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 4

இந்த ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சிரமமின்றி தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை ஆள்பதிவுத் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக 16 வயதைப் பூர்த்தி செய்யும் அனைத்துப் பாடசாலை விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களும் அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக ஆள்பதிவு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை உறுதிப்படுத்தும் போது ஒளிப் படங்களை ஊடறுத்துச் செல்லும் வகையில் கையொப்பமும் பதவி முத்திரையும் இடப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களுடன் மேலதிக ஒளிப் படங்கள் இரண்டு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப் பிரதி மற்றும் ஒளிப்படப் பிரதி என்பன இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் மூன்று ரூபாய் பெறுமதியான முத்திரை விண்ணப்பத்தில் ஒட்டப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தில் ஏதாவது குறைபாடு ஏற்படுமிடத்து அது தொடர்பான விசாரணைக்காக அனைத்து விண்ணப்பங்களின் மேற்பகுதியில் பாடசாலையின் அல்லது சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடவேண்டும்.

இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதியின் பின்னர் 16 வயதைப் பூர்த்தி செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் தபால் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய அறிவுறுத்தல்கள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இருப்பினும் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகளையும் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பப் படிவங்களை ஆள்பதிவுத் திணைக்களத்தில் அல்லது அண்மையில் உள்ள பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

200 இற்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகளைக் கொண்ட பாடசாலைகளுக்கு நேரடியாக சமுகமளித்து நடமாடும் சேவையின் ஊடாக விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளையும் ஆள்பதிவுத் திணைக்களம் மேற்கொள்ளும்.

இது தொடர்பாக ஏற்பாடுகளை செய்து கொள்ள விரும்புபவர்கள் அலுவலக தொலைபேசி இலக்கமான 0112555618 அல்லது த.குகதாஸ் 0773532047, கீத்சிறி ஏக்கநாயக்க 0718029183 ஆகிய இலக்கங்கள் ஊடாகத் தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-5)

## வாள்வெட்டுக்கு ஆளான மானிப்பாய் ஓட்டோ சாரதி

யாழ்ப்பாணம், ஏப். 4

மானிப்பாயில் ஓட்டோ சாரதி மீது வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது. அதனால் கையில் இரண்டு விரல்கள் துண்டாடப்பட்ட நிலையில் அவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் மானிப்பாய் அந்தோனியார் கோயிலை அண்மித்த பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

சம்பவத்தில் நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த நடராசா சசிகரன் (வயது-27) என்பவரே கைவிரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

" நானும் எனது மூத்த சகோதரரும் அந்த இடத்தில் ஓட்டோ சாரதிகளாக இருந்து வருகின்றோம். அதே இடத்தைச் சேர்ந்த சிலர் சகோதரனுடன் நேற்று முற்பகல் முரண்பட்டனர். பின்னர் சுமார் 15 பேர் கொண்ட குழுவினர் அவரைத் தாக்கினர். அவர் தப்பியோடினார்.

இந்த நிலையில் அந்த இடத்தில் நின்றிருந்த என்னைத் துரத்தினர். நான் தப்பி ஓடிய போதும் துரத்தி வந்து வாளால் வெட்டினர். நான் விழுந்து விட்டேன். அவர்கள் இரண்டு கைகளிலும் காலிலும் வெட்டியுள்ளனர். கைவிரல்கள் துண்டிக்கப்பட்டன. பின்னர் தலைமறைவாகி விட்டனர்'' என்று காயப்பட்டவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணையை முன்னெடுத்துள்ளதாகவும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்கள் மானிப்பாயில் நீண்ட காலமாக வாள்வெட்டு, அடிதடி என்ற அடாவடியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர்கள் மீது இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

(ம-4)

## ஆண்டு விழாவும் விளையாட்டும்

யாழ்ப்பாணம், ஏப்.4

புங்குடுதீவு சில்லைப்பிட்டி சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு விழாவும் 31 ஆவது விளையாட்டு விழாவும் அம்பிகை விளையாட்டுக் கழகத்தின் 10 ஆவது விளையாட்டு விழாவும எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் 14 ஆம் திகதி புதுவருட தினத்தன்றும் நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான 35 மைல் சைக்கிள் ஓட்டம், 10 மைல் மரதன் ஓட்டப் போட்டி, பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, சிறுவர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கான போட்டிகள், சில்லைப்பிட்டி சனசமூக நிலைய முன் பள்ளி மாணவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் என்பன இடம் பெறவுள்ளன. (ம-7)

## தீவகத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அபிவிருத்திக்கு நிதி

யாழ்ப்பாணம், ஏப். 4

ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் தீவகத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு தலா 5 இலட்சம் ரூபா வீதம் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம், ஸ்ரீஸ்கந்த வித்தியாலயம், காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை, மெய்கண்டான் வித்தியாலயம், வீரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம், வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், மண்டைதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம், வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, செட்டிபுலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மண்டைதீவு றோ.க.தமிழ் கலவன் பாடசாலை, அல்லைப்பிட்டி றோ.க.தமிழ் கலவன் பாடசாலை, ஊர்காவற்றுறை றோ.க. ஆண்கள் கல்லூரி, மெலிஞ்சிமுனை றோ.க. தமிழ் கலவன் பாடசாலை, சரவணை சின்னமடு றோ.க.த.க. பாடசாலை, சுருவில் றோ.க.த.க. பாடசாலை, பருத்தியடைப்பு கதிரேசானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூபா 5 லட்சம் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை வேலைகள் ஆரம்பமாகும் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோண் குயின்ரஸ் தெரிவித்தார்.

அனைத்துப் பாடசாலைகளிலும் சுற்றுமதில் அமைக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது. (ம-7)

## நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

தென்மராட்சி, ஏப். 04

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி, நாவற்குழி ஆகிய உப அலுவலக பிரிவுக்குட்பட்ட வியாபார வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தும் அளத்தல், நிறுத்தல் உபகரணங்களுக்கான முத்திரையிடும் பணிகள் இன்றும் நாளையும் கைதடி உப அலுவலகத்தில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் அலுவலகத்தில் முத்திரையிடும் பணிகள் இடம்பெற்ற வேளையில் சந்தர்ப்பத்தைத் தவறவிட்ட வர்த்தகர்கள், வியாபாரிகள் தமது கருவிகளை முத்திரையிட்டுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

## நயினை. பிரதேச ஆஸ்பத்திரியில் வெள்ளி பற்சிகிச்சை

யாழ்ப்பாணம், ஏப்.

நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நயினாதீவு பிரதேச வைத்தியசாலையில் பற்சிகிச்சை நடத்தப்படவுள்ளது. மக்கள் இந்தச் சேவை மூலம் பயன் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் படையினர் மீது வழக்குத் தொடர வேண்டும்

## மத்திய அரசை வலியுறுத்துமாறு மீனவர்கள் உயர்நீதிமன்றில் மனு

டெல்லி, ஏப்.4

இலங்கைக் கடற்படையினர் மீது இந்திய மத்திய அரசு வழக்குத் தொடர வேண்டும் என்று உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மீனவர்கள் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

காரைக்காலைச் சேர்ந்த 3 மீனவர்களே இவ்வாறு மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் இந்திய கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து தம்மீது தாக்குதல் நடத்துவதாக மனுவில் குறிப்பிட்டுள்ள மீனவர்கள், இந்திய மத்திய அரசு இதுகுறித்து கவனமெடுக்காது செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை பல முறை தாக்கியுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ள அவர்கள் கேரள மீனவர் மீது இத்தாலி கடற்படை வீரர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக மத்திய அரசு நடந்துகொள்ளும் முறையையும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய இத்தாலி கடற்படை வீரர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை போன்று, இலங்கைக் கடற்படையினர் மீதும் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். அதற்கான உத்தரவை உச்சநீதிமன்றம் வழங்க வேண்டும் என்று மீனவர்கள் தமது மனுவில் வலியுறுத்தியுள்ளனர். இந்த மனு விரைவில் விசாரணக்கு எடுத்துக் கொள்ளப்படும். (ற)

## பதுங்குகிறது காங்கிரஸ்

சென்னை, ஏப்.4

தொடரும் காங்கிரஸ் கட்சி எதிர்ப்பு அலையால் தமிழகத்தில் நடைபெறவிருந்த அந்தக் கட்சியின் முக்கிய கூட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் காங்கிரஸ் கட்சியினருக்கும் மாணவர்களுக்கும் இடையேஇடம் பெற்ற மோதல் சம்பவங்களை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் தற்போது காங்கிரஸ் கட்சியின் மீது கடும் ஆத்திரத்தில் உள்ளனர். இந்தநிலையில் காங்கிரஸ் கட்சி கூட்டங்களை நடத்துமானால் மாணர்கள் எப்படியும் போராட்டங்களில் ஈடுபடுவார்கள். அதனால் பிரச்சினைகள் மேலும் தீவிரமடையலாம்.

எனவே கல்லூரிகள் திறக்கப்பட்டு, மாணவர்களுக்கான பரீட்சைகள் ஆரம்பமான பின்னர் கூட்டங்களை நடத்தலாம் என்று காங்கிரஸ் கட்சியின் தமிழக முக்கிய தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

நாளையும் எதிர்வரும் 6ஆம் திகதியும் நடைபெறவிருந்த காங்கிரஸ் கட்சியின் கூட்டங்களே பிற்போடப்பட்டுள்ளன என்பதை காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் உறுதிப்படுத்தினார். (ற)

## கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம்

சென்னை, ஏப்.4

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அணுமின் நிலைய ஊழியர் குடியிருப்பை பொது மக்கள் கடல் வழியாக நேற்று முற்றுகையிட்டனர். சுமார் 100 படகுகளில் திரண்ட மக்களால் அந்தப் பகுதி பெரும் பரபரப்பானது.

கூடங்குளம் அணுமின் நிலையம் மின்னுற்பத்திக்கு ஆயத்தமான நிலையில், முதலாவது அணு உலையில் கடந்த சில நாள்களாக வெப்ப நீர் ஓட்ட சோதனை நடந்தது. அணு உலையை குளிர்விக்கும் அடிப்படையில் சோதனை நடத்தப்பட்டன. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே அணுமின் நிலைய அலுவ லர்கள், ஊழியர்கள் குடியிருக்கும் குடியிருப்பை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர்.

நேற்றுக் காலை கடல் வழியாக சுமார் 100 படகுகளுடன் போராட்டக்குழுவினர் குடியிருப்பை முற்றுகையிட்டனர்.

அதையடுத்து அங்கு ஆயிரக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. (ற)

## ஜெயலலிதாவை அவதூறாக பேசினாராம்

## திண்டுக்கல் லியோனிக்கு நீதிமன்று அழைப்பாணை

சென்னை, ஏப்.4

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசினார்கள் என்று தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக தி.மு.க. பேச்சாளர்களான திண்டுக்கல் லியோனி மற்றும் இருவருக்கு திருப்பூர் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் திருப்பூர்பாண்டியன் நகரில் நடந்த தி.மு.க. முப்பெரும் விழா நிகழ்ச்சியில் நடந்த பட்டிமன்றத்தில் முதல்வர் ஜெயலலிதாவை அவதூறாகவும், அவரது பொது வாழ்க்கைக்கு களங்கம் விளைவிக்கும் வகையிலும் பேசினார்கள் என்று தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாகவே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த வழக்குத் தொடர்பாக நேற்று நடைபெற்ற விசாரணைகளின் முடிவில் திண்டுக்கல் லியோனி மற்றும் இருவர் எதிர்வரும் 22ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகி விளக்கம் அளிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ற)

## பாலியல் குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள்

### புதிய சட்டத்துக்கு ஒப்புதலளித்தார் இந்திய ஜனாதிபதி பிரணாப்

புதுடில்லி, ஏப்.4

பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடுவோருக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கும் சட்டத்திருத்தத்துக்கு ஒப்புதல் வழங்கி இந்திய ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளார்.

இந்தச் சட்டத்தின் மூலம், தனியாகவோ அல்லது குழுவாகவோ பாலியல் வன்புணர்வில் ஈடுபடுவது போன்ற குற்றங்களுக்கு குறைந்தபட்சம் 20 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும். அதே வேளை, ஒரே நபர் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை பாலியல் சார்ந்த குற்றங்களில் ஈடுபட்டால் அவருக்கு தூக்கு தண்டனை விதிப்பதற்கும் இந்தச் சட்டம் வழி ஏற்படுத்துகின்றது. அதேவேளை, முதல் முறையாக பெண்கள் மீது திராவகம் (அசிட்) வீசுவதும் பாலியல் குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ளது. திராவகம் வீசுவோரை எதிர்த்து, பெண்கள் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் அது தற்காப்பாகவே கருதப்படும். குற்றவாளிகளுக்கு குறைந்தபட்சம், 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் புதிய சட்டம் குறிப்பிடுகிறது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் டெல்லியில் மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்ததை அடுத்து பாலியல் குற்றங்களை மேற்கொள்பவர்களுக்கான தண்டனையை கடுமையாக்க வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு தரப்பினரிடம் இருந்து வெளியாகியிருந்தது. அதன் பின்னணியிலேயே புதிய சட்டம் ஜனாதிபதியால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.(ற)

## பொதுநலவாய மாநாட்டை வேறிடம் மாற்ற வேண்டும்

### இந்தியப் பிரதமர் மன்மோகனை வலியுறுத்துகிறார் ஜி.கே.வாசன்

டெல்லி, ஏப்.4

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இடம் மாற்ற வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்தியுள்ளார் கப்பல்துறைப் போக்குவரத்து அமைச்சர் ஜி.கே.வாசன்.

கடந்த செவ்வாய்க் கிழமை பிரதமரை டெல்லியில் சந்தித்துப் பேசும் போதே ஜி.கே.வாசன் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். அரை மணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழர்கள் பற்றியும், சிறையில் வாடும் தமிழக மீனவர்களை மீட்பது குறித்தும் அதிகம் பேசப்பட்டது.

இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட ஜி.கே.வாசன்,

''இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வதில் தமிழக மக்களுக்கு விருப்பம் இல்லை என்பதைப் பிரதமரிடம் எடுத்து விளக்கினேன். இந்த விடயத்தில் பிரதமர் நல்ல முடிவை எடுப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்குதலுக்கு ஆளாவதும், கைது செய்யப்படுவதும் தொடர்கதையாகி விட்டது. இந்த விடயத்தில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தைம் வலியுறுத்தினேன். இந்தப் பிரச்சினைகள் குறித்து இலங்கைக்கு வலுவான நெருக்கடிகள் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். தான் இதுகுறித்து வெளிவிவகார அமைச்சருடன் பேசி முடிவெடுப்பார் என்று பிரதமர் உறுதியளித்தார்''- என்றார். (ற)

### ஈழத் தமிழருக்காகப் பிரார்த்திக்கின்றேன்

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற திரையுலக உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ள முடியாததையிட்டு வருத்தம் தெரிவித்துள்ள நடிகர் விஜய், 'திரையுகத்தினர் உண்ணாவிரதம் நடத் துவதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். நான் நாட்டில் இல்லாமையால் கலந்து கொள்ள முடியவில்லை. ஈழத்தமிழர்களுக்கு விடியல் பிறக்க வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

## பொலிஸார் தாக்கியதில் மாணவர் தலைவர் சாவு

### நெருக்கடியில் மம்தா அரசு

கொல்கத்தா, ஏப்.4

கொல்கத்தாவில் பொலிஸ் காவலில் இருந்த சி.பி.எம். மாணவ அமைப்பின் தலைவர் குப்தா மர்மமான முறையில் உயிரிழந்தார். அதையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜியின் அரசுக்கு எதிராக மாணவ அமைப்பினர் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர். மம்தா பானர்ஜியின் அரசு தொடர்ந்து கல்லூரி தேர்தல் குறித்து முடிவெடுக்க காலம் தாழ்த்தி வருகிறது என்று தெரிவித்தே மாணவர்கள் போராட்டம் நடத்தினர். அப்போது அவர்களைப் பொலிஸார் கைது செய்து சிறைக்குக் கொண்டு செல்ல பஸ்ஸில் ஏற்றியுள்ளனர். அப்போது குப்தா காயம் அடைந்தார். அவர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் சிகிச்சைகளுக்கு முன்னரே உயிரிழந்தார்.

அதையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. ''நாங்கள் அமைதியாக போராட்டம் நடத்தினோம். அப்போது பஸ்ஸில் குப்தாவை ஏற்றிய பொலிஸார், அவரை கம்பால் கடுமையாக தாக்கினர்'' என்று கூறுகின்றனர் மாணவர்கள்.

குப்தா உயிரிழந்தமை தொடர்பில் மம்தா அரசு கடும் கண்டனங்களை எதிர்கொண்டு வருகின்றது.(ற)

**சிறுநீரகம் தேவை**

B பொசிட்டிவ் உள்ள சிறுநீரகம் தேவை.

தொடர்பு: 0770641264 (35636)(6.8.7)

**கணக்கீடு**

பரீட்சையில் சித்தியடைய சிறந்த வழிகாட்டி மேலதிக விளக்கங்களுடன்

Past Paper பயிற்சி.

G.Janagan

0776169470

புதிய பிரிவு

**தவறிவிட்டது**

தேவதாஸ் அனுரன் (901443009V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன கச்சேரி நல்லூர் வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு:- 077 4718300

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம்
01-08-1957



மறைவு
16-03-2012

அமரர்

**செல்லத்துரை சிவஞானம்**

சொல்லாமல் சென்ற இடம்தான் எங்கே?
எல்லையில்லா அன்பைத் தந்துவிட்டு
எல்லை கடந்து சென்றதெங்கே
அப்பா உங்கள் பிரிவு
எங்களை வாட்டுகின்றது
ஆறவில்லை எங்களுக்கு
உங்கள் பிரிவுத்துயர்

கெற்றப்போல் சந்தி, கட்டுவன்.
தொ.பே.இல-0778313586 (35635)(6.6.7)

குடும்பத்தினர்.

**பெற்றோர்களே!**

பள்ளி விடுமுறை காலத்தில் பாலகர்களின் பொழுது பயனுள்ள வகையில் அமைய வாங்கிச் செல்லுங்கள்

"எழுதி மகிழ்வோம்"

எழுத்துப் பயிற்சிக் கைபேடு

(பாலர் பாடசாலைப் பிள்ளைகள் தரம் 1,2 மாணவர்களுக்கு ஏற்றது)

கிடைக்கும் இடங்கள்:

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

லக்கி பன்ஸி கவுஸ், இருபாலை.

மேலதிக விபரங்களுக்கு:

[illegible] நிலை வலயக் கல்விப் பணிப்பாளர். 077 434 3207 (c/8079)(6.7.11)

**தவறிவிட்டது**

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பிரதீபா கணேசலிங்கம் என்பவருடைய தே.அ. அட்டை (806181978V) தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(35632)(5-6-7) தொடர்பு: 075 042 3374

**உடன் விற்பனைக்கு**

GZ-xxxx தொடர் இலக்கமுடைய CD125 T Benly மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

(35633)(5-6-7) தொடர்பு: 075 0407158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைகிறது அமெ. போர்க்கப்பல்

## வடகொரியாவின் நடவடிக்கைகளை துல்லியமாகக் கண்காணிக்க

வொஷிங்டன், ஏப்.4

கொரிய தீபகற்பத்தில் எந்நேரமும் போர் வெடிக்கக் கூடிய சூழ்நிலையில் வட கொரியாவின் நடவடிக்கை களைத் துல்லியமாககக் கண் காணிக்கும் பொருட்டு அதி நவீன ரோடார் கருவிகள் பொருத் தப்பட்ட அமெரிக்கப் போர்க் கப்பல் கொரிய தீபகற்ப கடல் பகுதிக்கு விரைந்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவத் தலைமையக மாக பென்டகனின் செய்தித் தொடர்பாளர் ஜோர்ச் லிட்டில் தெரிவிக்கையில்,

"உலக நாடுகளின் எதிர்ப்பு களை அசட்டை செய்து வட கொரியா தொடர்ந்தும் தன் னிச்சையாக செயல்பட்டு வருகிறது. தென் கொரியா- அமெரிக்கா இடையேயான ராணுவக் கூட்டு பயிற்சி ஒத்திகை இயல்பானதுதான். இது ஒரு தற்காப்பு முயற்சி என்று கூட எடுத்துக்கொள்ள லாம். அதனைத் தவறு என்று யாரும் கூறமுடியாது.

எனினும் வடகொரியா தென்கொரியா மீது தொடர்ச்சி யான அச்சுறுத்தல்களை விடுத்து வருகிறது. தென் கொரியா அமெரிக்காவின் நட்பு நாடு என்ற ரீதியில் அதனை நாம் பாதுகாப்போம். வட கொரியாவின் தொடர்ச் சியான அச்சுறுத்தலால் கொரிய தீபகற்ப கடல் பகுதியில் வட கொரியாவுக்கு அருகில் நிலைநிறுத்த அமெரிக்க போர்க்கப்பல் விரைந்துள் ளது. இவற்றின் மூலம் வட கொரியாவின் ராணுவ நட வடிக்கைகள் கண்காணிக் கப்படும். பதற்றம் நிலவும் பகுதியில் 28 ஆயிரத்து 500 அமெரிக்கப் படையினர் குவிக் கப்பட்டுள்ளனர். எங்களுடன் ஜப்பான் உள்ளிட்ட பல நட்பு நாடுகளும் கைகோர்த்துள்ளன.

வட கொரியா விடயத்தில் நாங்கள் தவறான பாதையைத் தேர்ந்தெடுக்க விரும்ப வில்லை. நாங்கள் அமைதியைத் தான் விரும்புகிறோம்-என் றார். (ற)

# வர்த்தகப் பாதிப்புக்கு இந்தியாவே காரணம்

## அமெரிக்கா குற்றச்சாட்டு

நியூயோர்க், ஏப்.4

இந்தியாவுடனான வர்த்த உறவுகள் பாதிக்கப்படுவ தற்கு அங்குள்ள சிக்கலான நடைமுறைகள்தான் காரணம் என்று கூறியுள்ளது அமெரிக்கா.

'2013ஆம் ஆண்டுக்கான தேசிய வர்த்தக மதிப்பீடு - அயல் நாட்டு வாணிபத் தடை கள்' என்ற அறிக்கையை அந்த நாட்டு வர்த்தக அமைப்பு வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளதாவது:-

"இந்தியாவுக்குப் பொருள் களை ஏற்றுமதி செய்வதில் அமெரிக்க வர்த்தகர்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். அதேபோல இந்தியாவில் முதலீடு செய்து தொழில் நடத்துவதில் அமெரிக்க நிறு வனங்கள் பல்வேறு பிரச் சினைகளை எதிர் கொண்டு வருகின்றன.

எனினும் தாராளமயமாக் கல் நடவடிக்கைகளில் பன் னாட்டு நிறுவனங்களை இந்தியா வரவேற்கிறது. இந் தியாவில் தாராளமயமாக்கல் தொடர்ந்தாலும், வர்த்தக விடயத்தில் அமெரிக்க ஏற் றுமதியாளர்கள், இந்தியாவில் வரி சார்ந்த, வரி சாராத பல் வேறு தடைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. -என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற)

# பாகிஸ்தான் இடைக்கால அமைச்சரவை அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஏப்.4

பாகிஸ்தானில் 15 பேர் கொண்ட அமைச்சரவையை இடைக்கால பிரதமர் மீர் ஹசார்கான் கோசோ அறிவித் துள்ளார்.

பாகிஸ்தானில் வரும் மே 11ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. இந்தநிலை யில் கடந்த மார்ச் 25ஆம் திகதி நாட்டின் இடைக்காலப் பிரதமராக ஓய்வு பெற்ற நீதி பதி கோசோ பொறுப்பேற் றுக் கொண்டார்.

இடைக்கால அமைச் சரவையை உருவாக்குவது தொடர்பாக அரசியல் தலை வர்கள், உள்பட அனைத்து தரப்பினரிடமும் ஆலோசனை களை மேற்கொண்டு வந்த கோசோ, தற்போது 15 பேர் கொண்ட அமைச்சரவையை அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட அனைவருக்கும் ஜனாதிபதி சர்தாரி பதவிப் பிரமாணம் செய்து வைப்பார் என்று தெரி விக்கப்படுகிறது. (ற)

# வெற்று ஆரவாரம் போருக்கே வழிவகுக்கும்

## கொரிய தீபகற்பத்தில் அமைதி ஏற்பட உதவுவதற்குத் தயார் என்கிறார் மூன்

நியூயோர்க், ஏப்.4

வெற்று ஆரவாரமும், இராணுவ முனைப்புகளும் போரை நோக்கியே வழிநடத் தும். கொரிய தீபகற்பத்தில் தற் போது ஏற்பட்டுள்ள நெருக் கடி நிலைமை மாற்றியமைக் கும் முயற்சிகளில் உதவ ஐ.நா. தயாராக இருக்கின்றது- என்று தெரிவித்துள்ளார் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன்.

ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன் தற்போது ஐரோப்பிய நாடான அந் தோராவுக்குப் பயணம் மேற் கொண்டுள்ளார். அங்கு வைத் துக் கொரிய விவகாரம் தொடர் பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

"வடகொரியப் பிரச் சினை மிகவும் தீவிரமான நிலைக்குப் போய் விட்டது. அணு ஆயுத அச்சுறுத்தல் என்பது புதிதான ஒன்றல்ல. தீவிர வெற்று ஆரவாரமும், இராணுவ நடவடிக்கைகளும் போரை நோக்கியே வழிநடத் தும். அச்சத்தையும், நிலை யற்ற தன்மையையும் ஏற்படுத் தும். தகவல் தொடர்பு பற்றாக் குறையால்தான் இது ஏற்பட் டது. இந்தப் பிரச்சினைக்கு இரு தரப்பும் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண வேண் டும். அதற்கு உதவ ஐ.நா. தயா ராக உள்ளது"- என்று தெரி வித்தார். (ற)

# நஷீட் மீதான விசாரணைக்கு இடைக்காலத் தடை விதிப்பு

மாலே, ஏப்.4

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி நசீட், நீதிபதியை கைது செய்ய சட்டவிரோத மாக உத்தரவு பிறப்பித்தமை தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு மீதான விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித் துள்ளது அந்தநாட்டு உயர் நீதிமன்றம்.

இந்த வழக்கில் கடந்த மாதம் 5ஆம் திகதி நசீத் கைது செய்யப்பட்டார். பின் னர் அடுத்தநாள் நீதிமன் றத்தில் முன்னிலைப்படுத் தப்பட்டு விடுவிக்கப்பட்டார். இந்தநிலையில் தற்போது நசீத் மீதான வழக்கு விசா ரணைக்கு அந்த நாட்டு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து நேற்று உத் தரவிட்டது. (ற)

# கட்டார் மன்னரை சந்தித்திார் கர்சாய்

டோகா, ஏப்.4

ஆப்கன் ஜனாதிபதி ஹமீட் கர்சாய், கட்டார் மன்னர் ஷேக் ஹமாட் பின் கலிபான் அல் தானியை சந்தித்துக் கலந்து ரையாடியுள்ளார்.

இருநாட்டின் பரஸ்பர நலன்கள் குறித்து இந்த கலந்துரையாடலில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலிபான்களின் அலுவ லகத்தை கட்டாரில் திறப்பது குறித்தும் இந்த கலந்துரை யாடலில் கவனம் செலுத்தப்பட் டது. ஆப்கன் அரசுக்கும் தலி பான்களுக்கும் இடையில் பேச் சுக்களை முன்னெடுப்பதற் கான நகர்வாக இந்த அலுவலக திறப்பு கருதப்படுகின்றது.

அமெரிக்க தலைமையி லான வெளிநாட்டு படையி னர் 2014 ஆம் ஆண்டிற்கான ஆப்கனில் இருந்து வெளி யேறவுள்ள நிலையில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

ஹமிட் கர்சாய் அமெரிக்கா வின் கை பொம்மை என தலி பான்கள் குற்றஞ்சாடியுள்ள போதும், ஆப்கன் அரசுடன் பேச்சு நடத்துவதை அவர்கள் நிராகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



இஸ்ரேல் சிறையில் பலஸ்தீன கைதி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்ததை அடுத்து ஜெருசலேம் நகரில் பயங்கர வன்முறை வெடித்துள்ளது. பலஸ்தீனத்தின் ஜெருசலேம், காஸா போன்ற பல்வேறு பகுதிகளில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டங்களின்போது வன்முறை வெடித்துள்ளதால் போராட்டக்காரர்களை கைது செய்யும் நடவடிக்கைகளில் இஸ்ரேல் இராணுவம் ஈடுபட்டுள்ளது. வன்முறை சம்பவங்களால் ஜெருசலேம் வீதிகள் போர்க்களம் போல் காட்சி அளிக்கின்றன. இஸ்ரேல் எல்லையில் உள்ள சிறைகளில் சுமார் 5 ஆயிரம் பலஸ்தீன அரசியல் கைதிகள் அடைக் கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# காசா நோக்கி இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல்

ஜெருசலேம், ஏப்.4

காசா நோக்கி இஷ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி யுள்ளது என்று கூறப்படுகி றது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் எகிப்தின் மத்தி யஸ்த்தின் கீழ் சமாதான உடன் படிக்கை நடைமுறையில் உள்ளபோது இந்தத் தாக்கு தல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று காசா பகுதியில் இருந்து தகவல்கள் வெளியாகியுள் ளன. கடந்தவாரம் காசா போராளிகளால் இஸ்ரேல் நோக்கி ஏவுகணை தாக்கு தல் ஒன்று நடத்தப்பட்டது என்று இஸ்ரேல் தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கை ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றம்

## 154 நாடுகள் ஆதரவு; 3 நாடுகள் எதிர்ப்பு

ஜெனிவா, ஏப்.4

சர்வதேச ஆயுத வர்த் தகத்தைக் கட்டுப்படுத்து வது தொடர்பான உடன் படிக்கை ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் அதிக பெரும்பான்மையுடன் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கைக்கு ஆதரவாக 154 நாடுகளும், எதி ராக 3 நாடுகளும் வாக்களித் துள்ளதுடன், 23 நாடுகள் வாக் கெடுப்பில் பங்குபற்ற வில்லை என தெரிவிக்கப்பட் டுள்ளது.

சிரியா, ஈரான் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து இந்த உடன் படிக்கைக்கு எதிராக வாக் களித்துள்ளன. ரஷ்யா, மற் றும் சீனா போன்ற உலகில் [illegible] கலந்துகொள்ளவில்லை.

இந்த உடன்படிக்கையின் படி, ஆயுத வன்முறைகள், இனப்படுகொலைகளுக்கு ஆயுதங்கள் பயன்படுத்தல், மனிதாபிமானத்திற்கு எதி ரான குற்றங்கள், யுத்த குற் றங்கள் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகள் இடம்பெறும் நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வது முற்று முழுதாகத் தடைசெய்யப்பட வுள்ளது.

கறுப்புச் சந்தைகளில் ஆயுதங்கள் பரிமாற்றப்படு கின்றமையும் இந்த உடன் படிக்கை மூலம் கட்டுப்படுத் தப்படும் என கூறப்படுகின் றது.

உலகில் வருடாந்தம் 70 பில்லியன் அமெரிக்க டொலர் கள் பெறுமதியான ஆயுத வர்த்தகம் இடம்பெறுகின்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ற)

# ஐரோப்பிய வலயத்தில் வேலை வாய்ப்பில்லை

நியூயோர்க், ஏப்.4

ஐரோப்பிய வலயத்தின் வேலைவாய்ப்பற்றோர் வீதம் அதியுயர் மட்டத்தை அடைந் துள்ளது என்று புள்ளிவிவரங் கள் குறிப்பிடுகின்றன.

கடந்த மாதம் ஐரோப்பிய வலயத்தின் 17 உறுப்பு நாடு களில் வேலைவாய்ப்பற்றோர் எண்ணிக்கை 33 ஆயிரத் துக்கு மேல் அதிகரித்துள்ள தாக உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இதன் மூலம் வேலை வாய்ப்பற்றோர் எண்ணிக்கை 12 வீதத்தால் உயர்வடைந்து 17.07 மில்லியனாக அதிகரித் துள்ளது என்று கூறப்படுகி றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்தி பொதுக் கூட்டம்

வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்க பொதுக் கூட்டம் இன்று வியாழக் கிழமை பி.ப.2.30க்கு கல்லூரியின் அதிபர் வே.இந்திரன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவுகளும் பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமான பல்வேறு முன்னேற்பாட்டுத் திட்டமிடல்களும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அதிபர் அறிவித்துள்ளார்.

(ஐ-402)

# பூநகரி – வன்னேரி குறும்பாதையை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

அக்கராயன், ஏப். 4

பூநகரியின் முக்கொம்பனில் இருந்து உப்புவில்; குஞ்சுக்குளம் கிராமங்கள் வழியாக வன்னேரிக்குளம் செல்லும் 4 கிலோ மீற்றர் தூர வீதியைப் புனரமைத்துத் தரும்படி வன்னேரிக்குளம் மக்கள் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வன்னேரிக்குளம் மக்கள் பூநகரிக்குச் செல்வதற்கான கிட்டிய பாதையாக இது உள்ளது.

போர்க் காலத்துக்கு முன்னர் வன்னேரி மக்கள் முக்கொம்பன் வழியாக இலகுவாகச் சென்று வந்தனர்.

தற்போது இந்தப் பாதை காடு வளர்ந்து காணப்படுகிறது. முக்கொம்பன் வன்னேரிக்குளம் வீதி புனரமைக்கப்பட்டு பஸ் சேவைகள் நடைபெறுமானால் வன்னேரிக் குளம் மகாவித்தியாலயத்துக்கு வருகை தரும் ஆசிரியர்கள் உட்பட பெருமக்களின் போக்குவரத்து இலகுவாகும் என பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த வீதி புனரமைக்கப் படாமையால் மக்கள் நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக் குளம் குடியேற்றத் திட்டம் முன்பு பூநகரி பிரதேச செயலர் பிரிவுடன் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-18)

# வன்னேரிக்குளத்தில் குடிதண்ணீர் திட்டம்

அக்கராயன், ஏப். 4

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் குடிதண்ணீர் திட்டமொன்று நடை முறைப் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனைவிழுந்தான் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் கூட்டம் ஒன்று அண்மையில் ஆனைவிழுந்தானில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் போதே குறித்த திட்டம் விரைவில் நடைமுறைப் படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.


வன்னேரிக்குளம் பிள்ளையார் ஆலயத்துக்கும் முருகன் ஆலயத்துக்கும் இடைப்பட்ட பாமடிக் கிணற்றிலிருந்து வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் மற்றும் குஞ்சுக்குளம் ஆகிய பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் செயற்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. வன்னேரிக்குளத்தின் அயல் கிராமங்கள் உவராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-18)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளையை 'ஸ்கான்' செய்தால் இனி குற்றவாளி சிக்குவார்



### ஆய்வில் அதிர்ச்சியூட்டும் தகவல்

கொழும்பு,ஏப்.4

ஒரு குற்றவாளி மீண்டும் குற்றமிழைக்க வாய்ப்பு உள்ளதா? இல்லையா? என்பதை அவரது மூளையை 'ஸ்கான்' செய்வதன் மூலம் கண்டறிய முடியும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோ மாகாணத்தில் அமைந்துள்ள மைண்ட் ரிசேர்ச் நெற்வொர்க்கில் நடத்தப்பட்ட ஆய்வுகள், மூளையின் குறிப்பிட்ட பாகத்தினது 'ஸ்கான்' முடிவுகளை ஆராய்வதன் மூலம் ஒருவர் எதிர்காலத்தில் குற்றமிழைக்கக்கூடிய வாய்ப்பு பற்றி புரிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கின்றன.

மூளையின் மேற்பரப்பில் அண்டீரியர் சிங்குலேட் கார்ட்டெக்ஸ் என்ற பகுதி நடத்தை, உணர்வுப் பெருக்கு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதில் பங்காற்றுகிறது.

இந்த ஆய்வில் குற்றங்களைச் செய்தவர்கள், சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் ஆகியவர்களது மூளையில் 'அண்டீரியர் சிங்குலேட் கார்டெக்ஸ்' என்ற குறிப்பிட்ட இந்த பாகத்தில் செயற்பாடுகள் குறைவாக இருந்தால் அவர்கள் மீண்டும் குற்றச்செயலில் ஈடுபட வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது என்று தெரியவந்துள்ளது. (ச)

# செல்வந்தர் – ஏழைகள் இடையே இடைவெளி தற்போதைய ஆட்சியிலேயே அதிகரிப்பு

### சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர



கொழும்பு,ஏப். 4

நாடு சுதந்திரம் அடைந்த தன் பின்னர் தற்போதைய ஆட்சியிலேயே செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையேயான இடைவெளி துரிதமாக அதிகரித்துள்ளதாக சிரேஷ்ட அமைச்சரான டியூ குணசேகர தெரிவிக்கிறார்.

எவர் எத்தகைய கருத்துக்களை வெளிப்படுத்தினாலும் பொருளாதாரக் கொள்கையைப் பின்னோக்கி நகர்த்துவதற்கு இந்த அரசும் திறன் அற்றதாக விளங்குவதே இதற்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அரசின் இத்தகைய செயற்பாடு காரணமாக ஊழல், பயங்கரவாதச் செயல்கள், படுகொலை போன்ற மோசமான விளைவுகள் சமுதாயத்தின் அனைத்து இடங்களிலிருந்தும் வெளிப்பட்டு வருகின்றன.

படுகொலைக்குள்ளான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் மூவரின் 25 ஆவது நினைவு தின நிகழ்வு அக்குரஸ்ஸவில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இக்கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான அமைச்சர் டியூ குணசேகர தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கும்போது; கடந்து சென்றுள்ள ஏழாண்டுகளில் நாட்டில் வேகமான அபிவிருத்தியைக் காண முடிந்தாலும் அதற்குச் சமனான வகையில் மேற்குறிப்பிட்ட சமுதாயத்தை பாதிக்கும் செயல்களும் சமுதாயத்தினுள் அதிகரித்துள்ளன.

இந்த நிலைப்பாட்டில் மாற்றம் செய்ய வேண்டுமெனில் வரப்பிரசாதங்களைப் பெறும் தன்மைகள் அரசியலிருந்து தூர விலக வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டினார். (க-22)

# பெண்களுக்கு செயற்கை மார்பகம்

### வழங்கும் திட்டம் கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு,ஏப்.4

மார்பகப் புற்று நோய் காரணமாக மார்பகம் அகற்றப்படும் பெண்களுக்கு செயற்கை மார்பகம் வழங்கும் திட்டம் சுகாதார அமைச்சின் வழிகாட்டலுடன் கொழும்பு செண்டா அமைப்பினூடாக இலங்கையில் முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மார்பகப்புற்று நோய் காரணமாக சத்திரசிகிச்சை மூலம் மார்பு அகற்றப்பட்ட பெண்களுக்கு அசாதாரண நிலைகள் ஏற்படுகின்றன. செயற்கை மார்பகம் பொருத்துவதனூடாக அவர்களுக்கு அவ்வாறான நிலைகள் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் புற்றுநோய் காரணமாக மார்பு அகற்றப்பட்ட பெண்களுக்கு செயற்கை மார்பு வழங்கும் செயல் திட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள குடும்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்றது.

புற்றுநோய் காரணமாக மார்பு அகற்றப்பட்ட பெண்களுக்கு இலவசமாக செயற்கை மார்பகம் வழங்கப்பட்டமை, அழகுதொடர்பில் அவஸ்தைப்படும் மற்றும் தொழில் புரியும் பெண்களுக்கு பெரும் நிம்மதி தருவதாக அமையும் என்று நிபுணத்துவ மருத்துவர் சுஜாதா சமரக்கோன் தெரிவித்தார்.

மார்பகம் அகற்றப்பட்ட பெண்களுக்காக முதல் தடவையாக இத்தகைய திட்டம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 3 நாள்கள் வைரஸ் காய்ச்சல் நீடித்தால் இரத்தப் பரிசோதனை செய்யுங்கள்

### நோயாளர்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு,ஏப்.4

கொழும்பு நகரில் தற்போது வேகமாகப் பரவி வரும் வைரஸ் காய்ச்சல், மூன்று தினங்களுக்கு மேல் நீடித்தால் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுமாறு நோயாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் காய்ச்சலுக்கு வயிற்றுவலி, இருமல், உடற்சோர்வு, தலைவலி போன்ற அறிகுறிகள் காணப்படும் என்று அங்கொடை வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம குறிப்பிட்டார்.

இந்த வைரஸ் காய்ச்சல் ஏற்படுமிடத்து நன்றாக ஓய்வெடுக்க வேண்டும். அதன் பின்னரே வயிற்றுவலிக்கும் இருமலுக்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.


நோய் எதிர்ப்புச் சக்தி கொண்ட மருந்துப் பொருள்களை பயன்படுத்துவதை இயன்றவரை தவிர்க்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# ஓராண்டு நினைவலைகள்

## அமரர்

# அருணாசலம் கனகையா

### (அளம்பில், முல்லைத்தீவு)



அன்பின் இலக்கணமே
அரவணைப்பின் உறைவிடமே அப்பா
ஆண்டொன்றுசென்றாலும்
அழியாதுஉம் நினைவு

எம் குடும்பத்தின் குலவிளக்கே
கண்மூடி விழிக்கமுன்னே
காற்றாய் பறந்தனையோ
தாங்கமுடியவில்லை
தவியாய் தவிக்கின்றோம்.
கதறுகிறோம் உறவுகள் நாம் நீர் திரும்பிவந்துவிட
கனகையா என்றாலே பஞ்சான நெஞ்சம்
ஏனையா உம்நெஞ்சம் கல்லான திப்போது

கலங்கரை விளக்காக வழிகள் காட்டி நின்றாய்
உறவுகள் உயர்ச்சியிலே உரிமையுடன் பங்கேற்றாய்
பிள்ளைகள் நாம் உயர்ச்சிபெற
காணாமல் எங்குசென்றாய்?
எண்ணும் போதெல்லாம்
இதயம் வெடிக்கிறது.
ஓராண்டு எப்படிப் போனது அப்பா!
நினைவுகளால் இப்போதும் எம்முடன் வாழ்கின்றீர்.

மாமா எனவே மருமக்கள் மனமுருக
அம்மப்பா, அப்பப்பா வென
பேரப்பிஞ்சுகள் ஏங்கி நிற்க
நாம் தூங்கி விழிக்க முன்னே
தாரத்துடன் வாழ
தூரத்தே சென்றீரோ......

இன்பங்களை மட்டும் எமக்கு நீர் தந்தீர்
துன்பங்களை நீர் தனியாக ஏற்றீரே
மூடிய கண்களில் பதிந்த உம் அன்புமுகம்
திறந்த விழிகளில் காண்பதெப்போது?

அன்பெனும் அருங்கயிற்றால்
அனைவரையும் இணைத்திருந்தீர்
நாடிவருகையிலே
உணவளித்து உவகைகொள்வாய்
சோதிவடிவாய் சொர்க்கத்தில் வாழ்பவரே
வேண்டுகின்றோம் உம் பாதம் தனில் வீழ்ந்து வானில்
வாழும் உம்மை மண்ணினின்று வணங்குகின்றோம்.

புதுக்குடியிருப்பினிலே மலர்ந்திட் டமலரே
வவுனியா மண்மடியில் புகுந்திட்ட மலரே
விரும்பாத வேளையுன்னை
காலனும் அழைத்தானோ
துரும்பாக இழைத்து நின்றோம்
உன்பிரிவு தாங்காது.
கடல்போல கண்ணீரும்
துயரத்தை ஆற்றாது
மடலொன்று விடுக்கின்றோம்
மாண்புறு உறவே
மடியாத உன் ஆன்மா
இறைவனிலே...

## குடும்பத்தினர்.

(C/8074)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெலோ அமைப்பின் 8 ஆவது தேசிய மாநாடு
## 6,7 ஆம் திகதிகளில் வவுனியாவில்

அம்பாறை,ஏப். 4

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) எட்டாவது தேசிய மாநாடு எதிர்வரும் 6ஆம்,7ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு தமிழீழ விடுதலை இயக்கத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில், வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் மாவட்ட ரீதியிலான கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள், வெளிநாட்டு பொதுக் குழு உறுப்பினர்களென 115 பேர் பேராளர்களாகக் கலந்து கொள்வர். அத்தோடு கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக கட்சியின் செயலர் ஹென்ரி மகேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தோழமைக் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அவர் கூறினார். இந்தத் தேசிய மாநாட்டில் கட்சியின் எதிர்கால செயற்றிட்டங்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னரே இந்த தேசிய மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், கட்சித்தலைவர், முக்கியஸ்தர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் முக்கிய அரசியல் செயற்பாடுகள் காரணமாக மாநாடு பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

# கொழும்பு நூதனசாலையின் பாதுகாப்பு குறித்து ஆராய்வு

கொழும்பு,ஏப்.4

கொழும்பு நூதனசாலையில் மேலும் ஆபத்தான பகுதிகள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளது என்று தேசிய மரபுரிமைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நூதனசாலையில் கடந்த மாதம் மாடிப்படி ஒன்று உடைந்து வீழ்ந்ததில் 37 பேர் காயமடைந்தனர். இந்த நிலையில் விசேட நிபுணர்களைக் கொண்டு, அங்கு மேலும் ஆபத்தான பகுதி ஏதும் இருக்கிறதா என்பது தொடர்பில் ஆராயப்படுகிறது என்று தேசிய மரபுரிமைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.(ச)

# சுனாமியால் அநாதரவான பிள்ளைகளை பதியுங்கள்

கொழும்பு,ஏப்.4

சுனாமியின் போது பெற்றோர்களை இழந்த பிள்ளைகள் குறித்த விவரங்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சுனாமியால் தாயை, தந்தையை இழந்த பிள்ளைகளும், பிள்ளைகளை வளர்க்க, பாதுகாக்க முடியாத தாய் அல்லது தந்தை ஆகியோரும் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்புக்கான பொறுப்பை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஏற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கொழும்பில் இனவாதிகளுக்கு எதிரான கூட்டம்

கொழும்பு,ஏப்.4

இஸ்லாத்துக்கு எதிராக அண்மைக்காலமாக இனவாதிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் நாளைமறுதினம் சனிக்கிழமை கொழும்பு, கொம்பனி வீதியில் மாபெரும் பொதுக் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கூட்டம் நாளைமறுதினம் மாலை 6.45 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் 'முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாப்போம்' என்னும் தலைப்பில் ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் செயலர் அப்துர் ராஸிக் உரை நிகழ்த்தவுள்ளார். (ச)


# மரண அறிவித்தல்



## லூக் ஆரோக்கியசாமி

கொழும்பைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட லூக் ஆரோக்கியசாமி 02.04.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆரோக்கியசாமி- லில்லி தம்பதியரின் மகனும், பற்றிமாமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ராணி அன்ரனிப்பிள்ளை மற்றும் மேரிமாட்டினா சவரிமுத்து (கமலா - ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற ராஜேஸ் நவரட்ணராசா மற்றும் பிளசிடஸ் ஆகியோரின் சகோதரனும், மேரிகுயின்றோஸ், மேரிசில்வியா, லவன் (லண்டன்), டேமியன் (பிரான்ஸ்), மேரி ஏஞ்சல் (லண்டன்), டோமினிக்சாவியோ (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெறாட் (ஜெறி), சதீஸ் குமார் (லண்டன்), சோபியா (லண்டன்), செறின், அன்ரனி (லண்டன்), விஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், ஜெறோமி, ஜெனுசியா, ஜெவானுஜன் கோகுலவருண், வர்ணிகா, கோகுல்ராஜ், லினோசன் (லண்டன்), டமிசா, அபிசா (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2013) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் புனித தோமையார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
மாதகல்.
077 9907 154/
077 2368 424.

தகவல்:
குடும்பத்தினர்.

(35624) (45.6.7)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
## கனகசபை சிவபாலன்
(சிற்சபேசன்—வெங்காய வியாபாரி)

உதிப்பு : 08.06.1953

உதிர்வு: 27.03.2011

திதி: பூர்வ பக்க நவமி

என்றென்றும் உமை மறவோம்

சப்பச்சி மாவடி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

சி.சந்திரவதனா (மனைவி),
சி.சிவமுகுந்தன் (மகன்).

# பசுமை நினைவுகளுடன் இதய அஞ்சலி



## பரராஜசிங்கம் சர்மிலன்
(Bachelor of Fine Arts)

நண்பனே!
உன் இழப்பை ஏற்க என் மனம் மறுக்கிறது
நாம் கூடித்திரிந்த காலங்கள்
என் மனதோரம் வந்து செல்கிறது
ஊரில் இருந்து இடம்பெயர்ந்து, நாம் வலிகாமம்
வீதிகளில் சைக்கிளில் சுற்றியது இன்னமும்
பசுமை நினைவுகளாய் என் மனதில்....
ஆனால் நீயோ!
1998 இல் என் சுகம் கேட்டு நீ எழுதிய கடிதம்
இன்னமும் என்னிடம் பத்திரமாக....
ஆனால் நீயோ! இன்று...
ஊரார் இங்கிருக்க, உறவுகளும் தனித்திருக்க
எவ்வழியில் உனது வாழ்வு முடிந்ததோ?
எல்லாம் வெளிச்சம் அந்த இறைவனுக்கே
உன்னுடன் பழகிய அந்த நாள்களை நினைத்து
அழுவதைத் தவிர என்னால் எதுவுமே
செய்ய முடியவில்லையடா நண்பா!

என்றும் உன் நினைவுகளுடன்
உன் நண்பன் பூ.பார்த்தீபன்.

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
31.03.1923

அம்மன் மடியில்
12.04.2004

## அமரர் பண்டாரி வேலாயுதம்
(மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, வேரர்கேணியடி)

திதி: 04.04.2013

ஆண்டுகள் ஒன்பது ஓடி மறைந்து விட்டன....
ஆனால் உங்கள் நினைவுகளும் பாசமும்
என்றென்றும் எங்களை விட்டு அகலாது....
அப்பா உங்கள் பூதவுடல் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்களை எங்களால் என்றென்றும் மறக்க முடியாது
எமக்குத் தெய்வமாகிவிட்ட......
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கனடா

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(35623) (45.6.7)



ஓ
அசத்தெல்லாம் சத்தாக அஞ்ஞான இருள்
ஞான ஒளியதாக கொடிய அழிவெனும் சக்தி
அமுதமாக அருள்வாய் அவனிக்கெல்லாம்
அமைதி! அமைதி! அமைதி!



# மகாதேவ ஆச்சிரமம்
Regd No. SVP 104/44 of 29-10-1976

Thavathiru Vadivel Swamy

Srimath Ganesganantha Swamy

Srimath
Ganesganantha Mahadava Swamigal,
MAHADEVA ASHRAMAM
Jeyanthinagar,
Kilinochchi (Sri Lanka
BOC, Kilinochchi A/C No. 70192774)

ஸ்ரீமத்
கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்தி நகர்,கிளிநொச்சி.

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம் : 07.04.2013 ஞாயிறு பி.ப.2 மணி இடம் : ஆச்சிரம பிரார்த்தனை மண்டபம்.

### நிகழ்ச்சி நிரல்

- இறை வணக்கம்
- தலைமையுரை (தவத்திரு ஸ்ரீமத்கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்)
- சென்ற ஆண்டு கூட்ட அறிக்கைகள்
- சென்ற ஆண்டு வரவு செலவுக் கணக்கு அறிக்கைகள்
- புது நிர்வாக குழுத் தெரிவு
- சுவாமிகளினால் தெரிவு செய்யப்பட்ட அறங்காவலர் சபை அறிமுகம்
- நன்றியுரை
- இறைவணக்கம்

குறிப்பு: இடப்பெயர்வுகளால் ஆச்சிரம உடைமைகள் அனைத்தும் தொலைந்துபோயின. இக்காரணத்தால் அங்கத்தவர்கள் விலாசங்கள் எம்மிடமில்லை. எனவே இவ்வறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்று இவ் ஆச்சிரமத்தின் அங்கத்தவர்கள் யாவரும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

'அன்பும் ஆசியும் அனைவருக்கும் கிடைப்பதாக'

மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்தி நகர்,கிளிநொச்சி.

கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
பீடாதிபதி.

(35622) (6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஜரட்டையில் 60 பேருக்கு எலிக்காய்ச்சல்

கொழும்பு,ஏப்.4

ரஜரட்டை பிரதேசத்தில் இதுவரையில் எலிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 60 பேர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் டபிள்யூ. அத்தபத்து தெரிவித்தார்.

ரஜரட்ட பகுதியில் கடந்த காலங்களில் கடும் மழை பெய்திருந்த நிலையிலேயே அதிகமானோர் எலிக் காய்ச் சலினால் பீடிக்கப்பட்டுள் ளனர் என்று அவர் கூறி னார். (ச)

## புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட பாதுகாப்பு

கொழும்பு,ஏப்.4

புத்தாண்டை முன்னிட்டு கொழும்பில் விசேட பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய புறநகர்ப் பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடு வோரிடமிருந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

விசேட ரோந்துப் பணிகள் மற்றும் திடீர் சோத னைகளின் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட உள்ளன என்று பொலிஸார் கூறினர்.


**புத்தாண்டு கொண் டாட்டங்கள் நிறைவடையும் வரையில் தொடர்ச்சியாக மாலை நேரங்களில் விசேட ரோந்துப் பணிகள் மேற்கொள் ளப்படவுள்ளன.**

புத்தாண்டு கொண் டாட்டங்கள் நிறைவடையும் வரையில் தொடர்ச்சியாக மாலை நேரங்களில் விசேட ரோந்துப் பணிகள் மேற் கொள்ளப்படவுள்ளன. சிவில் உடையிலும், சீரு டையிலும் பொலிஸார் கட மையில் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர்.

சனநெரிசல் அதிகமாகக் காணப்படும் பிரதேசங் களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ச)

## வண்ணத்துப்பூச்சி வகைகளுக்கு 9 மாகாணங்களின் பெயர்கள்

### ஸ்ரீலங்கன் ரைகரும் அதில் ஒன்று



கொழும்பு,ஏப்.4

நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் வண்ணத் துப்பூச்சி வகையொன்றின் பெயர்களை இடுவதற்கு சுற் றாடல்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வண்ணத்துப்பூச்சிகளை பாதுகாக்கும் விசேட திட்டத் தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக சுற்றா டல்துறை அமைச்சின் உயிர்பல்வகைமை செயலகத்தின் பணிப்பாளர் பத்மா அபேகோன் குறிப்பிட்டார். இதற்கமைய ஒன்பது மாகாணங்களுக்கும் ஒன்பது விசேட வண்ணத்துப் பூச்சியினங்களின் பெயர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

மத்திய மாகாணம் -ஸ்ரீ லங்கன் ரைகர் (Sri Lankan Tiger), சப்ரகமுவ - ஸ்ரீ லங்கன் றோஸ் (Sri Lankan Rose), தென் மாகாணம் -ஸ்ரீ லங்கன் டிறி அன்ட் இன் (Sri Lanka Tree &in), வட மத்திய மாகாணம் - பான்டெட் பீக்கொக் ( Ban ded Peacock), ஊவா -பரு நெற் (Paru Net), வட மேல் மாகாணம் -லெசா அல்பேர்ட் றோஸ் (Lesa Albert Rose), மேல் மாகாணம் - புளூ கிளஸி ரைகர் ( Blue Glassy Tiger), கிழக்கு மாகாணம் - ஸ்பொற் சொவ்ற் ரெயில் (Spot Soft Tail), வட மாகாணம் -லாஜ் குவாவா புளூ (Large Guava Blue)

இந்த வருட இறுதிக்குள் வண்ணத்துப்பூச்சி வகைகளை மாகாணங்களுக்கு உத்தியோகபூர்வமாக பெயரிடுவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# சிலர் தமது தேவைகளுக்காகவே பேதங்களை உருவாக்க முயற்சி

## ■ சர்வமதத் தலைவர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.4

மதங்களுக்கிடையில் எவ்விதமான பேதமும் இல்லை. சிலர் தமது தேவைகளுக்காக பேதங்களை உருவாக்க முயற்சிக்கின்றனர். நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சமாதான சூழல் தொடர்ந்தும் நீடிப்பதற்கு அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து வாழவேண்டும்.

இவ்வாறு சர்வமதத் தலை வர்கள் தெரிவித்தனர்.

இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்று விக்காமல், இனங்கள் மற் றும் மதங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்து வதற்கான வேலைத்திட்டங் களில் மதத் தலைவர்கள் உட் பட அனைத்துத் தரப்பினரும் ஈடுபடவேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

மதங்களுக்கிடையிலான கல்வி வட்டம் எனும் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஊடகவி யலாளர் சந்திப்பு நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு நிப்போன் ஹோட் டலில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பௌத்த, முஸ்லிம், இந்து மற்றும் கிறிஸ்தவ மதகுரு மாரே இவ்வாறு குறிப்பிட்டனர்.

ஒவ்வொரு மதத்திலும் காணப்படும் நல்ல விடயங் களை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று காலி ரஜ மகா விகாரையின் விகாராதி பதி வஜ்ஜிர தேரர் தெரிவித்தார்.

உண்மையான அர்த்தம் தெரியாததாலேயே ஹலால் பிரச்சினை உருவாக்கப்பட் டது. இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்த அரசு இடமளிக்கக் கூடாது என்றும் அவர் கூறினார்.

அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் வாழ்வதற்கே அனைத்து இன மக்களும் விரும் புகின்றனர். மீண்டுமொரு பிரச்சினை ஏற்படாதிருப்ப தற்கு அனைத்து இன, மத மக் களும் ஒன்றிணைய வேண்டிய தருணம் தற்பொழுது தோன்றி யுள்ளது என்று கொழும்பு இஹ்ஸானிய்யா அரபுக் கல்லூரி பிரதி அதிபர் பரூத் மௌ லவி தெரிவித்தார்.

ஒரு மதத்தில் உள் ளதை மற்றைய மதத் தில் உள்ளவர்கள் அறிந்துகொள்ளாமல் இருப்பதாலேயே பிரச் சினைகள் தோன்று கின்றன. அதேபோல, தமது மதத்தில் உள்ள விட யங்களை மற்றையவர்களுக் குத் தெரியப்படுத்த வேண்டிய தேவையும் எமக்கு உள்ளது. இவ்வாறான செயற்பாடுக ளாலேயே முரண்பாடுகள் தோன்றுவதற்கான சூழ் நிலைகள் உருவாகின்றன என்று அவர் தெரிவித்தார்.

மதங்களுக்கிடையிலான ஒற்றுமை மிகவும் அவசியம் என்று கொழும்பு சென்.பீட் டர்ஸ் கல்லூரியின் ஆலோச னைப் பணிப்பாளர் அருட் தந்தை கிறிஸ்பன் லியோ வலியுறுத்தியுள்ளார்.

இனங்களுக்கிடையில் காணப்படும் சந்தேகத்தை நீக்குவதன் மூலம் ஒற்று மையை ஏற்படுத்த முடியும் என்று அவர் கூறினார்.

மீண்டுமொரு வன் முறைச் சூழல் ஏற்படாதவாறு மக்கள் செயற்பட வேண்டும் என்று பத்தேகம சமத்த தேரர் கேட் டுள்ளார். (ச)

## நாடு முழுவதும் 40,000 போலி வைத்தியர்கள்

கொழும்பு,ஏப்.4

நாடு முழுவதுமுள்ள போலி வைத்தியர்களை அடையாளம் காண்பதற்கான விசாரணைகளை அரச வைத் திய அதிகாரிகள் சங்கம் ஆரம்பித்துள்ளது.

போலி வைத்தியர்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதே இந்த நடவடிக் கையின் முக்கிய நோக்கம் என்று அந்தச் சங்கத்தின் தலைவரும் வைத்திய நிபுணருமான அனுருத்த பாதெணிய குறிப்பிட்டார்.

சுமார் நாற்பதாயிரத்துக் கும் அதிகமான போலி வைத் தியர்கள் நாடு முழுவதும் சேவையாற்றுகின்றமை குறித்து தெரியவந்துள்ளது என்று அவர் கூறினார்.

போலி வைத்தியர்கள் காரணமாக நோயாளர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் பொலி ஸாரின் ஒத்துழைப்புடன் போலி வைத்தியர்கள் தொடர் பான தகவல்களைத் திரட் டுவதற்கு நடவடிக்கை மேற் கொள்வதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## பல்கலை மாணவர்களிடமிருந்து சுமார் 2500 மேன்முறையீடுகள்

கொழும்பு,ஏப்.4

பல்கலைக்கழகங்களில் புதிதாக இணைத் துக்கொள்ளப்பட்டுள்ள மாணவர்களிடமி ருந்து சுமார் 2500 இற்கும் அதிகமான மேன் முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அனைத்து மேன்முறையீடுகளுக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அமைச்சின் மாணவர் விவகாரங்கள் தொடர்பான பணிப்பாளர் கீர்த்தி சுரங்ஜித் மாவெல்லகே குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகங்களிலிருந்து வேறு பல் கலைக்கழகங்களுக்கு தம்மை மாற்றுமாறு கோரியும், தமது கற்கைநெறிகளை மாற்றுவது தொடர்பிலும் மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அவர் கூறியுள்ளார்.

2011ஆம் ஆண்டு உயர்தரத்தில் சித்திபெற்ற 26 ஆயிரத்து 944 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19.10.1958
உதிர்வு 04.04.2008



சதாசிவம் இரட்ணபாலா

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலும்
ஆறாது உங்கள் நினைவலைகள்
மாறாது எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
மருமகன்மார்.

நந்தாவில் அம்மன்
கோயிலடி, கொக்குவில்.
(35531) (6.7.11)

ஆண்டு மூன்றின் நினைவில்

அமரர் தளையசிங்கம் நவரத்தினராசா
(ஓய்வு பெற்ற செயலாளர், நகரசபை, சாவகச்சேரி)



தோற்றம் : 30.12.1932
மறைவு : 07.04.2010

திதி: பங்குனி அபரபக்க நவமி

ஆண்டுகள் மூன்றென்ன முப்பதாயினும்
எம்முயிருள்ள நாள்வரையில் கண்ணுக்குள் நின்றாடி
கனவுகளில் தோன்றி எண்ணமதில் என்றும்
அணையா விளக்காய் பிரகாசிப்பீர்!

பெருங்குளம் மட்டுவில் வீதி,
சாவகச்சேரி.
(C3037) (6.7)
குடும்பத்தினர்

கடை விற்பனைக்கு

இல.82, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்
எனும் விலாசத்தில் புதிதாக
அமைக்கப்பட்ட கடைக்கட்டடம்
விற்பனைக்கு உண்டு.
தொ.பே. 077 759 2651
(35614)(6.7.11)

6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11.03.1977
உதிர்வு 04.04.2007

அமரர்
நிர்மலன் நிர்மலதாஸ் (தாஸ்)

நீ மரணிக்கவில்லையடா
எல்லா உறவுகள் மனதிலும்
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்
உடன் பிறந்தவர்களுக்காய்
உன்னுயிரையே கொடுத்தவனே
உன்னுடன் பழகிய உறவுகள் எல்லாம்
உன்னைப் பற்றிக் கேட்கிறார்கள்
எப்படிச் சொல்வோம் நீ முடிவில்லா
வாழ்வைத் அடைந்திட்டாய் என!
நீ விண்ணுலகில் இறைவனோடு
வீற்றிருக்க பிரார்த்திக்கின்றோம்.

நீலியம்பனை,
மல்லாகம்.
குடும்பத்தினர்.
(35610)(10.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவுடன் இணைந்த பயணம்

“ஓம் விராட்விஸ்வப்பி


# மணிவிழாக் காணும்




கவிஞராக...



சிற்பியாக...


ஆன்மீகவாதியாக...

















## மணிவிழாக்காணும் மயிலையின் மைந்தனை மனதார

### மணிவிழா வாழ்த்துரை

மயிலிட்டியூர் செல்லப்பா சண்முகநாதன் சிற்பாச்சாரியார் அவர்கள் அகவை அறுபதை நிறைவு செய்து மணிவிழாக் காணும் இவ்வேளையில் இவரை வாழ்த்தி ஆசி வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றோம். ஊற்றங்கரை சித்திவிநாயகப் பெருமான் பவனி வருவதற்காக தேர், சப்பரம், வாகனம் என்பவற்றை உருவாக்கித் தந்துள்ளார். இவர் சிறந்த ஆன்மீகப் பற்றுடையவர். ஒவ்வொரு ஆண்டும் எமது ஆலயத்திலுள்ள ஐயப்பன் கோயிலில் மாலை அணிந்து மண்டல விரதமிருந்து சபரிமலை யாத்திரை செல்பவர்.மணிவிழாக்காணும் இப்பெருமகன் இன்னும் பல்லாண்டு காலம் மனைவி மக்களுடன் சிறப்புடன் வாழ்ந்து நல்லன பல செய்ய ஊற்றங்கரை சித்தி விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை தொழுது வாழ்த்துகிறேன்.

சிவஸ்ரீ இரா. பத்மகுமாரக்குருக்கள்,
ஊற்றங்கரை சித்தி விநாயகர் தேவஸ்தானம்.

### அருளாசி வேண்டி வாழ்த்துகின்றோம்

மயிலிட்டி தந்த சிற்பக் கலைஞர் செல்லப்பா சண்முகநாதன் அவர்கள். இவர் பல ஆலயங்களுக்கு வாகனங்கள், தேர்,மஞ்சம் போன்றவற்றை உருவாக்கிப் புகழ்பெற்றவர்.

இவர் இன்று தனது அறுபதாவது அகவையில் மணிவிழாக் காண்கின்றார். இந்த மணிவிழா நாயகன் குடும்பத்தினருடன் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ இறையருளை வேண்டி வாழ்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

### செல்லப்பா சண்முகநாதன் அவர்களின் மணிவிழா வாழ்த்து

செல்லப்பா சண்முகநாதன் அவர்கள் 04.04.1953 இல் யாழ்ப்பாணம் மயிலிட்டியில் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/கலைமகள் மகாவித்தியாலயத்திலும் இடைநிலை மற்றும் உயர்கல்வியை யா/காங்கேசன்துறை மகாவித்தியாலயத்திலும் கற்றார். இளமையிலேயே சிற்பக் கலை பயின்று தேர்ச்சி பெற்ற சிற்பஸ்தபதியாக விளங்கி வருகின்றார். தேர்கள், வாகனங்கள் என்பனவற்றை உருவாக்கி சிறப்பான செயற்பாட்டின் காரணமாக 'சிற்பசிகாமணி','முதுபெரும் கலைஞர்' முதலான பட்டங்களைத் தனதாக்கிக் கொண்டார். பாடசாலை நாள்களிலிருந்தே கவிதை, ஓவியம்,நாடகம் போன்றவற்றில் பெரிதும் ஈடுபாடு கொண்டு விளங்கியவர். நூற்றுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்களையும்,மணமங்கல வாழ்த்துப் பாமாலைகளையும் படைத்துள்ள இவர் காத்தவராஜன் சிந்து நடைக்கூத்து போன்ற இசை நாடகங்களையும் மற்றும் பல சமூக நாடகங்களையும் உருவாக்கி நெறியாள்கை செய்து மேடையேற்றிய சிறப்புக்குரியவர். சிறந்த ஆன்மீக ஈடுபாடு கொண்டவர். இரண்டு ஆண்பிள்ளைகளையும் ஒரு பெண்பிள்ளையையும் பிள்ளைச் செல்வங்களாகக் கொண்டு வாழ்ந்து வருமிவர் பல இடப்பெயர்வுகளின் பின்னர் தற்போது நீர்வேலி வடக்கில் வாழ்ந்து வருகின்றார். இத்தகைய சிறப்புக்குரியவருக்கு மணிவிழா எடுக்கப்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இப்பெரியவர் தனது மனைவி பிள்ளைகளுடன் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து எமது சமூகத்திற்குப் பணியாற்ற வேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி,
பீடாதிபதி/முகாமைக் கற்கைகள்,
வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

### இதயம் கனிந்த பாராட்டு

மணிவிழா நாயகன் செல்லப்பா சண்முகநாதன் அவர்களின் அறுபதாவது அகவை நாளில் வாழ்த்தி பாராட்டுவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

இவர் தனது யாழ். மண்ணிலிலும்,வேறு மாவட்டங்களிலும் கைவண்ணத்தின் தொழில் திறமையால் அமைப்பும், உயிர்த்துடிப்பும், உள்ளத்தைத் தொடுகின்ற உணர்வும் கொண்ட சிற்ப அமைப்புக்களை உருவாக்கி பலரதும் பாராட்டுக்களையும் பெற்றதோடு, தொடர்ந்தும் அத்துறையிலே பயணித்துக் கொண்டிருக்கின்றார்.

எமது பிரதேச ஆலயங்களிலும்,பாடசாலைகளிலும், பல வீடுகளிலும் அளப்பரிய சாதனைமிகு கைவேலைப்பாடுகளினாலான சிற்பங்களைப் படைத்து தற்போதும் இவை அனைத்தும் அழியாச் சின்னங்களாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றது.

மேலும் இவரது திறமைகள் கைவேலைப்பாடுகளில் மட்டுமல்லாது சிறந்த நாடக நெறியாளராகவும், உயிரோட்டமான அர்த்தம் பொருந்திய கவிதைகளை சிறப்பாக எழுதும் ஆற்றல் கொண்ட கவிஞராகவும், இறை ஆன்மீகத்தோடு தன்னை இணைத்து ஆன்மீகத் தொண்டராகவும் வலம் வந்து கொண்டிருக்கின்றார்.

சிரித்த ஆளுமை கொண்ட தோற்றமும்,நேரிய பார்வையும், கூரிய சிந்தனையும், நிதானமாக முடிவெடுக்கும் ஆற்றலும் முற்போக்கு சிந்தனையும் கொண்ட சண்முகநாதன் அவர்களை மணிவிழா நாளில் மாமனிதராகப் பாராட்டிக் கௌரவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தனது ஆற்றல்கள் திறமைகள் மூலம் சிறப்பான வழிகாட்டல் செய்து தனது பிள்ளைகள் யாவரும் பலதுறைகளில் உயர்ந்து நிற்பதும் இவரது சேவையின் மகத்தான வெளிப்பாடாகும்.

இவர் மேன்மேலும் பல சாதனைகள் படைத்து, நீண்ட ஆயுள் பெற்று எதிர்காலம் சிறக்க, குடும்பத்தினருடன் பல்லாண்டு வாழ இறைவரம் வேண்டி நாயகனை மனமார வாழ்த்துகிறேன்.

நு. யேகதானந்தர்,
அதிபர்,மு/மல்லாவி மத்திய கல்லூரி,
யோகபுரம்.

### மணிவிழா நாயகனை மனதால் வாழ்த்துகின்றேன்

யாழ்ப்பாணம், மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பா சண்முகநாதன் மணிவிழாக் காணும் இத்தருணத்தில் இவரை என் மனதிருத்தி வாழ்த்துகின்றேன்.

இவர் 1997ஆம் ஆண்டு எமது பிரதேசத்திற்குக் கிடைத்த கலங்கரை விளக்கு. ஆன்மீகவழி,சிற்பாசாரம், கவித்துவம் என்பன ஒருங்கே அமைந்த சிறந்த கலைஞன்.

நெற்றியில் சந்தண குங்குமம், நிமிர்ந்த நேர்கொண்ட பார்வை, மெல்லிய புன்சிரிப்பு, சோகத்தை உறுதிப்படுத்தும் எவரும் மறக்கமுடியாத வெள்ளைத்தாடி, எல்லோரையும் கவரும் சாந்தமான முகம், அன்பான பேச்சு, விருந்தோம்பல் பண்பு என்பன இவரிடம் காணப்படும் தனித்துவம்.

'தக்கார் தகவிலார் என்பது அவர் அவர்
எச்சத்தில் காணப்படும்'

என்ற வகையில் இவரது பிள்ளைகள் கல்வியிலும், கலையிலும் எமது பிரதேசத்திற்கும், பாடசாலைக்கும் இங்கு வாழ்ந்த காலத்தில் பெருமை சேர்த்துத் தந்துள்ளார்கள். அது மட்டுமல்லாது 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்பதற்கிணங்க இவரது குடும்ப வாழ்க்கை சிறப்புற அமைந்துள்ளது எனலாம்.

இவருடைய பண்பிற்கும், வாழ்விற்கும் இலக்கணமாக மணிவிழாக் காணும் நாயகனை பூமணம் திகழ, புதுமணம் கமழ பல்லாண்டு காலம் வாழ்ந்து கலை உலகில் ஒளிவீச மனதார வாழ்த்துகிறேன்.

த.யோகானந்தராசா,
அதிபர், மு/யோகபுரம் ம.வி., யோகபுரம்.

### மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

'தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று'

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க புகழுடன் தோன்றி வாழ்ந்து கொண்டிருக்கும் செல்லப்பா சண்முகநாதன் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த மணிவிழா வாழ்த்துக்கள்

சிறந்த சிற்பக்கலைஞனாக, கவிபுனையும் வல்லமை கொண்ட கவிஞனாக, ஆன்மீகபலம் கொண்ட ஆச்சாரியாக வாழ்ந்து கொண்டிருப்பவர். இவரது பிள்ளைகளும், எனது மாணவச் செல்வங்களுமாகிய கஜேந்திரன், ஜெயந்திரன், நிவாசினி ஆகியோர் பல்துறை ஆளுமை மிடுக்கோடு வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மண்ணுலகில் பிறந்த ஒவ்வொருவரும் மண்ணில் பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாமல் என்ன சாதனை புரிந்தோம் என்ற கொள்கையுடன் வாழ வேண்டும். மணிவிழாக் காணும் நாயகன் அவர்கள் தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொண்டவர். இன்றைய நன்நாளில் இவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். வாழ்க நும்புகழ்! வாழிய பல்லாண்டு!

திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை
அதிபர்,யா/இராமநாதன் மகளிர் கல்லூரி.

### மணிவிழா நாயகனை மனமார வாழ்த்துகிறேன்.

அன்பேசிவம்' என்று திருமந்திரம் கூறும் நல்வாக்கிற்கு இலக்கணமாக அனைவருடனும் அன்புடன் வாழ்வாங்கு வாழ்பவர் சண்முகநாதன் ஐயா அவர்கள்.

இவர் சிறப்புடைய சிற்பக்கலைஞர்,ஆன்மீக வாதி,சிற்பவல்லுநர் மட்டுமல்ல ஆதரவற்றவர்களுக்கு ஆதரவு காட்டுவது, அனைவரையும் உயர்ந்த உறவாக மதிப்பது, ஏழை எளியவர்கள், இயலாதவர்களுக்கு உதவுவது என்பவற்றை நாளாந்த கடமைகளாகக் கருதுபவர். அத்துடன்,

'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன் உயிர்க் கெல்லாம் இனிது'

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப தம்மைவிட தம்மக்கள் அறிவுடையவராக இருக்கவேண்டும் என நினைப்பதால் தமது பிள்ளைகளுக்கு கல்விச் செல்வத்தைப் பெற வழிகாட்டியுள்ளார். இதனால்தான் இவரது பிள்ளைகள் தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டிகளில் மாகாணம் கடந்து தேசிய மட்டம் வரை சென்று தங்கப்பதக்கம் வென்று சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.

எனவே இத்தகைய பெருமைக்குரிய சுவாமி அவர்களை நூறாண்டு வாழ இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

திருமதி வளர்மதி நகுலேஸ்வரதாசன்,
ஆசிரியை,யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

### மனதால் வாழ்த்துகின்றேன்

வாழ்வு என்றால் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது என்பது வள்ளுவன் கருத்து. உலகில் பிறந்தவர்கள் வாழ்கிறார்கள் ஆனால் எல்லோருடைய வாழ்க்கையும் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையாக அமைவதில்லை. இந்த வகையில் எனது அன்பிற்குரிய மைத்துனர் செல்லப்பா சண்முகநாதன் அவர்கள் வாழ்வாங்கு வாழுகின்ற பெரும் பண்பமைந்தவர்.மயிலிட்டி எனும் ஊரில் பிறந்து,மாவிட்டபுரத்தில் இல்லாளைப் பெற்று, ஆற்றல் மிக்க மக்களைச் செல்வங்களாகப் பெற்று வாழ்ந்து வரும் இவர் கவித்துவ ஆற்றலும், ஆன்மீகச் செல்வமும், சிற்பத்துறையில் ஆழ்ந்த அனுபவமும் ஆற்றலும், நாடகத்துறையில் சிறந்த ஆற்றலும் கொண்டவர். மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலயம், காங்கேசன்துறை மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் ஸ்ரீ சபரிமலை ஐயப்ப சுவாமியின் பெரும் பக்தனாவார். அறுபதாவது அகவையை நிறைவு செய்யும் இவர் நல்லாற்றலும்,நீண்ட ஆயுளும் பெற்று தனது குடும்பத்தவருடன் நீடுவாழ இறையருளை வேண்டுகின்றேன்.

கலாபூஷணம், சைவப்புலவர்
செ.குணபாலசிங்கம் (ஆ.அ) குடும்பத்தினர்.

### பன்முக

ஸ்தபதி செல்லப்பா சண்முகநாதன் ஆச்சாரி

யாழ்ப்பாணத்து இந்துச் சூழலில் கலைய
கியமும் தாமாய் ஒன்றிணைய அமைதியாய்
அரும்பணி ஆற்றிடும் கலைஞர் மயிலையூர
பதி செல்லப்பா சண்முகநாதன் ஆச்சாரியா
04.04.2013 அறுபதாம் அகவை நிறைவினி
விழா நாயகனாய் விளங்குகின்றார்.

யாழ்ப்பாணம் அல்லது வட இலங்கை
கலை வரலாற்றில் பெரும் செல்வாக்குச்
நிற்கும் மகா சில்பி விலாட சங்கிலித் தவ
குருக்கள் ஆச்சாரியார் தம் மரபினில் மயிலிட்டி
காங்கேசன் துறையில் பிறந்தவர். இவர் இட
வுக் காலத்தில் சிறுவிளான், மட்டுவில்,
வவுனியா எனப் பரந்து தற்போது நீர்வேலியி
கொண்டு வாழ்ந்து வருகின்றார்.

ஸ்தபதி செ-ச வின் கலைப் பெரும் வா
நாம் பின்வருமாறு அறுவகையாகப் பரிந்து
பயன் மிக்கதாகின்றது.

1. கலைபயில் சிறுவனாக...
2. ஸ்தபதி நவரத்தினத்தின் இளவலாக..
3. குருவின் அடி தொடரும் கலைஞனாக
4. நாடகக் கலைஞனாக...
5. கல்வெட்டு இலக்கியக் கவிஞனாக...
6. ஆத்மீக ஞானியாக

#### கலைபயில் சிறுவனாக....

மயிலிட்டி வடக்குக் கலைமகள் மகாவி
யமாய் பெயர் பெற்று விளங்கும் கல்விக் கூ
தனது ஆரம்பக் கல்வியை பயின்று காங்கே
மகாவித்தியாலயத்தில் உயர் கல்வியைப்
செய்த சண்முகநாதன், பெரிய தந்தையாரும்
களில் பெரும் புகழ் பெற்று விளங்கிய வாக
யும் ஆகிய அமரர் மயிலிட்டியூர் முருகேசு க
ஆச்சாரியார் தம் நிழலில் சிற்பக் கலையின்
வடியைப் பயிலலானார். இலங்கையின் தலை
சிற்பிகளில் ஒருவரெனத் திகழ்ந்த பேராச
திட்ட நுட்பம் செறிந்ததும், செம்மை செ
மாகிய உரு வரை திறனும், செதுக்கும் திற
டம் ஒட்டி உறவாடத் [illegible]டங்கியமை
சாதனைக்கு வித்திடலாயிற்று.

#### ஸ்தபதி நவரத்தினத்தின் இளவலாக....

அதே கனகசபை ஆச்சாரியாரின் முத
வனும் மருமகனும் ஆகிய ஸ்தபதி சி-நவ
ஆச்சாரியாரின் இளவலாகவும், உதவி
யாகவும் இவர் பணியாற்றிய காலம் இந்த இ
ஞர்களினதும் சாதனைக்காலம் ஆகவே தி
திகழ்ந்து வருகின்றது எனலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமன்
இலங்கைத் திருநாட்டிலும் கூட 1970-19
பெரிதும் விதந்து பேசப்பட்ட மயிலிட்டி
சித்திரத்தேர் யாழ்ப்பாணத் தேர்க்கலை மரபி
சிறந்ததோர் கலைப் படைப்பாகத் திகழ்
நாளில் அதிகளவு மூலப் பொருள்களையு
திறன் சார்ந்த நிர்மாணத்தினையும் தன்
கொண்ட இத்தேர் தேரமைப்பியல் வல்
பாராட்டைப் பெற்றது. நவரத்தினம் ஸ்தபதி
நாதன் ஸ்தபதி ஆகிய இவ் இருவர் தொடர்
துரைக்க வந்த மகாராஜஸ்ரீ-சு.து-சண்மு
குருக்கள் முருகனுக்கு வாய்த்த வீரவாகு
போல நவரத்தினத்துக்குக் கிடைத்தவர்
நாதன் என்று பாராட்டியமை விதந்து குறிப்
வேண்டியதாகின்றது. 1984 இல் நிர்மாணி
கரவெட்டி தச்சந் தோப்புப் பிள்ளையார் திரும
மாணத் திறனும்,கவர் திறனும் உடையதோ
படைப்பே.

வலிகாம இடப்பெயர்வின் பின்னரான
வாழ்வின் போது புகழ் பெற்றவற்றாப்பளை
ணகை அம்மனுக்கு குருவுடன் இணைந்

### அன்புக்குரிய தம்பி சண்மு

அகவை அறுபதை எட்டும் எனது அ
நீண்டநாள் தொடர்பின் பேரில் அவர்தம்
நன்கு தெரிந்தவன் என்ற வகையில்...
பண்பாடும் கொண்டவர் என்பதனை
மிகவும்திறமையுடன் செய்யும் எனது அ
வாகனங்கள் போன்றவற்றைச் செய்யவும்
சிறப்புடனும் வாழ எமது குல் தேவியாகி
கருணையை வேண்டி வாழ்த்துகிறேன்.

### மணிவிழாக் குழு:-

வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் (M.Phil)
ஞானப்பிரகாசம் அன்ரன் ஞானராஜ் (சுவிஸர்லாந்து).
சண்முகநாதன் ஜெயந்திரன் (பல்கலைக்கழகம்)

(13995)(10.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...வப்பிரம்மனே நமஹ"

# ...ம் மயிலையூரான்



## குருவுக்கு விடைகொடுத்த பின்னர்



...ாக...

## பல்துறை ஆளுமை கொண்ட ஸ்தபதி

# செல்லப்பா சண்முகநாதன் அவர்கள்

## அகவை அறுபதை (60) எய்துகின்றார்.









## ...தார வாழ்த்துகின்றோம்

### பன்முகம் காட்டும் கலைஞன்

நாதன் ஆச்சாரியார்
சூழலில் கலையும் இலக்
அமைதியாய் இருந்து
நர் மயிலையூரான் ஸ்த
ன் ஆச்சாரியார் இன்று
வை நிறைவினில் மணி
றார்.
வட இலங்கை இந்துக்
செல்வாக்குச் செலுத்தி
சங்கிலித் தவண்டைக்
னில் மயிலிட்டி வடக்கு
வர். இவர் இடப் பெயர்
மட்டுவில், மல்லாவி
து நீர்வேலியில் நிலை
ர்.
ப் பெரும் வாழ்வினை
யாகப் பரிந்துரைப்பது

க...
ன் இளவலாக...
ம் கலைஞனாக..
..
கவிஞனாக...

லமகள் மகாவித்தியால
ம் கல்விக் கூட்டத்தில்
ன்று காங்கேசன்துறை
கல்வியைப் பூர்த்தி
தந்தையாரும் எழுபது
விளங்கிய வாகன சிற்பி
ர் முருகேசு கனகசபை
பக் கலையின் அரிச்சு
ங்கையின் தலை சிறந்த
ழ்ந்த பேராசான் தந்த
செம்மை கொண்டது
துக்கும் திறனும் இவரி
டங்கியமை ... ல்ச்

வலாக...
ரியாரின் முதல் மாண
ஸ்தபதி சி-நவரத்தினம்
வும், உதவி ஸ்தபதி
காலம் இந்த இரு கலை
ம் ஆகவே திகழ்ந்தது.
ம்.
தில் மட்டுமன்றி முழு
ட 1970-1990 களில்
மயிலிட்டி முருகன்
தர்க்கலை மரபில் தலை
பாகத் திகழ்தது. அந்
ருள்களையும் கலைத்
னையும் தன்னகத்தே
ப்பியல் வல்லாளரின்
தினம் ஸ்தபதி, சண்முக
ருவர் தொடர்பில் கருத்
நீ-சு.து-சண்முகநாதக்
ப்த்த வீரவாகு தேவர்
கிடைத்தவர் சண்முக
விதந்து குறிப்பிடப் பட
இல் நிர்மாணிக்கப்பட்ட
ளையார் திருமஞ்சம் நிர்
ம் உடையதோர் கலைப்

ன் பின்னரான மல்லாவி
றவற்றாப்பளைக் கண்
டன் இணைந்து இவர்

நிர்மாணித்த திருமஞ்சம் அழகும், கவர்திறனும், அமைப்பும் நிறைந்ததென்பது இவ்விடத்தில் சுட்டப் பட வேண்டியதோர் விடயமாகும்.

**குருவின் அடி தொடரும் கலைஞனாக....**

வன்னிப் பெருநிலப்பரப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்களையும் சிறு தேர்கள் ரதங்களையும் நிர்மாணம் செய்து தமது கலைத்திறனை வெளிப்படுத்தி நிற்கும் சண்முகநாதன் ஆச்சாரியார் ஆகம-சில்ப கிரியா ஞானம் கைவரப் பெற்றிருப்பது தனிக் கவனம் பெற வேண்டியதாகும்.

**நாடகக் கலைஞனாக.....**

பாடசாலைக் காலத்தில் பண்ணிசை, நாடகம் போன்ற துறைகளில் ஆர்வம் கொண்டிருந்தமையால் இவர் நாடகத் தயாரிப்பாளராகவும், நெறியாளராகவும், பாடகராகவும் பின்னாளில் உருவெடுக்க வழி கோலியது. இது இவர் தம் பன் முகத் திறனைக் காட்டி நிற்கும் அம்சமாகும்.

**கல்வெட்டு இலக்கியக் கவிஞனாக.....**

மயிலிட்டி தொடக்கம் மல்லாவி வரையிலும் பரந்திருக்கும் வட புலத்திலே தமது உணர்வு கலந்து வழங்கியிருக்கும் "கல்வெட்டு இலக்கியம்" ஆகிய நினைவு மலர் ஆக்கத் துறையில் பெரும் பங்களிப்பு நல்கியுள்ளார். பத்தொன்பது வயதில் பெரிய தந்தையும் முதற் குருவுமாகிய அமரர் மு. கனகசபை ஆச்சாரியார் அவர்களுக்கு தனது முதலாவது கல்வெட்டு இலக்கியத்தை யாத்த இவர் இலக்கியங்களையும் தந்து தனக்கென்றோர் இடம் பிடித்திருப்பது அனைவரதும் கவனத்திற்குரியதாகும்.

**ஆந்மீக ஞானியாக....**

மயிலிட்டி சங்கவத்தை அம்பலவாணர் சுவாமி மாணிக்கப்பிள்ளையார், கும்மாலை அம்மன், சிறுவிளான், காளி அம்மன், யோகபுரம் சிவன் ஆகிய ஆலயங்களில் தொண்டு செய்யத் தொடங்கிய சண்முகநாதன் இடம் பெயர் வாழ்வில் அனுபவித்திருந்த இன்னல்களுக்குப் பேரருள் வேண்டி சபரி மலை நாதன் ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் பக்தனாக உருவெடுக்கலானார். அப் பெரும் பேரருட் பிரவாகத்தின் ஒளியில் தூய இந்து வாழ்வு வாழ்ந்து வருபவர். வருடந்தோறும் இந்திய கேரள சபரி மலை யாத்திரை செய்து தனது நாடு, தனது மொழி.மதம், இனம் சமூகம் இன்னல் தீர்ந்து நல் வாழ்வு வாழ வேண்டுமெனப் பிரார்த்தனை செய்வது இவர் தம் சமூக- சமய-கலை அரசியலை வெளிப்படுத்தும்.

**நிறைவுரை**

தொகுத்து நோக்கும் போது, மணிவிழாக் காணும் பன்முகக் கலைஞன் மயிலிட்டியூர் செ.சண்முக நாதன் ஸ்தபதியார் வட புலத்தின் இந்துப் பண்பாட்டுச் சூழலில் கலை இலக்கியத் துறையில் பெரிதும் பங்களிப்பு நல்கியிருப்பதும் தமது பாரம் பரியமான மயிலிட்டியூர் மகா சில்பி விலாட சங்கிலித் தவண்டைக் குருக்கள் ஆச்சாரியார் மரபிற்கு நல்ல தோர் எடுத்துக் காட்டாக விளங்குவதும் தெரியவரும். இது போற்றப் பட வேண்டியது பாராட்டப் பட வேண்டியது: பெரிய தோர் சமூகத்தினரது மன மகிழ் விற்குரியதும் கூட

வாழ்க சண்முகநாதக் கலைஞன்!
வளர்க அவர் தம் பேரும் புகழும்!!

வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் M.Phil
செயற்திட்ட அலுவலர்,
முறை சாராக் கல்வி,
வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்.
காங்கேயன் கலைக் கோட்ட பணிப்பாளர்.

## ...பி சண்முகநாதனுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்

...டும் எனது அன்புக்குரிய தம்பி செல்லப்பா சண்முகநாதன் அவர்களுடன்
...ரில் அவர்தம் நற்குண இயல்புகளையும், தொழில்சார் பெருமைகளையும்
... வகையில்..... மற்றையோருடன் மிகுந்த மரியாதையும், அடக்கமான
... என்பதனையும், விஸ்வகர்ம தொழில்சார் மரவேலைச் சிற்பங்களை
...ம் எனது அருமைத் தம்பி மென்மேலும் பல சிற்பங்களையும், ரதம்,
... செய்யவும் மனைவி, மக்கள், உறவினர்களுடன் பல்லாண்டு காலம் சீரும்
...ல் தேவியாகிய அராலி தெற்கு விஸ்வேஸ்வரி ஸ்ரீ காளிகா தேவியுடைய
...துகிறேன்.

ஸ்தபதி.விஸ்வப்பிரம்மஸ்ரீ
சி.அமரசிங்கம், ஆச்சாரி, அராலி.

### வாழ்த்துச் செய்தி

செல்லப்பா சண்முகநாதன் அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சி யடைகிறேன்.

கலை உலகில் புகழ் பூத்த மயிலிட்டியைச் சேர்ந்த செல்லப்பா சண்முகநாதன் அவர்கள் ஸ்தபதி சி. நவரத்தினத்தை குருவாகக் கொண்டவர்.

மணி விழா நாயகன் சண்முகநாதன் கலை உலகில் இன்னும் பல அற்புதப் படைப்புக்களை படைத்து உன்னதமான சிற்பக் கலைஞனாக நீண்ட ஆயுளும், எல்லா நன்மைகளையும் பெற்று வாழ இறையருளை வேண்டி ஆசி கூறி அமைகிறேன்.

கலாபூஷணம்
க.இராசரத்தினம்.

### மணிவிழா வாழ்த்து

யாழ். மயிலிட்டியூரைச் சேர்ந்த சிற்பவல்லுநர் ஸ்தபதி செல்லப்பா சண்முகநாதன் அவர்கள் மணிவிழாக் காணும் நன்நாளை எமது பரிபாலனசபை மகிழ்வாய் வாழ்த்துகிறது. இவர் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக எமது ஆலயத்துடன் தொடர்புடையவர்.

குருவின் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுக்கும் செயற்திறனாளன் 2001ஆம் ஆண்டு வெள்ளோட்டம் கண்ட சித்திரப்பெருமஞ்ச உருவாக்கத்தில் மணிவிழா நாயகன் சண்முக நாதனின் சிற்பவியல் பங்களிப்பு அளவிடற்கரியது. மகிடாசூரன் படைப்பும் மகத்தானது.

பாரம்பரிய கலைஞர்களும் கலைப்படைப்புகளும் அருகிவரும் இக்காலத்தில் தேடுதற்கரிய இப்படைப்பாளியின் பணி சிறந்தோங்கவும், சுகபலமும் நீண்ட ஆயுளும் பெற்று நல்வாழ்வு வாழவும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

மு.குகதாசன் (தலைவர்)
பரிபாலனசபை.

### யோகபுரச் சிவனின் தொண்டனுக்கு வாழ்த்து

யாழ். மயிலிட்டியின் மணிவிழா நாயகன் செல்லப்பா - சண்முகநாதன் அவர்களின் சேவையை மல்லாவி மண்ணும் பெற்றதையிட்டு பெருமையடைகின்றோம்.

யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் தேவஸ்தான ஆஸ்தான சிற்பியாக ஆலயத்தின் அருகிலிருந்து தனது பணியை செவ்வனே செய்தவர். எமது ஆலயத்துக்கு முதன்முதலில் தேக்கு மரத்திலே தனது உயர் தொழிற்திறமையைப் பிரயோகித்து கொடிஸ்தம்பம் ஒன்றினை வார்த்தெடுத்தது போன்ற வட்டுறுப்புடன் செதுக்கி வாணீஸ் பூசிப் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றதோடு எமது ஆலயத்தினரின் அன்பிற்கும் பாத்திரமானார். இதனைவிட எமது ஆலயத்தில் காணப்படும் எம்பெருமான் எழுந்தருளும் உயிரோட்டமான வாகனங்களும் இவரின் படைப்புக்களேயாகும்.

சிற்பத்தோடுமட்டுமல்லாது சிறந்த கவிஞராகவும் தன்னை இனங்காட்டினார். உதாரணமாக எமது ஆலயத்தின் மகோற்சவத்தில் துவஜா அவரோகணம் (தீர்த்தத் திருவிழா) அன்று ஆலயத்தை, அந்தணர்களை, அடியவர்களை வாழ்த்திப் பாமாலை இயற்றிப் பாடும் தன்மை இவரது கவித்துவத்தையும், கலைத்துவத்தையும் மெருகேற்றுகிறது.

மல்லாவி மக்களுக்கு சபரிமலை ஐயப்பன் விரத வழிபாட்டை அறிமுகம் செய்த இவர் " அருள் வழங்கும் ஐயப்பன்" எனும் வில்லிசை ஒன்றினையும் உருவாக்கி எம்பெருமான் சந்நிதியில் அரங்கேற்றிய ஆன்மீக வாதியாவார். எமது ஆலயம் சிறப்பாகச் செயற்பட உதவிய அன்பர்களுள் இவரது பாத்திரமும் கனமானது என்றால் அது மிகையாகாது.

இவரைப்போன்றே இவரது பிள்ளைகளது பங்களிப்பும் எமது ஆலயத்துக்கும் நகருக்கும் பெரிதும் பயனுடையதாக அமைந்திருந்தது. பண்ணோடு பஞ்சபுராணம் ஓதுதல், ஆலயங்கள் மீது பாடல்கள் இயற்றிப்பாடுதல், அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குக் கற்பித்தல், நேரடி வர்ணனை, சிரமதானம் போன்ற பல சமூக நற் செயல்களைச் செய்து மக்களின் மனதில் இடம்பிடித்துக் கொண்டவர்கள்.

சைவ சமய ஒழுக்கத்தோடும் பண்போடும் வாழ்ந்துவரும் சண்முகநாதன் ஆச்சாரியார் அவர்கள் சைவத்துக்கும், தமிழுக்கும் இன்னும் நீண்டகாலம் தொண்டாற்றி, நீண்ட ஆயுள் பலத்தோடு பல்கலை வித்தகனாக வாழ்ந்து, யோகபுரத்துச் சிவனுக்குத் தொண்டாற்ற எல்லாம் வல்ல யோகாம்பிகை சமேத யோகபுரநாதரை வேண்டுகின்றோம்.

தி.சோதிலிங்கம், தலைவர்,
யோகபுரம் சிவன்தேவஸ்தானம்.

### கிளியண்ணைக்கு மணிவிழா வாழ்த்துக்கள்

யாழ்.மயிலிட்டி மண் பெற்றெடுத்த செல்லப்பா சண்முகநாதன் (கிளியண்ணை) அவர்கள் மகுடம் சூடிய மணிவிழா நாயகனாகத் தனது அறுபதாவது அகவையிலே கால்பதிப்பதையிட்டு அக நிறைவடைகின்றோம். அறுபதைத் தாண்டி ஆண்டுகள் நூறுவாழ கந்தனை வேண்டுகின்றோம்.

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இரு தசாப்தத்திற்கும் மேலாக ஆஸ்தான சிற்பக்கலைஞனாக இருந்து தேவஸ்தான மரச் சிற்ப வேலைகளை தன் கை வண்ணத்தால் அழகொளிரப் படைத்துக் கொண்டிருக்கும் சிறந்த சிற்பியாக, கவித்துவம் மிக்க புலவனாக, கந்தனிடத்தில் அளவு கடந்த பற்றுக் கொண்ட அடியவனாக, மாந்தர்களை உயர்வாய் மதிக்கும் மனிதனாக பல்துறை ஆளுமை வீச்சோடு பவனிவரும் செல்லப்பா சண்முகநாதன் அவர்கள் எமது ஆலயத்துக்கு முருகப் பெருமான் வீதியுலா வருவதற்காக திராவிட மரபிலமைந்த முகபத்திர சித்திரப் பெருந்தேர் ஒன்றை மிகப் பெரும் படைப்பாக அமைக்கவுள்ளார் என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டி எல்லாம் வல்ல முருகப் பெருமானின் அருளை இறைஞ்சி மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துவதில் கிளி.கந்தசுவாமி தேவஸ்தான பரிபாலன சபையினர் பேருவகை அடைகின்றோம்.

கிளிநொச்சி கந்தசுவாமி தேவஸ்தான
பரிபாலன சபையினரும், அடியவர்களும்.

### "பிள்ளையார் அப்பு தந்த பெரியதம்பி அண்ணா"

அகவை அறுபது காணும்
அண்ணனுக்கு வாழ்த்துக்கள் கோடி!
மூன்று தலைமுறை நட்பே,
உம்மை நாம் நேசித்தது
உறவிற்கும் மேலான உறவாய்.
தமிழையும் தந்தாய், கலையையும் தந்தாய்
நல்லாசானாய் நின்று வழிகாட்டியுமானாய்.
எம் பெற்றோர் திருமணத்தில்
தந்தையும் தனையனும் செய்த
முறிப்பந்தலை எம்மூரார் இன்றும் கதைக்கின்றனர்.
நாம் ஐவர் ஆடிய சித்திரத் தொட்டிலின்
சிற்பியும் நீயல்லவோ:
ஆசாரம் நிறைந்த ஆச்சாரியே,
உன் இளம் துடிப்பின் பதிவான
மயிலை முருகன் சித்திரத்தேர்
இன்றும் எம் மனதின் நினைவாக!

மாவட்டம் தாண்டி வன்னியிலும்
உன் வண்ணக் கைவண்ணம் காட்டினாய்
உம் தமிழாற்றல் பெரியது
புராணம் தொட்டு புதுக்கவிவரை வீசியது
கல்வெட்டுக்களில் உன் பேனா சிந்திய மை
எத்தனையோ எழுத்தாளர்களைச் சிந்திக்க வைத்தது.
அங்கொன்றும் இங்கொன்றாய்
நீசிந்தியவற்றை ஒன்றாக்கி
எமக்கொரு மலர்கொடு
யுத்தத்தின் பிடியால் பல கஸ்டங்கள் கொண்டாய்
அத்தனையும் நீங்கி நீவாழ வேண்டும் நல்வாழ்வு
காணிக்கை அன்னையின் அடியினை வேண்டி
ஐயப்பன் சாமியை வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்
ஞானப்பிரகாசம். அன்ரன் ஞானராஜ்.
(கவிலர்லாந்து).

### பெரும் தந்தையே வாழிய நூறாண்டு


யாழ்ப்பாணம், மயிலிட்டி ஸ்தபதி செல்லப்பா சண்முகநாதன் அவர்கள் அறுபதாம் அகவையினை நிறைவு செய்து மணிவிழாக் காணும் நன்னாளில் இவரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவர் ஒரு சிறந்த சிற்பக் கலைஞனும், அற்புதமான கவிஞனும் ஆவார். சித்திரத்தேர், மஞ்சம், சப்பரம், வண்ணமிகு வாகனங்கள் என்பவற்றை உருவாக்கியுள்ளார். தொடர்ந்தும் அத்துறையில் பயணித்துக் கொண்டிருக்கிறார். எனது பெரிய தந்தையான சண்முகநாதன் அவர்களை நோய் நொடி இல்லாமல் நூறாண்டு காலம் வாழ ஊற்றங்கரை சித்தி விநாயகரின் அருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்

அன்பு மகன் தி.பதுர்சிகன், தரம் 8,
யூ/வித்தியானந்தாக் கல்லூரி.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** எதிர்மறையாக பேசுபவரிடம், நீங்கள் மறுமொழி பேச வேண்டாம். மன அமைதியைப் பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபார இலக்கு, கால அவகாசத்தில் நிறைவேறும். அளவான பணவரவு கிடைக்கும். தவிர்க்க இயலாத வகையில் பணச்செலவு ஏற்படலாம்.

**இடபம்:** உங்களது சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். முன்யோசனை செயல், நன்மைபெற உதவும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாத்திடுவீர்கள். அளவான பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** உங்கள் லட்சியக் கனவை நிறைவேற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர் மனப்பூர்வமாக வாழ்த்துவர். தொழில், வியாபார வளர்ச்சி திருப்திகரமாகும். பண வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** உங்கள் பேச்சில் புத்திசாலித்தனமும், வசீகரமும் நிறைந்திருக்கும். புதியவர்கள் நட்புப் பாராட்டுவர். தொழில் வளர அனுகூலக் காரணி பலம் பெறும்.

**சிம்மம்:** தன்னைச் சார்ந்தவர்களின் மீது, அதிருப்தி எண்ணம் ஏற்படலாம். செயல் நிறைவேறுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறையை சரி செய்வது நல்லது. முக்கிய செலவுக்கு, சேமிப்பு பணம் பயன்படுத்துவீர்கள்.

**கன்னி:** சிலர் உங்களிடம் எதிர்மறையாகப் பேசுகிற சூழ்நிலை இருக்கும். பெருந்தன்மையுடன் விலகுவதால் நேரமும், மன அமைதியும் கிட்டும். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இயங்கும். பணச்செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவீர்கள்.

**நாளை**

பங்குனி-23 வெள்ளிக்கிழமை 05.04.2013
திதி: தசமி மு.இ.07.29 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.இ. 09.54 வரை
சுபநேரம்: 06.08- 07.38 வரை
இராகுகாலம்: 10.38- 12.08 வரை

**துலாம்:** மங்கலத் தன்மையுடன் பேசுவீர்கள். நற்குணம் உள்ளவர்களின் நட்பு எளிதாகக் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க, தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**விருச்சிகம்:** உங்களின் நற்செயலை, சிலர் பரிகாசம் செய்வர். பணிகளின் முக்கியத்துவம் உணர்ந்து, அவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் சீர் பெற, கூடுதல் நேரம் பணிபுரிவீர்கள். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** திகைப்பு தந்த பணியை எளிதில் நிறைவேற்றுவீர்கள். போட்டி, பந்தயத்தில் ஓரளவு வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை பெருகும். குடும்பத் தேவைக்கு தாராளமாகப் பணம் செலவு செய்வீர்கள்.

**மகரம்:** உங்கள் செயல்களில் கூடுதல் கவனம் வேண்டும். இல்லறத் துணையின் ஆலோசனை நல்வழி நடத்தும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்க, சில மாற்றங்களைப் பின்பற்றுவீர்கள். பணவரவில் இருந்த தாமதம் விலகும்.

**கும்பம்:** உங்கள் செயல்களில் பிறர் நலன் குறித்த அக்கறை அதிகரிக்கும். மனதில் நிம்மதியும், பெருமிதமும் ஏற்படும். தொழில், வியாபார வளர்ச்சி திட்டமிட்டபடி நிறைவேறும்.

**மீனம்:** உங்கள் செயலில் நேர்த்தியும், புதிய பரிமளிப்பு தன்மையும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் இனிய அணுகுமுறையால், வியத்தகு வளர்ச்சி பெறும். கூடுதல் லாப விகிதம் கிடைக்கும். உறவினர் குடும்ப சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 2 | | | 1 | 9 | 5 | |
| | | 3 | 9 | | 5 | | | |
| 5 | 4 | | | | | | | |
| 3 | 2 | | | | | 4 | | 6 |
| 4 | 9 | | 3 | 6 | 7 | | 1 | 5 |
| 6 | | 5 | | | | | 7 | 8 |
| | | | | | | | 6 | 2 |
| | | | 7 | | 4 | 1 | | |
| | 8 | 1 | 2 | | | 7 | | 4 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 3 | 2 | 7 | 5 | 1 | 8 | 4 |
| 2 | 5 | 1 | 8 | 4 | 3 | 7 | 6 | 9 |
| 4 | 8 | 7 | 1 | 6 | 9 | 3 | 3 | 5 |
| 1 | 7 | 2 | 6 | 8 | 4 | 9 | 5 | 3 |
| 3 | 4 | 6 | 5 | 9 | 7 | 8 | 2 | 1 |
| 5 | 9 | 8 | 3 | 2 | 1 | 6 | 4 | 7 |
| 7 | 2 | 5 | 9 | 3 | 8 | 4 | 1 | 6 |
| 6 | 1 | 4 | 7 | 5 | 2 | 3 | 9 | 8 |
| 8 | 3 | 9 | 4 | 1 | 6 | 5 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இந்திய அரசின் நிதி உதவியுடன் நுவரெலியாவில் அமைக்கப்பட்ட இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் பயிற்சி நிலையம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்துக்கு கையளிக்கப்பட்ட உபகரணங்களை இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா உட்பட பலர் பார்வையிடுகின்றனர்.

# கிழக்கில் புலிகளின் கோட்டையாக இருந்த குடும்பிமலையில் போர் நினைவுச் சின்னம்

## 4 ஆம் ஆண்டு நிறைவு வெற்றி விழாவன்று திறக்க இராணுவம் ஏற்பாடு

மட்டக்களப்பு,ஏப்.4

மட்டக்களப்பு, குடும்பிமலையில் இலங்கை இராணுவத்தினர் புதிய போர் நினைவுச்சின்னம் ஒன்றை நிறுவி வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், வன்னியில் இலங்கைப் படையினரின் தமது போர் வெற்றியை நினைவு கூரும் வகையில் நினைவுச்சின்னங்களை அமைத்து வருகின்றனர்.

இறுதிப் போர் நடைபெற்ற பகுதியில், போர் நினைவுச்சின்னங்களை அமைத்து, அந்தப் பகுதிகளை சிங்கள மக்களின் முக்கிய சுற்றுலாப் பகுதியாக்கியுள்ளது இலங்கை இராணுவம்.

இந்தப் போர்ச்சுற்றுலா மையங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள், இன நல்லிணக்கத்துக்கு உதவாது என்று அனைத்துலக ஊடகங்கள் விமர்சித்து வருகின்ற நிலையிலும், கிழக்கில் மற்றொரு நினைவுச் சின்னத்தை இலங்கைப் படையினர் அமைத்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் கோட்டையாகவும், இலங்கை படையினருக்கு பெரும் சவாலாகவும் விளங்கி வந்த குடும்பிமலையிலேயே இந்த நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போர் நினைவுச் சின்னத்தின் கட்டுமானப் பணிகளை இலங்கை இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கடந்த வாரம் பார்வையிட்டு, ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இந்த நினைவுச்சின்னம் அடுத்தமாதம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட நான்காவது ஆண்டு நிறைவு நிகழ்வில் திறந்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடும்பிமலையைக் கைப்பற்றுவதற்கான போரில் உயிரிழந்த இலங்கைப் படையினரின் நினைவாக கரடியனாறு, இலுப்பையடிச் சேனை சந்தியில் நினைவுச் சின்னம் ஒன்றை 2007ஆம் ஆண்டு இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ திறந்து வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-சி)

# புல்மோட்டையில் அபிவிருத்தி

திருகோணமலை, ஏப்.4

இலங்கை கனியவள இல்மனைட் கூட்டுத்தாபனம் கடந்த வருட இலாபப் பணத்தில் இல்மனைட் தொழிற்சாலை அமைந்துள்ள புல்மோட்டை பிரதேசத்தின் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

புல்மோட்டை பொது வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களை கடந்த வியாழக்கிழமை கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பான அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் தயாசிறி திஸ்ஸ பெரேரா புல்மோட்டை வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சமூனிடம் கையளித்தார்.

ஏற்கனவே கூட்டுத்தாபன நிர்வாகம் புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு இலாபத்தில் ஒரு பகுதியைப் பங்கிட்டு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

# கிளிநொச்சித் தாக்குதல் மிலேச்சத்தனமான செயல்

## கண்டிக்கிறார் 'ரெலோ'வின் செயலர்

அம்பாறை, ஏப்.4

கிளிநொச்சியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் நடத்திய ஜனநாயக ரீதியான மக்கள் சந்திப்பின் போது நடத்தப்பட்ட தாக்குதல் மிலேச்சத்தனமானது.

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) செயலாளர் ஹென்றி மகேந்திரன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சமகால நிகழ்வுகள், மீள் குடியேற்றம் மற்றும் தேவைகள் தொடர்பாக ஆராய்வதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் சந்திப்புக்கான கூட்டம் தேசியக் கொடியுடன்வந்த குண்டர்கள், கைக்கூலிகளால் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

அதில் பொது மக்கள் பதினைந்துக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ள அதே வேளை, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மயிரிழையில் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருடன் வந்த கும்பலொன்றே இந்த அநாகரிக அடாவடித்தன தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

தமிழ் மக்களின் பிரச்சினையும் அவலங்களும் குறித்து சர்வதேசமே உரத்துக் குரல் கொடுத்துவரும் கால கட்டத்தில் தமிழர் பிரதேசங்களில் ஜனநாயக உரிமைகள் எந்தளவுக்கு அடக்கி, ஒடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை கிளிநொச்சி தாக்குதல் சம்பவம் மீண்டும் உலகுக்கு வெளிக்காட்டி நிற்கின்றது.

வடக்கில் ஜனநாயக அரசியல் உரிமைகளுக்கே சவால் விடும் வகையில் இதுவரை இத்தகைய பல் வேறு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எனவே கிளிநொச்சித் தாக்குதல் சம்பவம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இத்தகைய ஜனநாயக விரோதச் சம்பவங்கள் இனியும் தொடராதிருக்க சம்பந்தப்பட்டவர்கள் மீது நீதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# சூரங்கல் கிராமத்துக்கு சீரற்ற பஸ் சேவை

## ஓட்டோவில் பயணிக்கும் அவலம்

திருகோணமலை, ஏப்.4

திருகோணமலையிலிருந்து கிண்ணியா பிரதேச செயலர் பிரிவிலுள்ள சூரங்கல் கிராமத்துக்கு ஒழுங்கான பஸ் சேவை நடத்தப்படாததால் அப்பகுதி கிராம மக்கள் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

திருகோணமலை நகரிலிருந்து சூரங்கல் கிராமத்துக்கு ஐந்நூறு ரூபா கொடுத்து ஓட்டோவில் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக வேண்டியுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர். ஒழுங்காக பஸ்சேவை நடத்தப்படாமையால் மாணவர்களும், தொழிலாளர்களும் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாவதாக மக்கள் கவலை தெரிவித்தனர். (ச-40)


பிறந்தநாள் வாழ்த்தும் ஓய்வு பெறுதலும்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்
ஆய்வுகூட உதவியாளராகச் சேவையாற்றி
நேற்று (03.04.2013) புதன்கிழமை ஓய்வில்
சென்று, இன்று 04.04.2013 இல் பிறந்த நாளைக்
கொண்டாடும் எங்கள் பாசத்துக்குரிய தந்தை

சண்முகநாதன் பாலகிருஷ்ணன்



அவர்கள் அல்லாரை அறுகம்புல விநாயகரின்
அருட்கடாட்சத்துடன் சகல செல்வங்களும்
பெற்று சீருடனும் சிறப்புடனும் நீடூழிகாலம்
வாழ்கவென அன்புடன் அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

(35532)(10,6,7)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
தெய்வானை சுப்பிரமணியம்

தோற்றம்:- 17*05*1943
மறைவு :- 05*03*2013

கருவைச் சுமந்து கருவறைக்குள் சுவாசம் தந்து
கண்ணயராது விழித்திருந்து சீராட்டி வளர்த்த தாயே!
எம் வலிகளை ஏற்று வேதனைகளைச் சாதனைகளாக்கி
வாழ்வில் இடையே பல சவால்களை வெற்றியாக்கி
சுமைகளிலும் சுகம் கண்ட அம்மா....
பசிக்காத போதும் உன் சுவைகேட்டு புசித்தோம்
இன்று பசிக்கிறது ஆனால் புசிக்க முடியவில்லை....
வாயடைத்துப் போனோம் எங்கள் அம்மா – சடுதியில்
இறைவனவன் உங்களை அழைத்தகாலே –இறைதொண்டு
தளராது செய்ததால் தன்னருகில் அழைத்தானோ இறைவன்!
அன்பின் வடிவாக அவதரித்த தியாகத்தின் வாழ்விடம் – அம்மா
உன்னிடம் பெற்ற கடனதனை எத்தனை பிறவி எடுத்தாலும்
தீர்த்திட முடியாது – தீராத சோகமதில் புரண்டு அழும் எங்களுக்காய்
மீண்டும் மண் மீது வந்து ஆறுதல் தந்திடம்மா....

எமது குடும்ப விளக்கின் பிரிவால் நாம் துயருற்றிருந்த போது அனைத்து வழிகளிலும்
எமக்கு ஆறுதல் வழங்கியவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து
கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (04.04.2013)
வியாழக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும்
அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மஜோதி வீதி,
ஏழாலை கிழக்கு, ஏழாலை.

குடும்பத்தினர்.



காணி விற்பனைக்கு

கோப்பாய் கிளுவானை ஒழுங்கையிலுள்ள 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை)

(35588) (6.7) தொடர்பு: 0773967334



சட்டறிங் அடித்துக் கொடுக்கப்படும்

கட்டடத்துக்கு சட்டறிங் உடன் அடித்துக் கொடுக்கப்படும்.
ஒரு ஸ்குயர் -7000/= மட்டும்

(35541)(6.7) தொடர்பு:0778167864



90 ஆம் நாள் நினைவு அஞ்சலி

மலர்வு
15
.
11
.
1983



உதிர்வு
05
.
01
.
2012



மலர்வு
09
.
10
.
2008

அமரர் நிஷாந்தினி சுகுமார்

சுகுமார் கிருத்திகன்

கட்டிய கோட்டைகள் எல்லாம் இடிந்து விழ
கடிதென வெள்ளத்தில் விரைந்தாய் பாலனுடன்
உன் நோய்க்கு மருந்தறியேன்! எந்தன் பாசம்
உணர முன்னர் அன்னையுடன் சென்றாயோ மகனே!
உடைந்துவிட்ட உள்ளத்தினால் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சு.சுகுமார்
(கணவர், தந்தை)

[illegible]
[illegible] பரந்தன்,
பரந்தன்.

(#/9236)(45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.4

அரியாலை கிழக்கு அ.த. க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பிரதி அதிபர் டெ.சேவியர் தலைமையில் நடைபெறும்.

நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராசா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள் அ. இரவீந்திரதாசன், வ. ஸ்ரீ கணேசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். (ஒ-17)

**திருமணசேவை**

1979, பரணி, செவ்வாய் அற்ற 30 பாவம், கனடா பொறியியலாளர் மணமகனிற்கு மணமகள் தேவை. குறிப்பு, படத்துடன் தொடர்பு கொள்ளவும்.

துர்க்கா திருமணசேவை

077 818 5978 (35626)(6.7.11)

# மாற்றுவலுவுடையவர்களுக்கு பயிற்சி நெறிகள் ஆரம்பம்

## முறைசாராக் கல்விப் பிரிவு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.4

மாற்று வலுவுடையவர் களின் திறன்களை ஊக்குவிக்கும் வகை யில் முறைசாராக் கல்விப் பிரி வின் ஏற்பாட்டில் தையல், அழகியல், கணினி தொடர்பான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாற்று வலுவுடையவர்க ளும் சுயமாகத் தொழில்களை ஆரம்பித்து வருமானத்தை ஈட்டக் கூடிய வகை யில் 6 மாத காலப் பயிற்சி நெறியாக முறைசாராக் கல்விப் பிரிவினர் இந்தப் பயிற்சி நெறிகளை இலவசமாக ஆரம்பித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளை மையப்படுத்தி இந்தப் பயிற்சி நெறிகள், யாழ் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் ஆர்வமுடையவர்கள் ஆடிய பாதம் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள முடியுமென்று வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் தெரிவித்துள்ளது.(க-14)

**வீடு விற்பனைக்கு /வாடகைக்கு உண்டு**

யாழ்.நீராவியடி 84,86 இலக்கத்தில் கல்லூரி வீதிக்கு அண்மையில் 7 அறைகளுடன் வீடு, காணி விற்பனைக்கும் / வாடகைக்கும் உண்டு

(C7277) (8.7) தொடர்பு: 0778072985

# கைதடி வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஏப். 4

கைதடி ஆயுள் வேத வைத்தியசாலையில் நோயாளர்களின் வருகை நாளாந்தம் அதிகரித்துள்ளதால் ஊழியர்ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரியான திருமதி பிறேமா சிவசண்முகராஜா தெரி வித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு போதனா ஆயுள் வேத வைத்தியசாலையாக இது காணப்படுகின்றது. இங்கு வடமாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணங்களில் இருந்தும் அதிகளவானோர் சிகிச்சைக்கென வருகை தருகின்றனர்.

நாளாந்தம் 200க்கும் மேற்பட்ட நோயாளர்கள், வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சுமார் 60 பேர் வரையில் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் வழங்கப்பட்ட போதிலும் ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. தற்போது உதவியாளர்கள், மருத்துவர்கள், மருந்து வழங்குநர்கள் ஆகியோருக்கான ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மேலும் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சைப் பெறுபவர்கள் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

ஆனால் இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதிய ஆளணி வசதி இல்லாத நிலையே காணப்படுகின்றது. போதிய ஆளணி வசதிகள் ஏற்படுத்தப்படுமாயின் நோயாளர்களுக்கு மேலும் சிறந்த சேவைகளைத் தம்மால் ஆற்றக் கூடியதாக இருக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-14)

**VACANCIES**

**VAVUNIYA CAMPUS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

University of Jaffna will entertain applications upto **17.05.2013** from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF BUSINESS STUDIES**

**Department of Finance and Accountancy**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in **Accountancy and Finance**

**Department of Economics and Management**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in **Marketing Management**

**FACULTY OF APPLIED SCIENCE**

**Department of Bio Science**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in **Environmental Science**

**Note:**

Preference will be given to those who have specialization at postgraduate level in **Wild life Conservation / Waste Management /Marine Environment and Management/Ecotourism/Micro Biology/Bio Technology** for the Post of Senior Lecturer Grade I/II

**Department of Physical Science**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in **Applied Mathematics and Computing**

Instructor in Computer Technology Grade II

**ENGLISH LANGUAGE TEACHING UNIT**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in **English Language Teaching**

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs.45,545 – 7x1050 – 52,895/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.39,755 – 11x790 – 48,445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27,775 – 10x645 – 34,225/-p.m |
| Instructor in Computer Technology Grade II | Rs. 26,020-3x645-27,955 (EB) 28,600-14x645 -37,630 p.m. |

**Note:**

In addition to the above salary, the following allowances will also be paid for academic staff:

i. Academic allowance – Senior Lecturer Gr. I/Gr. II - 72% of the basic salary
from 01.07.2013 - 80% of the basic salary
Lecturer (Probationary) - 49.875 % of the basic salary
from 01.07.2013 - 60% of the basic salary

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

The following allowances will also be paid for permanent post

ii. Special allowance - 15% of the basic salary
17.25% of basic salary from 01.07.2013
20% of basic salary from 01.10.2013

iii. Cost of living allowance of Rs.6,600/-p.m.

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits.
V. Free Medical Services.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.


**ஈரவிழியுடன் 4ஆம் ஆண்டு நிறைவில்**

தோற்றம்
01.03.1977

மறைவு
19.04.2009

**முருகேசு காந்தரூபன்**

திதி: 04.04.2013



ஆயிரம் உறவுகள் இருந்தும்
ஆறவில்லை எங்கள் மனம்
ஏகபுதல்வனாய் சோதரனாய் ஆசை மாமனாய்
இருந்து இன்று ஏங்க விட்டு எங்கு சென்றாயோ
நிழலாய் இருந்தவனே மைந்தா–இன்று
நிழல் படமாகி விட்டாயே
மண்ணை விட்டு விண் சென்று நாலாண்டு ஆனாலும்
மண்ணில் உள்ள வரை மறப்போமா உன்னை
நித்தம் எங்கள் நெஞ்சினிலே நீ பதிந்து
உன் கனவுகளுடன் ஒன்றித்து உருகித் தவிக்கின்றோம்.
எம் தெய்வமே! உன் ஆத்மா சாந்தி கொள்ளும் ஐயா.

வாளித் தொழிற்சாலை வீதி,
மாவிட்டபுரம். (35627)(6.7.11) குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

**திருமதி கணபதிப்பிள்ளை சின்னம்மா**

(மட்டுவில் வடக்கு, புவனேஸ்வரி அம்மன் கோயில் தர்மகர்த்தா)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னம்மா நேற்றுமுன்தினம் (02.04.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவபாக்கியம் (கல்வயல்), சுப்பிரமணியம் (திருவையாறு), வல்லிபுரநாதன் (கல்வயல்), வேலாயுதபிள்ளை(கனடா), புவனேஸ்வரி(மட்டுவில்), மயில்வாகனம் (மட்டுவில்), மகேஸ்வரி (மந்திகை) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற அம்பிகாவதி மற்றும் இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி, சரோஜினி, சிவஞானம், பத்மாவதி, தெங்காதரன் (ஆசிரியர், கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2013) வியாழக் கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணாத்திப்பால இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
மட்டுவில். (35631)(2.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மப்பும் மந்தாரமான காலநிலை நிலவும்.

## விசுவமடு கொலை வழக்கு சந்தேகநபர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம், ஏப்.4

குடும்பப் பெண்ணை வெட்டிக் கொலை செய்தசம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 3 பெண்கள் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுப்பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக பிணை விண்ணப்பம் யாழ். மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே. விஸ்வநாதன் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துச் கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி விசுவமடுவைச் சேர்ந்த தங்கராசா மங்களேஸ்வரி (வயது-37) என்பவரே 2011 செப்ரம்பர் மாதம் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். வீதியால் மற்றொருவருடன் சென்று கொண்டிருந்த போது அவரை இனந்தெரியாதோர் வாளால் வெட்டிக் கொலைசெய்ததோடு அவருடன் சென்றிருந்தவரின் தலையில் கத்தியால் கொத்தி காயம் விளைவிக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களே நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அதன்படி தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான தலா இரண்டு ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிட வேண்டும் என்னும் நிபந்தனையும் விதிக்கப்பட்டது. (ஐ-4)

## 50 பட்டதாரிகளுக்கு இன்று நியமனக் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்.4

விவசாய அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்ட 50 பட்டதாரி பயிலுநர்களுக்கு அதற்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இவர்களில் ஐந்து பேர் மாவட்ட செயலகத்துக்கும் ஏனையவர்கள் ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் மூன்று பேர் வீதம் பதினைந்து பிரதேச செயலகங்களுக்கும் நியமிக்கப்படுவார்கள்.

விவசாயம் தொடர்பான அபிவிருத்தித்திட்டங்களில் பங்கு பற்றுவது இவர்களின் பிரதான கடமையாகும் என மாவட்ட விவசாய பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து கொள்வார். (ஒ-7)

## 'காப்பெற்' போட்டால் போதுமா?



கொழும்புத்துறை, ஏப்.4

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதியில் உள்ள மதகு முழுமையாக சீர் செய்யப்படாமையினால் அவ் வீதியூடான போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் ஆபத்தை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியை 'காப்பெற்' வீதியாக அமைக்கும் பணிகள் இடம்பெற்றபோது அகலிக்கப்பட்ட வீதியில் வெள்ளம் வழிந்தோடும் குழாய் உள்ள பகுதி நிரப்பப்படாமையினால் குழியாகக் காணப்படுகிறது.

'காப்பெற்' வீதியாக அமைக்கப்பட்ட பின் வாகனப்போக்குவரத்தும், அவற்றின் வேகமும் அதிகரித்துள்ளன. இதேவேளை- இந்த மதகுப் பகுதியில் வீதி ஒடுக்கமாகவும் இருபக்கமும் குழியாகவும் உள்ளதால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய நிலைமை காணப்படுகிறது. (ஒ-135)

## புதிய நியமனம்

வடமராட்சி, ஏப்.4

இதுவரை காலமும் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றிய ஐ.செல்வராஜா வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் ஆங்கில உத விக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய எஸ்.சுந்தரமூர்த்தி சேவையில் இருந்து இளைப்பாறியதைத் தொடர்ந்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ந-8)

## உணவகங்களின் தரத்தை மேம்படுத்தும் சந்திப்பு

யாழ். மாநகர சபைப் பிரிவுக்கு உட்பட்ட உணவகங்களின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம)

## சொற்பொழிவு

வடமராட்சி, ஏப்.4

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு "பக்தி" என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

சொற்பொழிவை கட்டுவன்புலம் மகா வித்தியாலய ஆசிரி யர் இ.மகேஸ்வரராஜ் நிகழ்த்துவார். சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை, பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் நடைபெறும் இந்த நிகழ்வு பேரவை உறுப்பினர் கே. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும். (ந-8)

பன்றித்தலைச்சி அம்மன் பொங்கல் உற்சவத்தில்

## திறம்படச் செயற்பட்டமைக்கு தொண்டர்களுக்குப் பாராட்டு

தென்மராட்சி, ஏப்.4

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தில் திறம்படச் செயற்பட்ட தொண்டர் படையினருக்கு ஆலய பரிபாலன சபையினர் பாராட்டுத் தெரி வித்தனர்.

கடந்த வருடங்களை விட கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மூன்றாம் திங்கள் பொங்கல் உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான அடியவர்கள் வருகை தந்திருந்தனர். அத்துடன் 500 இக்கும் மேற்பட்ட பறவைக்காவடிகளும், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவடிகளும், பாற் செம்புகளும் அடியார்களால் ஆலயத்துக்கு கொண்டு வரப்பட்டன. இதனால் ஆலய வீதிகளில் பெரும் இட நெருக்கடி ஏற்பட்டது. இந்த நிலையில் பொலிஸாருடன் இணைந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் சாரணர் குழு, சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் குழு, மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி., மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம் ஆகியவற்றின் சாரணர் குழுக்கள் கிளிநொச்சி, பருத்தித்துறை, தென்மராட்சி முதலுதவிக் குழுக்கள் போன்றவை சிறந்த சேவையை வழங்கினர்.

கிளிநொச்சி சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிர மணியம், உதவி மாவட்ட ஆணையாளர் இ.சுமுகலிங்கம் ஆகியோரின் வழிநடத்தலில் அடியார்கள் சிறந்த சேவையினைப் பெற்றுள்ளனர்.

இவ்வாறான சிறந்த தொண்டர் சேவையினை வழங்கிய வர்களை பாராட்டுவதுடன் அவர்களை ஆலயத்துக்கு அனுப்ப முன்வந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார். (ந-9)

## வலிகாமம் கல்வி வலயத்தில் முறைசாராப் பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம், ஏப்.4

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் மூன்று மாத பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

ஏப்ரல் மாத முதல் வாரத்திலிருந்து தொடர்ந்து 3 மாத காலம் இந்தப் பயற்சி நெறிகள் நடைபெறும். யாழ். அராலி இந்துக் கல்லூரியில் கைவேலையும், சுதுமலை வடக்கு த.க.பாடசாலையில் கணினி பயிற்சியும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை, சிகையலங்காரம் ஆகிய பயிற்சிகளும், மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும், வலிகாமம் கல்வி வலய தொழிற்பயிற்சி நிலையத்திலும் உடை அமைத்தல் பயிற்சியும், இணுவில் இந்துக் கல்லூரியில் புத்தகம் கட்டுதல் பயிற்சியும், அளவெட்டி சன சமூக நிலையத்தில் வீட்டு மின் இணைப்பும், பன்னாலை மாதர் கிராம அபிவிருத்தி நிலையத்தில் மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை, சிகையலங்காரம் ஆகிய பயிற்சிகளும், வலிகாமம் கல்வி வலய தொழிற் பயிற்சி நிலையத்தில் மனை முகாமைத்துவ பயிற்சியும் இடம்பெறும். அத்துடன் அளவெட்டி தெற்கு மணற் புலம் சன சமூக நிலையத்தில் 2ஆம் மொழி ஆங்கில பயிற்சியும், அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் 2ஆம் மொழி சிங்களமும், திறந்த பாடசாலை யாழ். இராமநாதன் கல்லூரி யில் 2ஆம் மொழி சிங்கள பயிற்சி வகுப்புகளும் நடைபெறவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபெற விரும்புவோர் குறிப்பிட்ட பாடசாலை அதிபர்களிடம் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்வி பணிப்பாளர் செ.சந்திரராஜா தெரிவித்துள்ளார். (ந-13)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

குருநகர், ஏப்.4

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்ப்பாணப் பிரதேச சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். அடைக்கல மாதா அன்னை ஆலய மண்டபத்தில் கடந்த சனிக் கிழமை பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்தில் தலைவராக வி.ஸ்ரீசக்திவேல், உப தலைவராக- ஜி.ஆர். இராசசிங்கம், செய லாளராக- எஸ். கணேசலிங்கம், உபசெயலாளராக- இராசேந்திரம் திருக்கருணை, பொருளாளராக ஆ.அனந்தராஜாவும் ஏ.எம். குணரட்ணவும், திருமதி எம். மொனிக்கா ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும், கணக்காய்வாளராக த. பரமானந்தமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ந-51)

## ஈ.பி.டி.பி. எம்.பியும் லயன்ஸ் கழகத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.4

ஈ.பி.டி.பி. உறுப்பினர் உட்பட இருவர் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தில் உறுப்பினர்களாக இணைந்து கொண்டனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன். எஸ். எஸ்.தங்கராசா முன்னிலையில் இவர்கள் கழகத்தில் இணைத்துக் கொள்ளப் பட்டனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மற்றும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி என். சக்திராஜ் ஆகியோரே புதிய உறுப்பினர்களாக இணைந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இந்த வருடத்துக்கான பல்வேறு நலத் திட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ஐ-9)



தென்புலோலி உபய கதிர்காமத்தில் இருந்து புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் செல்வி நவிலா கிருஷ்ணராஜாவின் பரத நாட்டிய அரங்கேற்றமும் செல்வன் சயன் கிருஷ்ணராஜாவின் மிருதங்க அரங்கேற்றமும் லண்டன் அஸ்ரோபற கலா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. (எ-8)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.4

பண்டாரக்குளம் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த திரு விழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும், 15 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு தீர்த்தத் திரு விழாவும் நடைபெறவுள் ளது. (ந-13)

★ ★ ★

வடமராட்சி, ஏப்.4

மேலைப் புலோலி, வாணர் குடியிருப்பு, சொக்கன் கலட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பொங் கல் விழா நாளை வெள்ளிக் கிழமை ஆரம்பமாகி மறுநாள் சனிக்கிழமை நிறைவுறும். சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு விசேட அபி ஷேகத்துடன் சிறப்புப் பூஜை ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணிக்கு பொங்கல் விழா நிறைவுறும். (ந-8)

★ ★ ★

கொக்குவில் மேற்கு வாராஹிபுரம் திருவருள்மிகு ஸ்ரீவாராகி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது. தொடர்ந்து நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (எ)

## 15 வருடங்களின் பின் எழிலூர்ச.ச.நிலையம் புனரமைத்து திறப்பு

கொழும்புத்துறை, ஏப்.4

கொழும்புத்துறை எழிலூர் சனசமூக நிலையம் 15 வருடங்களின் பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

போரால் சேதமடைந்திருந்த இந்த சனசமூக நிலையம் யாழ். மாநகர சபையின் [illegible] யுடன் அ[illegible] பகுதி மக்களின் சிரமதானப் பணிகள் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தை கடந்த உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண- ராசா திறந்து வைத்தார்.

அன்றைய தினம் விளையாட்டு நிகழ்வுகள், இளைஞர் [illegible] கிடையிலான கிரிக் கெட் போட்டி என்பன இடம் பெற்றன. (ஒ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப்பகலில் திருட முற்பட்டவர் இளைஞர்களால் மடக்கிப் பிடிப்பு

வலி.வடக்கு, ஏப். 4

தனிமையில் வசித்து வந்த மூதாட்டியின் வீட்டினுள் பட்டப்பகலில் புகுந்து திருட முற்பட்ட நபர் இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை அளவெட்டியில் இடம்பெற்றது. பட்டப்பகல் வேளையில் தனித்திருந்த மூதாட்டியின் வீட்டினுள் எவ்வித அனுமதியும் இன்றி நுழைந்து திருட முற்பட்டிருந்தார்.

இதனையடுத்துப் பதற்றமடைந்த மூதாட்டி கூக்குரல் எழுப்பவே திருடன் தனது முயற்சியைக் கைவிட்டு ஓடிவிட்டார்.

மூதாட்டியின் கூக்குரலை அடுத்து அவ்விடத்துக்கு வந்த இளைஞர்கள் திருடன் தப்பியோடிய பகுதியில் பற்றைகள், சேதமுற்றிருந்த வீடுகள் என்பவற்றைச் சல்லடை போட்டுத் தேடியபோது குறிப்பிட்ட நபர் கூரையின் மேல் படுத்திருப்பதைக் கண்டு சுற்றி வளைத்துப் பிடித்து தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறிப்பிட்ட நபரை மல்லாகம் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்திய போது சந்தேகநபரை இரண்டு வார காலத்துக்கு விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றினால் உத்தரவிட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு மடக்கிப் பிடிக்கப்பட்டவராவார். இவர் கடந்த காலங்களில் இரும்புப் பொருள்கள் வியாபாரம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர் என அப்பகுதி மக்கள் அடையாளம் காட்டியுள்ளனர். (த-86-400)


## சரவணா ரெக்ஸ்
## SARAVANA TEXS

பிறக்கப்போகும் விஜய புதுவருடத்தை முன்னிட்டு மிகப் பிரமாண்டமான புத்தம்புது தெரிவுகளுடன் மாபெரும் அசரவைக்கும்

## மலிவு விற்பனை

சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்குமான ஆடைகள் ஒரே இடத்தில்

04.04.2013 முதல் 13.04.2013 வரை

★ இறுதியாக வெளிவந்த புதுப் புது டிசைன்களுடன் பஞ்சாபிகள் பல விலைகளில்....
★ Office Wear Cotton Saree (W/B) Rs. 950/= 500/=
★ Office Wear கொட்டன் பஞ்சாபி துணிகள் Rs.1350/= 950/=
★ திரட்வேக் கொட்டன் பஞ்சாபி துணிகள் Rs.2380/= 1250/=
★ இந்தியன் கல்கி கவுண் Rs.680/= 350/=
★ இந்தியன் செல்வி கவுண் Rs.680/= 350/=
★ இந்தியன் சில்க் பஞ்சாபித் துணிகள் Rs.1060/= 750/= Rs.1680/= 1250/=
★ இந்தியன் சில்க் சாறி Rs.1190/= 750/=
★ சேட் வகைகள் நிர்ணயிக்கப்பட்ட கம்பனி விலைகளில் இருந்து EBONY, VANTAGE 25% விலைக்கழிவு
★ ஒரு சேட்டும் ஜீன்ஸ் துணியும் Rs.1000/=
★ ஒரு லெந்தும் 15 Cm உம் உடைய ஜீன்ஸ் துணி Rs.500/=
★ பூட்டுமார்க் நம்பர் 01 சாரம் (999) Rs.600/=
★ ரெடிமேற் ஜீன்ஸ் சோக்கோ (Prova) Rs.2680/= 1800/=

மற்றும் சிறுவர்கள் அனைவருக்குமான ஆடைகளையும் மலிவாகப் பெற்றுக்கொள்ள.....

## சரவணா ரெக்ஸ்
(களஞ்சியசாலை)

சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(டாக்டர் கெங்காதரன் மருத்துவமனை அருகில்)


# தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மருதங்கேணி கோட்ட மாணவர்கள்

வடமராட்சி கல்வி வலய மருதங்கேணி கல்விக் கோட்ட தமிழ்த் தினப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இந்தப் போட்டிகளில் எழுத்தாக்கப் போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**பிரிவு-1 வாசிப்பு**
ஜெ.சதுசிகா- ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை, ச.நிலவரசி- மாமுனை அ.த.க.பாடசாலை, மோ.மதுபன்- மணற்காடு றோ.க.த.க.பாடசாலை.

**பிரிவு-2 வாசிப்பு**
யோ.துவாரகா- உடுத்துறை மகா வித்தியாலயம், நி.அருள்நிலா- மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயம்.

**பிரிவு-1 ஆக்கத்திறன் வெளிப்பாடு**
அ.கரன்- செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை, யோ.யதுர்சன்- குடத்தனை அ.த.க. பாடசாலை.

**பிரிவு-1 பேச்சு**
த.அபிசர்- செம்பியன்பற்று றோ.க.த.க. பாட சாலை, தே.ஜஸ்மியா- மணற் காடு றோ.க.த.க.பாடசாலை.

**பிரிவு-2 பேச்சு**
சி.அபிசாயினி-ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை, அ.றொக்சியா- கட்டைக்காடு றோ.க. த.க. பாடசாலை.

**பிரிவு-3 பேச்சு**
அ.டேனிசன்- மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, எ.மேரி பவுஸ்ரினா- வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்

**பிரிவு-4 பேச்சு**
த.பிருந்தா-ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை, அ.லோறின்சன் வெஸ்லி மணற்காடு றோ.க. த.க.பாடசாலை

**பிரிவு-5 பேச்சு**
பு.திவாகர்-ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை ம.கஜானா- உடுத்துறை ம.வி.

**பிரிவு-1 பாவோதல்**
சா.மிதுசா- மாமுனை அ.த.க.பாடசாலை, அ.அன்ரன் மௌசியன்-மணற்காடு றோ.க.த.க. பாடசாலை. (ஓ-8)(தொடரும்)


## புதுக்கடை - திறப்பு விழா

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகில் ஏ – 9 வீதியில் அமைந்துள்ள

## நியூ அண்ணா ரயர் வேக்ஸ்

தற்போது
பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள இராமலிங்கம் வீதியில்
இன்று (04.04.2013) வியாழக்கிழமை
முற்பகல் 9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரையுள்ள
சுபவேளையில் ஆரம்பிக்கவுள்ளதால்
தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவை
சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி.

தங்கள் நல்வரவை நாடும்
மயில்வாகனம் கலிதாஸ்
077 4917 486


## மரண அறிவித்தல்

### பரராஜசிங்கம் சர்மிலன்



நுணாவில் சந்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் சர்மிலன் (30.03.2013) பிரான்ஸில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் -மனோராணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தையா மற்றும் தங்கமணி தம்பதியரின் அன்பு மருமகனும், நந்தினியின் அன்புக் கணவரும், அபிஸ்நயாவின் அன்புத் தந்தையும், பமிலன், நகுலன், தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபோதரன், யஸ்மினி, தயாளன், நளினி, அம்சத்வனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணன் கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு.
(c/8072)(6.7.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

கைதடி, நுணாவில் அறவழிக்கு முன்பாக உள்ள 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

(35625) (6.7) தொடர்பு: 0772720095

## தவறிவிட்டது

26.03.2013 அன்று பருத்தித்துறைக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் முக்கிய ஆவணங்களுடன் பேர்ஸ் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(35318)(6.7) தொடர்பு:0770783477

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சுப்பிரமணியம் விக்னேஸ்வரன்

மலர்வு 12.02.1950
உதிர்வு 16.03.2012



எங்கள் வாழ்வே உங்கள் வாழ்வென
என்றென்றும் எண்ணி வாழ்ந்து -எம்
உள்ளத்தில் குடிகொண்ட எங்கள் அப்பாவே
என் கரம்பிடித்த நாள் முதல்
கண் கலங்காது காத்து வந்தீர்களே ஐயா!
அன்போடு எமக்கு அளவில்லா பாசத்தை ஊட்டி
கண்டிப்பாக எமை வளர்த்து கல்விதனை புகட்டி
பார்போற்ற வாழ வழிகாட்டிவிட்டு சென்றீர்களே அப்பா
மாமா என்று நாங்கள் அழைத்த போதெல்லாம்
மருமக்கள் என்று புன்முறுவல் கொண்டீர்களே
பேரப்பிள்ளைகள் வாய் நிறைய உங்களை
தாத்தா என்ற போதெல்லாம் உவகை கொண்டீர்களே
பேரப்பிள்ளைகளுக்கு சிரித்தபடி புத்திமதி புகட்டினீரே
அன்பான சகோதரர்களுக்கு ஆசை அண்ணனாய்
முன்னின்று காரியங்கள் நடத்தினரே
இந்த மண்ணை விட்டு உங்கள் உடல்
மட்டும் தான் சென்றதப்பா-உங்கள்
ஆத்மா என்றென்றும் எங்களுடன் வாழுமப்பா
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

திதி: அபரபக்க நவமி

கைதடி வடக்கு, கைதடி. (35630)(5-6-7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்க் மாணவர்களின் விளையாட்டுப் போட்டி

வலி வடக்கு, ஏப்.4

உடுவில் ஆர்க் விசேட தேவையுடைய மாணவர்களின் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அருட்சகோதரி டானியல் சவரிமுத்து தலைமையில் பாடசாலை வளாகத்தில் உள்ள மைதானத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் கலந்து கொள்வார். (ம-86)

## இழுவைப்படகு மீன்பிடி கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ். குடாக் கடற்கரைப் பகுதியில் இழுவைப் படகு மூலம் மீன்பிடிக்கும் தொழிலை மீனவர்கள் தற்போது கைவிட்டுள்ளனர்.

அரசினால் தடைசெய்யப்பட்ட இந்த மீன்பிடித் தொழிலை தடையையும் மீறி மீனவர்கள் மேற்கொண்டு வந்தனர்.

இந்த இழுவைப் படகு மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால் கடலில் அதன் வளங்கள் அழிந்து அருகி வருவதாக பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டும் வந்தன.

ஏற்கனவே வல்வெட்டித்துறை பிரதேச மீனவர்கள்

**இழுவைப்படகு மூலமாக மீன்பிடித் தொழிலால் குடா கடற்பகுதியில் தற்போது கடலுணவுகளின் பெருக்கம் மிக மிக அருகிச் செல்கின்றன.**

இந்த சட்டவிரோத இழுவைப் படகு மூலமாக மீன்பிடித் தொழிலைக் கைவிட்டிருந்தனர்.

இந்த நிலையில் தற்போது குடாக் கடற் பகுதி மீனவர்களும் இந்த சட்டவிரோத இழுவைப் படகு மூலமான மீன்பிடித் தொழிலைக் கைவிட்டுள்ளனர்.

இந்த மீனவர்கள் தற்போது இழுவைப் படகை கைவிட்டு மாற்று கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த இழுவைப் படகு மூலமான மீன்பிடித் தொழிலால் குடா கடற்பகுதியில் தற்போது கடலுணவுகளின் பெருக்கம் மிக மிக அருகிச் செல்கின்றன.

கடல் வளங்கள் இவ்வாறு குறைந்து செல்வதால் சிறு மீன்பிடித் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

### தனிநாயகம் அடிகள்

## நூற்றாண்டு விழாப் போட்டி விண்ணப்ப முடிவு நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.4

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே நடத்தப்படவுள்ள பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது என்று போட்டிச் செயலர் தெரிவித்துள்ளார்.

போட்டி பற்றிய விவரங்கள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு தனித்தனியாக அனுப்பப்பட்டுள்ளன எனவும் மாணவர்களின் பங்கேற்புக்கு வசதியாக விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை ''போட்டி இணைப்பாளர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் விழாக் குழு, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் யாவும் எதிர்வரும் மே மாதம் இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வலிகாமம் வலய தமிழ்த் தினப் போட்டி


வலி வடக்கு, ஏப். 4

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அனைத்துப் பிரிவினருக்குமான மொழித்திறன் போட்டியும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு அனைத்துப் பிரிவினருக்குமான கலைத்திறன் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (ம-86)

# மணியந்தோட்டம் அரச காணிகளில் குடியிருப்போருக்கு காணி உறுதிகள்

## நடவடிக்கைகள் மும்முரம்



யாழ்ப்பாணம், ஏப்.4

மணியம்தோட்டப் பகுதியில் அரச காணிகளில் தங்கியிருக்கும் மக்களுக்கு காணி உறுதியை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் காணி உறுதியை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னோடியாக அங்கு மக்கள் மத்தியில் இதற்கான விழிப்புணர்வு கருத்தமர்வு ஒன்று இடம்பெற்றது.

மணியந்தோட்டம் கிராம உத்தியோகத்தர்களின் பணிமனையில் இடம்பெற்ற இந்தக் கருத்தமர்வில் காணி உறுதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது அதற்கான சட்ட ஆலோசனைகள் என்ன போன்ற விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.இரவீந்திரதாசன் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கருத்தமர்வில் முன்னாள் காணி ஆணையாளரும் சட்ட ஆலோசகருமான கே.குருநாதன் கலந்து கொண்டு காணி உறுதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது மற்றும் அதற்கான சட்ட ஆலோசனை போன்ற சம்பந்தமான விளக்கத்தை மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்வில் கிராம உத்தியோகஸ்தர் எம்.ஞானேந்திரன், சட்டத்தரணி கே.காயத்திரி மற்றும் நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள் போன்றோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பிரதேசத்தில் குடியமர்ந்திருக்கும் சுமார் 300 வரையிலான குடும்பங்களுக்கு அவர்கள் தங்கியிருக்கும் காணிகளுக்கான உறுதிப் பத்திரம் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இந்தக் காணி உறுதிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்கும் குடியிருப்பாளர்களுக்கு விசேட படிவங்கள் வழங்கப்பட்டும் வருகின்றன.

இந்தப் படிவங்களைப் பூர்த்தியாக்கி கிராம அலுவலர் ஊடாக மக்கள் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, ஏப். 4

கைதடி- நாவற்குழி அ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்துகொள்வார். (ம-9)

* * *

தென்மராட்சி, ஏப். 4

மட்டுவில் கண்ணகை முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்துகொள்வார். (ம-9)

## அதிக தொழில் நிறுவனங்கள் சேமலாப நிதியத்தில் இணைந்தன

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ். குடாநாட்டில் மேலும் முப்பது வரையிலான தொழில் நிறுவனங்கள், ஊழியர்கள் சேமலாப நிதி திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன என்று வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த பெப்ரவரி மாதத்தில் மட்டும் இவ்வாறு ஆகக் கூடுதலான நிறுவனங்கள் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளன.

மேலும் இந்த ஊழியர் சேமலாப நிதி திட்டத்தில் இணையாத தொழில் நிறுவனங்களும் இனங்காணப்பட்டு அவற்றை இணைத்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழில் நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் எதிர்கால வசதியைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்தில் அவற்றைப் பதிவு செய்யும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேசமயம் வவுனியாவில் 22 தொழில் நிலையங்களும், முல்லைத்தீவில் 15 தொழில் நிலையங்களும் இவ்வாறு ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன. (ம-17)

## சட்டவிரோத மணல் அகழ்வு அரியாலையில் தொடர்கிறது

### பிரதேச மக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.4

அரியாலை கிழக்கு பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் அகழும் பணிகள் தொடர்ந்து கொண்டிருப்பது குறித்து பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

**சட்டவிரோத மணல் அகழ்வுப் பணிகள் குறைந்துள்ள போதும் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

கடந்த ஞாயிற்றுக் கிழமை ஈஸ்ரர் தினத்தை பயன்படுத்தி சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர்.

இதில் மூன்று உழவு இயந்திரங்களில் மணல் அகழ்ந்து கடத்திச் சென்றவர்கள் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர்.

இந்தப் பிரதேசத்தில் தொடர்ந்தும் இரவு வேளையில் சிலர் மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டவிரோத மணல் அகழ்வுப் பணிகள் குறைந்துள்ள போதும் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட இந்த சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் இந்தப் பிரதேசத்தில் இரவு ரோந்து பணியில் ஈடுபட வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)

## இடமாற்றம் பெற்று பதவியேற்பு

தென்மராட்சி, ஏப்.4

வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் இடமாற்றத் திட்டத்துக்கு அமைவாக இடமாற்றம் பெற்ற இருவர் சாவகச்சேரி நகர சபையில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

கிளிநொச்சிப் பிராந்திய உதவி உள்ளூராட்சி அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிய (விசேட தரம்) நடராஜா சிவபாதசுந்தரம், சாவகச்சேரி பிரதேச சபை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திருமதி மாலதி மோகனதாஸ் ஆகியோரே கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (ம-9)

## உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கங்கள் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ். குடாநாட்டில் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவு சங்கங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

[illegible] சங்களில் இந்தச் சங்கங்கள் நேற்று முன்தினம் ஒரே சமயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட விவசாய திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வுகளில் மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் ஸ்ரீ பாலசுந்தரம், விவசாய திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் ஆர்.சௌந்தரராஜன் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உருளைக்கிழங்கு செய்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டுறவு அமைப்புகளின் அங்குரார்ப்பணத்தின் போது புதிதாக ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

இதனை அடுத்து இந்த மூன்று கூட்டுறவு சங்கங்களும் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் உத்தியோக பூர்வமாக பதிவு செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் – மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

## கட்டுக்கடங்கா பூதங்கள்

நீண்ட சடாமுடியுடன் கழுத்தில் மண்டையோட்டு மாலைகள் குலுங்க ''ஓம் கிரீம் சக்தி'' என்று மந்திர உச்சாடனங்களோடு, யாககுண்டலங்களுக்கு முன்னால் புகை நடுவே அமர்ந்திருக்கும் மந்திரவாதிகளை ஏராளமான தமிழ்ச் சினிமாக்களில் கண்டிருப்பீர்கள்.

இத்தகைய மந்திரவாதிகளின் பிரதான நோக்கம் யாககுண்டலங்களில் இருந்து பிசாசுகள், காட்டேரிகள் போன்ற துர்தேவதைகளை வரவழைத்து அவற்றின்மூலம் தாம் நினைத்ததை செய்துமுடித்தலே ஆகும்.

இதேபோன்ற ஒருமந்திரவாதி, தனது இயல்பான தோற்றத்தால் சாதிக்க முடியாத ஒன்றை நிறைவேற்ற ஒரு பூதத்தை உருவாக்கினான். அக்கினிக் குண்டத்திலிருந்து வெளிவந்த பூதம் ''ஆணையிடுங்கள் எஜமானரே! நீங்கள் நினைத்ததைச் செய்து முடிக்கக் காத்திருக்கிறேன்'' என்று பவ்வியமாகச் சொன்னது.

கடகடவென அண்ட திசையும் அதிரும்படியான சிரிப்பை உதிர்த்த மந்திரவாதி, ''ஹலால் என்ற எனக்கு எதிரான உரிமம் ஒன்றை அழித்துவிட்டு மீள்வாயாக'' என்று ஆணையிட்டான். அடுத்த நொடியே அவனது கட்டளையை நிறைவேற்றப் பறந்தோடியது பூதம். பூதத்தின் மாய மந்திரங்களுக்கு முன்னால், ஹலாலால் எதுவுமே செய்ய முடியவில்லை. அது தனது இருப்பை இழந்தது தான் முடிவாக இருந்தது. நினைத்ததை விடவும் வேகமாகக் காரியத்தைச் சாதித்த திருப்தியோடு மந்திரவாதியின் இருப்பிடத்துக்கு பூதம் மீண்டது.

''நன்றே செய்தாய். என்னால் எத்தனை தடவை முயன்றும் முடியாததை நொடியில் சாதித்து விட்டாயே'' என்று பூதத்தைத் தட்டிக் கொடுத்தான் மந்திரவாதி.

மந்திரவாதியின் இந்தச் சொற்கள் பூதத்துக்கு மமதையை ஏற்படுத்திவிட்டன. ''அட மந்திரவாதியால் முடியாதவற்றையெல்லாம் சாதிக்கும் வல்லமை எனக்கு இருக்கிறதே. அப்படியானால் என்னைவிட சக்திகுறைந்த மந்திரவாதிக்கு நான் ஏன் அடிமையாக இருக்க வேண்டும்?'' என்று அது யோசித்தது. அத்தோடு மந்திரவாதி உத்தரவிடாமலே தனக்கு எதிரானவர்கள் என்று பட்டோரையெல்லாம் பூதம் அழிக்கத் தொடங்கியது.

அவ்வாறு அழிக்கப்பட்டவர்களில் மந்திரவாதிக்கு வேண்டியவர்களும் இருந்தார்கள். இதை அறிந்ததும் அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. யாககுண்டத்தில் கோபத்தோடு, அவிசை அள்ளி எறிந்து, ''ஓம் கிரீம் காளி'' என்று பூதத்தை அழைத்தான்.

ஆனால், பூதம் வந்தபாடாக இல்லை. யாகம் செய்து செய்து மந்திரவாதி மயங்கி விழாத குறையாக களைத்ததுதான் மிச்சம். பூதம் வருவதற்கான அறிகுறியே இல்லை. கடைசியில் பூதத்தைத் தேடி, மந்திரவாதி புறப்பட்டான். சில நாள் தேடலின் பின்னர், பூதத்தை அவன் கண்டு பிடித்தான். தனக்குக் கீழே நாலைந்து ஏவலாளிகளுடன் ஒரு அரியாசனத்தில் அலட்சியத்தோடு அமர்ந்திருந்தது பூதம்.

''ஏய் பூதமே! என்ன வேலை செய்கிறாய்? மரியாதையாக என் யாக குண்டத்துக்குள் புகுந்து உறங்கிவிடு'' என்று கட்டளையிட்டான் மந்திரவாதி. அவனைப் பரிதாபத்தோடு பார்த்துக்கொண்டே சிரித்தது பூதம். ''அதற்கு வேறு அழைப்பார். உன்னைவிட அதிக பலம் கொண்டவன் நான். எனவே நீதான் எனக்கு அடிமையாக இருக்கவேண்டும். நான் உனக்கு அடிமையாக இருக்கமுடியாது'' என்று சொல்லிக்கொண்டே தனது தொழிலுக்குப் புறப்பட்டது பொதுபலசேனா என்ற பெயர் கொண்ட அந்தப் பூதம்.

# இலங்கை தொடர்பான இந்திய வெளியுறவு கொள்கையும் எதிர்கொள்ளும் சவால்களும்

''இலங்கை மீது இந்தியா கடும்போக்கான நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் இலங்கையின் சீனாவுடனான உறவானது எதிர்பார்ப்பது போல் அவ்வளவு காத்திரமானதல்ல''

இவ்வாறு இந்தியாவின் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் பேராசிரியரான பி.சகாதேவன் Deccan Herald ஆங்கில ஊடகத்தில் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு அரசும் அதன் எதிர்க் கட்சிகளும் இலங்கைத் தமிழர்களுக்கு நீதி மற்றும் உரிமையை அந்தநாட்டு அரசு வழங்க வேண்டும் என்பதை இந்திய மத்திய அரசு வலியுறுத்தி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், இலங்கை மீதான இந்திய வெளியுறவுக் கொள்கையானது தமிழ்நாட்டில் அக்கினிப் பரீட்சையை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதிக் கட்ட போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான, நம்பகமான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அமெரிக்கா தலைமையில் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை இந்தியா பல்வேறு அழுத்தங்களின் பின்னர் ஆதரித்து வாக்களித்தது.

தமிழ்மக்களின் உணர்வுகள் குறித்தும் அவர்களது நலன்கள் தொடர்பிலும் இந்திய மத்திய அரசு கரிசனை காட்டவில்லை என தமிழ்நாட்டில் வாழும் மக்களின் ஒரு சாரார் கருதுகின்றனர்.

இந்திய மத்திய அரசும், தமிழ்நாட்டு சட்டசபைத் தீர்மானத்தை ஏற்க மறுத்தமையானது இவ்வாறான எண்ணக்கருத்தை மேலும் வலுப்படுத்துகிறது. தமிழ்நாட்டு மக்களைத் திருப்திப்படுத்தும் அதேவேளையில், மகிந்த ராஜபக்ஷ அரசு ஏற்றுக் கொள்ளக் கூடிய வெளியுறவுக் கொள்கையை உருவாக்குவதென்பது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவ்வளவு சுலபமான காரியமல்ல.

இலங்கை மீதான தமிழ்நாட்டின் தற்போதைய நிலைப்பாடானது அரசியல் மற்றும் இன உணர்வுகள் ஆகிய இரு காரணிகளை அடிப்படையாகக் கொண்டது. தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் மக்களின் உணர்வுகளை அரசியல் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவ்விரு காரணிகளும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டதாகும். இவ்விரு காரணிகளும் சிங்களவர்களால் ஆளப்படும் இலங்கை அரசின் இனக் கொள்கையை எதிர்ப்பதற்கு வலுவூட்டுகின்றன.

போரின் இறுதிக்கட்டத்தில் போர் வலயங்களில் அகப்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் மீது இலங்கை இராணுவத்தால் தயவு தாட்சண்ணியமின்றி பல்வேறு மீறல்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அனைத்துலக சமூகமானது ராஜபக்ஷ அரசு மீது அழுத்தம் கொடுத்து வருகின்றது.

அத்துடன் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் மீது போருக்குப் பின்னர் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் பல்வேறு அடக்குமுறைகள் மற்றும் ஓரங்கட்டுதல்கள் தொடர்பாக அனைத்துலக சமூகம் தனது விமர்சனங்களை முன்வைத்துள்ளது. இந்த நிலையில் இலங்கை அரசானது தமிழ் மக்கள் தொடர்பில் கைக்கொள்ளும் இனவெறிக் கொள்கையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என தமிழ்நாடு தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகிறது.

> ஜெனீவாத் தீர்மானத்தின் பின்னான காலத்தில், இலங்கைத் தீவிலுள்ள கடும்போக்காளர்களிடமிருந்து இந்தியா மிகப் பெரிய எதிர்ப்புக்கு முகங்கொடுத்து வருகிறது. இலங்கைத் தீவில் வாழும் சிங்களத் தேசியவாதிகள், இலங்கைக்கு எதிராக வாக்களித்தவர்களை எதிர்த்து வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கை ஜனாதிபதி ஏமாற்றக் கூடிய மூலோபாயங்களில் நம்பிக்கை கொண்டுள்ளார். இவ்வாறான நயவஞ்சகமான இலங்கை அரசுடன் தொடர்பைப் பேணுவதென்பது மிகக் கடினமானது என்பதை இந்தியா கண்டுணர்ந்துள்ளது. குறிப்பாக, அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் ராஜபக்ஷ அரசானது இந்தியாவால் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு உடன்படிக்கையை ஏற்று நடப்பதை விரும்பவில்லை என்பது இந்தியாவுக்கு வருத்தமளித்தது. ஆனால் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இந்தியாவிடம் இலங்கை பல வாக்குறுதிகளை வழங்கியும் அவற்றை மேற்கொள்ளவில்லை. இலங்கையின் வெறுமையான இராஜதந்திர வாக்குறுதிகள் தொடர்பில் இந்தியா மேலும் ஆர்வம் காண்பிக்கவில்லை.

இந்நிலையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்ததை, அதன் உள்நாட்டு அரசியல் சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்கும் அவர்களின் அழுத்தங்களுக்கு பதிலளிப்பதற்கும் அப்பால் வைத்துப் பார்க்கப்பட வேண்டும்.

இலங்கையை எதிர்த்து இந்தியா வாக்களித்ததானது, இலங்கை பல ஆண்டுகளாக தனது நாட்டில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் இதயசுத்தியுடன் செயற்படத் தவறியதன் விளைவாக இந்தியா, இலங்கை மீது அதிருப்தி அடைந்ததன் வெளிப்பாடாகவும் பார்க்கலாம். இலங்கை அனைத்துலக சமூகத்தின் அழுத்தமானது உடனடி மாற்றத்தைக் கொண்டு வரும் என்பதை நம்பமுடியாவிட்டாலும் கூட, இலங்கையானது அனைத்துலக சமூகத்தின் நம்பகத்தை இழந்துவிட்டது என்பதும் உண்மையாகும்.

ஜெனீவாத் தீர்மானத்தின் பின்னான காலத்தில், இலங்கைத் தீவிலுள்ள கடும்போக்காளர்களிடமிருந்து இந்தியா மிகப் பெரிய எதிர்ப்புக்கு முகங்கொடுத்து வருகிறது. இலங்கைத் தீவில் வாழும் சிங்களத் தேசியவாதிகள், இலங்கைக்குஎதிராக வாக்களித்தவர்களை எதிர்த்து வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் மேற்குலகுடன் இணைந்து நிற்கும் அதேவேளையில், இந்தியாவும் மேற்குலகுடன் இணைந்து இலங்கைக்கு எதிராகச் செயற்படுவது போன்ற எதிர்மறை எண்ணக்கருத்து இலங்கையில் நிலவுகிறது. இவ்வாறான ஒரு இக்கட்டான சூழ்நிலையில், ராஜபக்ஷ அரசுடன் இந்தியா இணைந்து செயற்படுவதைத் தவிர வேறு தெரிவுகள் காணப்படவில்லை.

ஆனால் நயவஞ்சகமான இலங்கை அரசு நீதியுடனும் நேர்மையுடனும் நடக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதேவேளை இந்தியாவானது இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டும் என்கின்ற அடிப்படைக் காரணியை கவனத்தில் எடுக்காதிருக்க முடியாது. குறைந்தது அடுத்த பொதுத் தேர்தல்கள் வரை இலங்கை விடயம் தொடர்பான தனது நிலைப்பாட்டை தமிழ்நாடு அவ்வளவு இலகுவில் கைவிடாது.

இலங்கைமீது பொருளாதாரத் தடையை விதித்தல், தமிழீழத்திற்கான கருத்துவாக்கெடுப்பை நடத்துதல் போன்றவை தொடர்பில் இந்தியா, ஐ.நாவுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரி தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம் இயற்றப்பட்டது. இலங்கையானது தன் மீதான வெளித்தரப்பின் அழுத்தங்களை உணர்ந்து அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்டு அரசியற் தீர்வொன்றை எட்ட வேண்டும். அதே வேளை, தன் மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைக்கு அனுமதி வழங்க வேண்டும். ஆனால் கெட்ட வாய்ப்பாக, இலங்கை அரசானது இவ்வாறான எதனையும் விரைந்து செய்ய முன்வரவில்லை. இந்தச் சூழ்நிலையில், இலங்கை மீதான அழுத்தங்கள் தொடர்பில் மேற்குலக நாடுகளுடன் இணைந்து இந்தியாவால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பயனற்றுப் போய்விடும்.

இலங்கை மீது இந்தியா கடும்போக்கான நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவில்லை என்பது உண்மையாகும். ஆனால்இலங்கையின் சீனாவுடனான உறவானது எதிர்பார்ப்பது போல் அவ்வளவு காத்திரமானதல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கும், அனைத்துலக சமூகத்தின் அழுத்தத்திற்கு முகங்கொடுப்பதற்காகவும் இலங்கை, சீனாவுடன் நட்புறவைப் பேணிவருகிறது. இதேபோன்று சீனாவும் இலங்கையில் கேந்திர முக்கியத்துவம் மிக்க மூலோபாய நலன்களை அடைந்து கொள்வதற்காக இலங்கையுடனான நட்பைப் பேணிவருகிறது.


இவ்விரு நாடுகளும் தமது வரையறைகளை நன்கு புரிந்து வைத்திருக்கின்றன. சீனாவானது இலங்கைக்கு பொருளாதார மற்றும் இராணுவ ஆதரவுகளை வழங்குவதற்கான நம்பகமான ஒரு தரப்பாக உள்ள போதிலும், தேசிய உறுதிப்பாடு மற்றும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதில் சீனா, இலங்கைக்குப் பயனற்றதாக இருக்கலாம்.

உள்ளக அரசியல் நடவடிக்கைகள் மூலம் மட்டுமே நாட்டில் சமாதானத்தையும் ஒழுங்கையும் ஏற்படுத்த முடியும். இந்த நிலையில், இந்து மாகடல் பிராந்தியத்தில் அதிகாரம் மற்றும் செல்வாக்கை நிலைநிறுத்தி இந்தியாவுடன் சீனா போட்டி போடுவதற்கான மூலோபாய இடைவெளியை இலங்கை வழங்குவதற்கு முன்னர், அதன் பலவீனத்தையும், வலுவின்மையையும் இலங்கை புரிந்துகொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் அலுவலகத்தில் காடையர்களின் மூர்க்கத்தனம்










உதயன் அலுவலகம் மீதான தாக்குதலில் வாகனம் நொருக்கப்பட்டுக் கிடப்பதையும் காயமடைந்தவர்களின் இரத்தம் குளமாகத் தேங்கிக் கிடப்பதையும் காயமடைந்த ஊழியர்களையும் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட விக்கெட் ஒன்று முறிந்து கிடப்பதையும் படங்களில் காணலாம்.










# இசைப்பிரியாவுக்கு நேர்ந்த அவலம் இன்னொரு முறை நடக்கவே கூடாது

## டுபாயிலிருந்து தமிழர்களைத் திருப்பி அனுப்புவதை தடுக்க வலியுறுத்துகிறார் வைகோ



சென்னை, ஏப்.4

''டுபாயில் இருந்து 19 ஈழத் தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். அவ்வாறு அனுப்பப்பட்டால் அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவர். உனடியாக அவர்களைக் காப்பற்ற உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்- இவ்வாறு இந்தியப் பிரதமரைக் கோரியுள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

இந்த விடயம் குறிந்து இந்தியப் பிரமருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் தூத்துக்குடியில் இருந்து கடல் வழியாக 45 ஈழத் தமிழர்கள் ஆஸ்திரேலியா பயணித்தனர். அப்போது அவர்களின் படகு பழுதடைந்து டுபாயைச் சேர்ந்த சரக்குக் கப்பலில் இருந்த மாலுமிகளால் காப்பாற்றபட்டனர். காப்பற்றப்பட்டவர்கள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலமாக வெளிநாடுகளில் அடைக்கலம் கோரினர்.

இந்த நிலையில் ஒரு வார காலத்துக்குள் அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப உள்ளதாக டுபாய் அரசு அறிவித்து உள்ளது.

இந்த 19 பேர்களுள் ஒருவரான இளம்பெண் ஹரிணி, தமிழ் ஈழ தேசிய தொலைக் காட்சியில் செய்தி வாசிப்பாளராகப் பணி ஆற்றியவர். அவர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் கடும் சித்திரவதைகளுக்கு உள்ளாக் கப்படுவர் என்பது தெட்டத் தெளிவு. இசைப்பிரியாவுக்கு ஏற்பட்ட கதி இன்னொரு பெண்ணுக்கு ஏற்படுவதை அனுமதிக்க முடியாது.

மனிதாபிமான அடிப்படையில் அவர்களைப் பாதுகாக்க ஐக்கிய அரபு குடியரசு மூலம் உடனடி நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுகிறேன்- என்றுள்ளது.

(ற)

## 'இணுவில் ஒலி' அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஏப்.4

'இணுவில் ஒலி' சஞ்சிகையின் நான்காவது மலர் அறிமுக விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் கல்லூரி அதிபர் அ.சதானந்தன் தலைமையில் நடைபெறும்.

வரவேற்புரையை சஞ்சிகைக் குழு உறுப்பினர் யோ.சுகந்திரனும், அறிமுகவுரையை யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசனும், மாணவர் குறிப்பை இணுவில் மத்திய கல்லூரி மாணவி கு.தயாளினியும், ஏற்புரையை 'இணுவில் ஒலி' சஞ்சிகையின் பதிப்பாசிரியர் தம்பு சிவசுப்பிரமணியமும், நன்றியுரையை சஞ்சிகைக் குழு உறுப்பினர் க.பரமேஸ்வரனும் வழங்குவர்.

(த)

## வாய்மொழி மூலமான வினாவிடைப் போட்டி

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் பாடசாலைகளுக்கு இடையே வாய்மொழி மூலமான வினாவிடைப் போட்டி இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்து மூலமாக நடைபெற்ற வினாவிடைப் போட்டியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.ஹாட்லிக் கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைகளுக்கு இடையே இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சித் திட்டத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலை மாணவர்களை குறித்த நேரத்துக்கு அனுப்பி வைக்குமாறு அதிபர்களை சங்கம் கேட்டுள்ளது.

# இலங்கை வீரர்களுக்கு முட்டை அடிப்போம்

## ஆர்ப்பாட்டத்தில் பிக்குகள் கோஷம்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்கச் சென்றுள்ள இலங்கை வீரர்களுக்கு எதிராக கிரிக்கெட் சபைக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது.

ராவண சக்தி என்ற கடும் போக்குடைய பௌத்த அமைப்பு இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தது. 200 இற்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பிக்குகள் சிலர், தாய்நாட்டைக் காட்டிக் கொடுத்த இலங்கை வீரர்களுக்கு மு[illegible]ட அடித்துப் பாடம் புக[illegible]வோம் என கோஷமெழுப்பியவாறு கிரிக்கெட் சபைக்குள் நுழைவதற்கு முயற்சித்தனர். இதனையடுத்து கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்கவுடன் பேச்சு நடத்துவதற்கு ஐந்து தேரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இருப்பினும், இருதரப்புகளும் சுமுகமாக நடந்து கொள்ளவில்லை. இதனால் குறித்த பகுதியில் சற்று நேரத்துக்குப் பதற்றம் நிலவியதுடன், பாதுகாப்பும் பலப் படுத்தப்பட்டிருந்தது.

தமிழகத்தில் பௌத்த பிக்குகள் மீதான தாக்குதல், [illegible] வற்றால் ஐ.பி.எல். போட்டிகளை இலங்கை வீரர்கள் புறக்கணிக்க வேண்டும் என ராவண சக்தி அமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

ராவண சக்தி என்ற கடும்போக்குடைய பௌத்த அமைப்பு இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தது.

எனினும், ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்பதற்கு இலங்கை வீரர்கள் இந்தியா சென்றுள்ளனர். இதனைக் கண்டித்தே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

## வீதியில் கிடந்த பெரும் தொகை பணத்தை கண்டெடுத்த மாணவன்

நவாலி, ஏப்.4

ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியா சாலையில் கல்வி பயிலும் மாணவன் வீதியில் கண்டெடுத்த பெருந்தொகைப் பணத்தை பாடசாலை ஆசிரியரிடம் ஒப்படைத்துள்ளார்.

இரண்டாம் ஆண்டு கற்கும் கலேந்திரன் உமாகாந்தன் என்ற மாணவனே நேற்றுமுன் தினம் காலை பாடசாலைக்குச் செல்லும் போது பணத்தைக் கண்டெடுத்தான்.

பாடசாலைக்கு முன்னால் பிரதான வீதியில் ''சொப் பிங்'' பையில் மடித்த படி கிடந்த அந்தப் பொதியை குறித்த மாணவன் காலால் தட்டிப் பார்த்துள்ளான். அதில் பணம் இருப்பது தெரிய வரவே அதனை எடுத்துச் சென்று வகுப்பு ஆசிரியரிடம் ஒப் படைத்தான். (ஒ-100)

## புதுவருட சந்தை

கிளிநொச்சி, ஏப்.4

புதுவருடத்தை முன்னிட்டு வாழ்வெழுச்சி விவசாய சேவை புதுவருட சந்தை கண்டாவளைப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சந்தை நாளையும், நாளைமறுதினமும் புளியம்பொக்கணைச் சந்தியில் அமையவுள்ளது என கண்டாவளைப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இந்தச் சந்தை மூலம் விவசாயிகள் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தவும், நுகர்வோர் பொருள்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## முல்லை. வித்தியானந்தா மைதானத்தில் இன்று

# ஸ்ரான்லி - வித்தியானந்தா ஒருநாள் துடுப்பாட்டச் சமர்

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கும் இடையிலான ஒருநாள் துடுப்பாட்ட சமர் இன்றைய தினம் இடம் பெறவுள்ளது.

முதன் முதலாக இந்த இரு அணிகளும் மோதும் இன்றைய ஒருநாள் துடுப்பாட்டச் சமர், 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக அமையவுள்ளது. முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் மு.ப.9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டியில் இரு அணிகளும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (ற-5)

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி



இருப்பவர்கள்: எம்.கஜதீபன் (பயிற்றுவிப்பாளர்), க.சுபாஸ்கரன் (அணிபொறுப்பாசிரியர்), எஸ்.எம்.இவாஸ் (அணித்தலைவர்), பி.கே.சிவலிங்கம் (அதிபர்), பி.அருணா (உதவி அணித்தலைவர்), திருமதி ஜே.விக்னேஸ்வரன்(உப.அதிபர்), எஸ்.வேதநாயகம் (விளையாட் டுத்துறை ஆசிரியர்)

நிற்பவர்கள்: ஏ.வினோசன், ஏ.அஞ்சயன், எஸ்.எம்.ரிசாதி, ஏ.சுஜிதன், ரி.டஜீபன், எம்.கோபிநாத், எஸ்.சரணியன், மி.விதுசன், எம்.லோகிஷன், எஸ்.சிவஜோதி, ரி.கஜானன், ஜே.தனுசன்

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்




இருப்பவர்கள்: ரி.டினேஸ் (பயிற்றுவிப்பாளர்), ஜே.எட்லின் (அணி பொறுப்பாசிரியர்), அ.தர்சன் (உதவி அணித்தலைவர்), செ.இளங்கோ (அதிபர்), ஆர்.கம்சிநாத் (அணித்தலைவர்), க.தேவகிருபாகரன் (உபஅதபர்) து.கௌரிபாலன் (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் : முதலாம் வரிசை : த.பிரபுராஜ், த.பிரசாந், த.சுரேஷ், நிலக்ஷன், ச.மதன், க.கனவுச்செல்வன், அ.மாதவன்

இரண்டாம் வரிசை : அ.நிதர்ஷன், கோ.உதயசபேசன், த.விதுசன், இ.விசாகன் , எ.சிலோஜன், தமிழேந்தி

## வலிகாமம் கல்வி வலய கரம் சம்பியனாகத் தெரிவானது ஆனைக்கோட்டை றோ.க.த.க



வலி.வடக்கு, ஏப்.4

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே கடந்த ஞாயிற்றுக் கிழமை நடை பெற்ற 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரம் சுற்றுப்போட்டியில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலை வலய மட்டத்தில் சம்பியனானது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி உள்ளக மண்டபத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதலில் இடம்பெற்ற முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் முதல் சுற்றை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சி.லுஜித்தும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த இ.பிறின்சிகனு ம் மோதிக் கொண்டார்கள்.

முதல் ஒற்றையர் சுற்றில் இடம்பெற்ற ஆறு சுற்றுக்களிலும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த லுஜித் 25:00 என்ற ரீதியில் வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த பா.நிரோஜனும் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ம.விஜயதீபனும் களமிறங்கினர்.

றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த நிரோஜன் 20:1 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றியைத் தன்வசமாக்கினார்.

இரு பாடசாலை அணிகளும் தலா ஒரு வெற்றியை பெற்றதைத் தொடர்ந்து மூன்றாம் சுற்றான இரட்டையர் ஆட்டம் இடம்பெற்றது.

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தைச் சோந்த ரி.தனுசன்-எஸ்.றொசான் இணையும் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த கே.கேசவன் - எஸ்.ஹரிபிரசாத் இணையும் மோதிக்கொண்டன.

நான்கு சுற்றுக்கள் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் முதல் மூன்று சுற்றுக்களையும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாட சாலை இணை 15: 04 புள்ளிகள் என்ற அடிப்படையி வெற்றி பெற்று வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட் டது. (ற-86)

## பாடசாலைகளுக்கிடையான அரை மரதன் ஓட்டப் போட்டி

### சனியன்று கிளிநொச்சியில்

வலி,வடக்கு ஏப்.4

வடமாகாண மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நட்த்தப்படும் ஆண்கள், பெண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மன்னார், கிளிநொச்சி, வுவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற அரை மரதன் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களே இதில் பங்குகொள்ளவுள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் முதல் பத்து இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகள் இதில் கலந்து கொள்வர்.

பரந்தன் சந்தியில் இருந்து புறப்படும் அரை மரதன் ஓட்டப் போட்டியாளர்கள் விசுவமடுவை வந்தடைவர் (ற-86-400)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் ஏப்.4

பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்கின் அனுமதியுடன் நக்கீரன் விளையாட்டுக் கழகம் நடந்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக் கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

**பி.ப. 3.30 மணி**

அண்ணாசிலையடி விளையாட்டுக்கழகம் எதிர் கரவைச் சுடர் விளையாட்டுக்கழகம்

**பி.ப. 4.30 மணி**

கலைவாணி வி.க. விளையாட்டுக்கழகம் எதிர் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகம்.(ற-23)

★★★

யாழ்ப்பாணம் ஏப்.4

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தினதும் விளையாட்டுக் கழகத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மின்னொளியில் நடந்தப்படும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

**இரவு 7 மணி**

ஏழாலைசரஸ்வதிபிஅணி எதிர் ஞானவைரவர் ஏ அணி

**இரவு 8 மணி**

தெல்லிப்பழை நண்பர்கள் பி அணி எதிர் கட்டுவன் வள்ளுவன் வி.க. (ற-23)

★★★

வடமராட்சி, ஏப்.4

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் லீக் முறையிலாள உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம்.

**பி.ப. 4 மணி**

வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம். (ற-400)

## பங்குபற்றும் அணிகள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் ஏப்.4

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே வருடா வருடம் நடத்தும் கரப்பந்தாட் டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி போட்டியில் பங்குபற்றவுள்ள அங்கத்துவ விளையாட்டுக் கழகங்கள் போட்டிக்கான விண்ணப்படிவங்களை செயலாளர் சுதேஸ் குமாரிடம் பெற்று அதனை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் அவரிடமே ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையேயான கபடிப் போட்டிகள் வவுனியாவில்

வலி.வடக்கு ஏப்.4

வட மாகாண விளையாட்டுத்திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையேயான ஆண்கள் பெண்களுக்கான கபடிப் போட்டிகள் வவுனியாவில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் நடை பெறவுள்ளன.

இந்த போட்டிகளில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவ ரம் வருமாறு:-

ஆண்கள் பிரிவு-

மன்னார் மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட அணி.

யாழ்ப்பாணம் மாவட்ட அணி எதிர் கிளிநொச்சி மாவட்ட அணி.

(இரண்டாம் சுற்றில் இருந்து வவுனியா மாவட்ட அணி மோதவுள்ளது)

பெண்கள் பிரிவு

கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட அணி.

யாழ்ப்பாணம் மாவட்ட அணி எதிர் மன்னார் மாவட்ட அணி

(இரண்டாம் சுற்றில் வவுனியா அணி மோதவுள்ளது.) (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெல்லி டேர் டெவில்ஸ் அணியை தோற்கடித்தது கொல்கத்தா அணி

ஐபிஎல் சீசன் 6இன் முதலாவது ஆட்டத்தில் கொல்கத்தா அணி 6 இலக்குகளால் வெற்றியைத் தனதாக்கியது.

ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.

டெல்லி தொடக்க வீரர்களாக உன்முக்த் சந்த், வோர்னர் களமிறங்கினர். ஆட்டத்தின் ஆரம்பமே டெல்லிக்கு அதிர்சியாக அமைந்தது. பிரெட் லீ வீசிய முதல் பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்திலேயே போல்டானார் உன்முக்த். அடுத்து வார்னருடன் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா இணைந்தார். இருவரும் 2 ஆவது இலக்கை இணைப்பாட்டமாக 44 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். வோர்னர் 21 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் நரைனின் சுழலில் காலிஸ் வசம் பிடிபட்டார்.

மன்பிரீத் ஜுனேஜா, நமன் ஓஜா ஆகியோர் முறையே 8,9 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து பெவிலியன் திரும்பினர். டெல்லி அணி 12 பந்துப்பரிமாற்றங்களில் 79 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதிகம் எதிர்பார்க்கப்பட்ட ஜோகன் போத்தாவும் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இர்பான் பதான், ரஸ்ஸல் தலா 4 ஓட்டங்களை எடுத்து சுனிலின் சுழலில் மாட்டிக் கொண்டனர். ஒரு முனையில் இலக்குகள் சரிந்தாலும், உறுதியுடன் விளையாடிய ஜெயவர்த்தனா 66 ஓட்டங்களை எடுத்து (52 பந்து, 8 பவுண்டரி, 1 சிக்ஸர்) ஆட்டமிழந்தார். டெல்லி அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 128 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. கொல்கத்தா பந்து வீச்சில் சுனில் 4 இலக்குகளையும் ரஜத் பாட்டியா, பிரெட் லீ தலா 2 இலக்குகளையும், பாலாஜி ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

129 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் களமிறங்கியது கொல்கத்தா அணி. அவ்வணி சார்பாக பிஸ்லா, கௌதம் கம்பீர் ஆகியோர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களம் புகுந்தனர். இவ்விணையை நீண்ட நேரம் நிலைத்து நிற்கவிடாது, மிரட்டினார் நரேன். வெறும் 4 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிஸ்லா நரேனின் பந்தவீச்சில் சந்த்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். இதனையடுத்து கம்பீருடன் இணைசேர்ந்தார் கலீஸ். இவர்கள் இருவரும் இணைந்து டெல்லி டேர் டெவில்ஸ் அணியின் பந்துவீச்சாளர்களைப் புரட்டியெடுத்தனர்.

இந்நிலையில் இவ்விணைப்பாட்டத்தைப் பிரித்தார் நடீன். கலீஸ் 20 பந்துகளில் 20 ஓட்டங்களுடன் அரங்கு திரும்பினார். இதனையடுத்து கம்பீருடன் இணைந்தார் திவாரி. இவர்கள் இருவரும் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில், 29 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பெற்றிருந்த கம்பீர் போத்தாவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து களம்புகுந்த மோர்கன் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அணி 99 ஓட்டத்தைப் பெற்றிருந்த போது, திவாரி 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து களம்புகுந்த யூஸுப்பதான் மோர்கனுடன் இணைந்து அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச்சென்றார். இந்நிலையில் 18.4 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றிக்கு வேண்டிய 129 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. களத்தில் மோர்கன் 14 ஓட்டங்களுடனும், யூஸுப்பதான் 18 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது இருந்தனர்.

பந்துவீச்சு சார்பாக டெல்லி டேர் டெவில்ஸ் அணியின் நலீம் 2 இலக்குகளையும், அஸிஸ் நேரா, போதா ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் நரேன் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை இன்றைய ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதவுள்ளன. (400)



# சமனிலையில் முடிந்தது ஆட்டம்

பார்சிலோனா, பாரீஸ் செயிண்ட் ஜெர்மியன் அணிகள் மோதிய சாம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டி சமனிலையில் முடிந்தது.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பார்சிலோனா, பாரீஸ் செயிண்ட் ஜெர்மியன் அணிகள் மோதின.

தொடக்கம் முதல் அசத்திய பார்சிலோனா அணிக்கு நட்சத்திர வீரர் மெஸ்சி ஒரு கோல் பெற்றுக்கொடுத்தார். முதல் பாதி ஆட்டத்தில் பாரீஸ் செயிண்ட் அணி வீரர்கள் கோல் எதையும் பெறவில்லை.

இரண்டாவது பாதியில் அசத்திய பாரீஸ் செயிண்ட் அணிக்கு இப்ராகிமோவிக் முதல் கோலை அடித்தார். இதற்கு பார்சிலோனாவின் சேவி 'பெனால்டி' வாய்ப்பில் பதிலடி கொடுக்க, பார்சிலோனா அணி மீண்டும் முன்னிலை பெற்றது. பின் பாரீஸ் செயிண்ட் அணியின் பிலாசி கடைசி நேரத்தில் ஒரு கோல் அடித்து அசத்தினார்.

முடிவில், ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் சமனிலையானது.(ற)

# சேவாக் இல்லை

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் இன்றைய போட்டியில் இந்திய நட்சத்திர வீரர் சேவாக் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதை காரணமாகவே அவர் இணைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

முதுகு உபாதையால் பாதிக்கப்பட்டு வந்த விரேந்தர் செவாக், இன்றைய போட்டியில் பங்குபற்றுவாரா, இல்லையா என்ற சந்தேகம் நிலவி வந்த நிலையில், அவர் பங்குகொள்ள மாட்டார் எனத் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதைக்காக ஓய்வெடுக்குமாறு மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் காரணமாக அவர் இன்றைய போட்டியில் பங்குபற்ற மாட்டார் எனவும் டெல்லி டெயாடெவில்ஸ் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஏற்கனனே டெல்லி டெயாடெவில்ஸ் அணியின் கெவின் பீற்றர்சன் காயம் காரணமாக இத்தொடரில்



பங்குபற்ற முடியாது போனதோடு, அவ்வணியின் வேகப்பந்து வீச்சாளர் மோர்னி மோர்க்கல் உள்ளூர்ப் போட்டிகளில் பங்குபற்றி வருவதால் ஐ.பி.எல் இன் சில போட்டிகளில் பங்குபற்ற முடியாத நிலை காணப்படுகிறது.

இன்றைய போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் ஜேம்ஸ் பற்றின்சன், பிரென்டன் மக்கலம் ஆகியோர் பங்குகொள்ள மாட்டார்கள் என ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2013-14 ஒப்பந்தப் பட்டியல்; வெளியிட்டது ஆஸி. கிரிக்கெட் சபை

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபையின் 2013-14 ஆண்டு காலப்பகுதிக்கான தேசிய ஒப்பந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் 20 வீரர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்தாண்டு 17 வீரர்களுக்கே ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிலையில், இம்முறை 3 வீரர்களுக்கு மேலதிகமாக ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு ஒப்பந்தத்தைப் பெற்றிருந்தவர்களில் ரிக்கி பொன்டிங் மற்றும் மைக்கல் ஹசி ஆகியோர் ஓய்வு பெற்றுள்ள நிலையில் அவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதோடு, டேவிட் ஹசியும் இவ்வாண்டு ஒப்பந்தம் செய்யப்படவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப் பட்டியலில் புதிதாக ஜோர்ஜ் பெய்லி, எட் கொவான், ஜேம்ஸ் ஃபோள்க்னர், பிலிப் ஹியூஸ், கிளென் மக்ஸ்வெல், கிளின்ட் மக்காய் ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

ஒப்பந்தம் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட வீரர்களில் ஸ்டீவன் ஸ்மித், உஸ்மான் கவாஜா, ஜக்ஸன் பேர்ட், மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் ஆகியோருக்கு ஏமாற்றமே கிட்டியிருக்கிறது.

ஒப்பந்தம் பெற்றுள்ள 30 வீரர்கள்:

ஜோர்ஜ் பெய்லி, மைக்கல் கிளார்க், எட் கொவான், பற் கமின்ஸ், ஷேவியர் டொகேர்ட்டி, ஜேம்ஸ் ஃபோள்க்னர், பிரட் ஹன், றயன் ஹரிஸ், பென் ஹில்பன்ஹோஸ், பிலிப் ஹியூஸ், மிற்சல் ஜோன்சன், நேதன் லையன், கிளென் மக்ஸ்வெல், கிளின்ட் மக்காய், ஜேம்ஸ் பற்றின்சன், பீற்றர் சிடில், மிற்சல் ஸ்ராார்க், மத்தியூ வேட், டேவிட் வோணர், ஷேன் வொற்சன். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். களச்சமர்; தமிழகத்துக்கு அரசு சவால்

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டித் தொடரை இலங்கை அணியினர் புறக்கணிக்கவேண்டும் எனப் பல்வேறு அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், எக்காரணம் கொண்டும் குறித்த கிரிக்கெட் போட்டித் தொடரிலிருந்து வெளியேறக்கூடாது என இலங்கை வீரர்களுக்கு அரசு நேற்று ஆலோசனை வழங்கியுள்ளது என அறியமுடிகின்றது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் நிபந்தனை, தமிழக எதிர்ப்பு உட்பட முக்கிய சில விடயங்களைக் கருத்திற்கொண்டே இந்த ஆலோசனையை வீரர்களுக்கு அரசு வழங்கியுள்ளது என்றும் தெரியவருகின்றது.

இலங்கை வீரர்கள் பங்கேற்றால் ஐ.பி.எல். போட்டிகளை சென்னையில் நடத்துவதற்கு இடமளிக்கமாட்டாது எனத் தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு அறிவித்ததையடுத்து ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் கலந்துகொள்வதில் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

தமிழக முதல்வரின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த சிங்கள அமைப்புகள் ஐ.பி.எல். போட்டிகளை இலங்கை வீரர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என வலியுறுத்தின. இதனால் ஐ.பி.எல். விவகாரத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

இந்நிலையில், ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் இலங்கை வீரர்களுக்குப் பூரண பாதுகாப்பு வழங்கப்படும் என இந்திய மத்திய அரசு இலங்கையிடம் உறுதியளித்திருந்தது. இதனையடுத்து ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்பதற்கு வீரர்கள் நாட்டிலிருந்து புறப்பட்டனர்.

எனினும், நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் ஓயவில்லை. தேசப்பற்றைக் கருத்திற்கொண்டு ஐ.பி.எல். போட்டித் தொடரை இலங்கை வீரர்கள் புறக்கணிக்க வேண்டுமென சிங்கள அமைப்புகள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுக்கின்றன.

இந்நிலையிலேயே இந்தியன் பிரிமியர் லீக் தொடரிலிருந்து வெளியேற வேண்டாம் என அரசு இலங்கை கிரிக்கெட் வீர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

''ஐ.பி.எல். தொடரிலிருந்து வீரர்கள் வெளியேறினால் அது தமிழக முதல்வரின் அழுத்தத்துக்கு அடிபணிந்ததுபோல் ஆகிவிடும். ஒரு மாநில அரசின் செயற்பாடுகளை நாம் கருத்திற்கொள்ள வேண்டியதில்லை. மத்திய அரசு எமது வீரர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே, வீரர்கள் போட்டியிலிருந்து வெளியேறவேண்டியதில்லை. ஐ.பி.எல். போட்டியில் விளையாட முடியாது போனால் அது தன்மானப் பிரச்சினையாகும்.'' - என்று அரச தரப்பு உறுப்பினரொருவர் கூறினார்.

அதேவேளை, இலங்கை கிரிக்கெட் வீரர்கள் நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டனர் எனக்கூறி அவர்களுக்கு எதிராக நேற்று கிரிக்கெட் சபைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ராவண அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

SPOKEN ENGLISH
யாருக்காக ?
- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-06.04.2013
1) காலை 8.00-10.00 2) மு.ப 10.00-12.00
3) பி.ப 1.00-3.00 4) மாலை 3.00-5.00


குறிப்பு: எமது பயிற்சியில் இணைந்து எவராவது 3 மாத முடிவில் ஆங்கிலத்தில் ஏனையவர்களுடன் சரளமாகப் பேச முடியாதிருந்தால் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

SAAMSON 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். TEL .0776214567

FRENCH LANGUAGE CENTRE
யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்
FRENCH CLASSES
Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்).
690 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளார்கள். இவ் வருடத்தின் 5 வது பிரிவு விரைவில்.... 10 பேர் மட்டுமே ஒரு வகுப்பிற்கு அனுமதி......
No. 23, Palaly, Road, ஆரியகுளம். (அப்பலோ வைத்தியசாலை முன்) T.P. 0779 789 456
181, 1st Floor, Main Street, Nelliady. இணைவு : BCLL English Courses Deutsch, Sinhala வகுப்புக்களும்...

தகவல் தொழினுட்பமாணி பட்டக்கற்கை
BIT கொழும்புப் பல்கலைக்கழகம் BIT
Semester 2, 4, & 6 ஆரம்பம்
Saturday 06.04.2013 Seme 2 = 7 - 9 am
Seme 4 = 9 - 11.30 am Seme 6 = 2 - 4 pm
11 வருடங்களாக BIT கற்கையில்....
Mr. R.Kumaran - B.Sc. Call : 0776577359
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m

செங்கற்கள், ஓடுகள் விற்பனைக்குண்டு
தங்கொட்டுவ செங்கற்கள், ஓடுகள் யாழ், வன்னி போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்.



பிரணவன் என்ரபிறைசஸ்
இல :365, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக) 0773818799.

தொழில்நுட்பவியலாளர் தேவை
AC (குளிரூட்டி), Refrigerator (குளிர்சாதனப்பெட்டி), Washing Machine (சலவை இயந்திரம்) ஆகியவற்றில் முன்னனுபவ ் உள்ள தொழில்நுட்பவியலாளர் உடன் தேவை. நேரில் வரவும்.
Midea Electro mart,
No.11,1H, Stanly Road, Jaffna.
021-222 4566 (c/7279) (8.6.16)

புதிய பிரிவு ஆரம்பம்
- Certificate in Multimedia
- Certificate in Web Designing
- Certificate in Java Programming
- Certificate in C Language
- Certificate in Eng. Drawing & AutoCAD
- Diploma in Computerized Accounting

ஆரம்பம்: 06.04.2013
காலை 10.00 மணி
மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

வெளிநாட்டு உயர்கல்வி, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு IELTS ஓர் தடையா?
IELTS
புதிய தலைமுறையின் வழிநடத்தலுடன், நடைமுறைக்கு சாத்தியமான வகையில் உங்கள் IELTS படிப்பினை தொடருங்கள்.
விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்.
DMI COMPUTER EDUCATION
புதிய பிரிவுகள் ஆரம்பம்
6/4/2013 Saturday
மேலதிக விபரங்களுக்கு 0777 173517
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம்
No.113. கன்னாதிட்டி வீதி,
(சயன்ஸ் ஹோல் அருகாமை)Tel.: 021-222 4403

முக்கிய அறிவித்தல்
V.S.P நல்லெண்ணெய்
அன்பான V.S.P நல்லெண்ணெய் விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவெனில் V.S.P என்று போலியான லேபிள்களை பயன்படுத்தி நல்லெண்ணெயாக வெளிவருகின்றன. எனவே நீங்கள் எமது தயாரிப்பான V.S.P ஐ இலகுவாக இனங்கண்டு கொள்ள பரிமளா ஸ்ரோர்ஸ் 26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடனும் உரிமையாளர் பொ.பாஸ்கரன் என்பவரின் பெயரும் அச்சிடப்பட்டுள்ளது. ஆதலால் அன்பான விற்பனையாளர்களும், பாவனையாளர்களும் இதனை நன்கு கவனித்து கொள்வனவு செய்து கொள்ளவும் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
பொ.பாஸ்கரன்
0212229165
0212224135

அருணோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்பு)





அருணோதயாவின்
இன்னிசை மாலை =2013
தென்னிந்திய திரைப்பட பாடகர்
மதுபாலகிருஷ்ணன்
மதுபாலகிருஷ்ணனின் அபூர்வ ராகங்கள்
பின்னணிப் பாடகி அல்கா அஜித்
Airtel ஜூனியர் Super Singer's
ஸ்ரீநிஷா
பிரியங்கா
சுகன்யா
T.M.S இன் குரலில் பாடகர் S. கஜன்



மகா சில்க்ஸ்
32, 40 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.
0212227359

பியூட்டி சில்க்ஸ்
69, 69A நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

கவுஸ் ஒவ் செலெக்ஷன்
22 பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
0212227675

மூன்று ஸ்தாபனத்திலும்
10000/= பெறுமதிக்கு புடைவை எடுப்பவர்களுக்கு 500/= ரிக்கற் இலவசம்
20000/= பெறுமதிக்கு புடைவை எடுப்பவர்களுக்கு 1000/= ரிக்கற் இலவசம்.
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
இடம்:- வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம். நேரம்:- மாலை 3.00 மணி
அனுமதிச் சீட்டு விலை- 2000/=, 1000/=, 500/= காலம்:- 07.04.2013
:- மகா சில்க்ஸ், பியூட்டி சில்க்ஸ், கவுஸ் ஒவ் செலெக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இலங்கையின் முதலாவது 4G LTE வலையமைப்பு

# 4G

## இப்பொழுது யாழ்ப்பாணத்தில்



கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும்,
கண்டியிலும் சிறப்பாக செயற்படும் வலையமைப்பு
விரைவில் அதிவேக விஸ்தரிப்புடன் உங்கள் பிரதேசத்திலும்

மாதாந்தம் ரூ. 1,400/-** மாத்திரம் செலுத்தி
உங்கள் இல்லம் அல்லது அலுவலகத்தை அதிவேக 4G ZONE ஆக மாற்றிடுங்கள்.

- Wi-Fi உடன் கூடியது
- 2 Data Ports
- 1 Voice Port
- இணைப்புக் கட்டணம் ரூ. 7,790/-




** 4Mbps Home பக்கேஜ் 25GB உடன்

மேலதிக விபரங்களுக்கு 0117 100 100

நிபந்தனைகளுக்கு உட்பட்டது. வரிக் கட்டணம் ஏற்புடையது.

Dialog
எதிர்காலம் இன்றே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைக் காட்சிகள்




ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள்



அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த சஞ்சிகையான ''அச்சு மத்திய தீபம்'' வெளியீடும் விஞ்ஞான கூடத்துக்கு பழைய மாணவியும் முன்னாள் அதிபருமான திருமதி பு.கணபதிப்பிள்ளையின் பெயர் சூட்டும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் முத்து இராமகிருஷ்ணன் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்வதையும் திருமதி பு.கணபதிப்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினர், பாடசாலை அதிபர் ஆகியோரையும் படங்களில் காணலாம். [ஒ]



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு யு.என்.டி.பியின் அனுசரணையுடன் ஆனைக்கோட்டை மாதர் சங்கத்தால் பாண்ட் வாத்தியக் கருவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. [ம-100]




யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி கல்லூரி மைதானத்தில் அதிபர் வீ.கணேசராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரிட்டன் கிளையின் செயலாளர் எஸ்.தேவராஜா கலந்து கொண்டார். [ம]




கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலைக்கான புதிய விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்பட்டு இல்ல மெய்வன்மைப் போட்டியும் நடத்தப்பட்டது.

பாடசாலையின் வெளிநாடு மற்றும் உள்ளூர் பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், பாடசாலை சமூகம் ஆகியோரின் நிதிப்பங்களிப்புடன் கொள்வனவு செய்யப்பட்ட காணி விளையாட்டு மைதானமாக மாற்றப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் ஆ. தங்கவேலு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம், பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளரும் பிரதேச வைத்தியருமான ப.நித்தியானந்தன், சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் இ.சண்முகலிங்கம் ஆகியோர் கூட்டாக மைதானத்தைத் திறந்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து பாடசாலை மெய்வன்மைப் போட்டிகள் இடம்பெற்றன. [ம-9]



பாடசாலைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு கில்டன் விடுதியில் பிரிட்டிஷ் ஆணையகத்தால் அண்மையில் நடத்தப்பட்டது. இதில் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்துக்கான சான்றிதழ் வழங்கப்படுகிறது. [ம]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்முறைக்கு எதிராக கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.4
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் ஏற்பாட்டில் கவன வீர்ப்பு ஊர்வலம் ஒன்று நேற்று நடைபெற்றது.

இந்த ஊர்வலம் யாழ். பஸ்நிலைய முன்றலில் ஆரம்பித்து யாழ். மாவட்ட செயலகத்தில் நிறைவடைந்தது.

''இம்சைகள் அற்ற சுதந்திரமான போக்குவரத்தை பெண்களுக்கு ஏற்படுத்துவோம்'', ''சீதனம் என்னும் கொள்ளியை வைத்து எரிக்காதே'', ''பால் நிலைப்படுத்தப்பட்ட பெண் அடக்கு முறையை அகற்று'',கல்வியைச் சுமக்க வேண்டிய சிறுமியரை ஏன் கரு சுமக்க வைக்கிறீர்கள்'' ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய படி ஊர்வலத்தில் பெண்கள் கலந்துகொண்டனர்.

பெண்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ''பெண்களின் உரிமைகளை மதிப்போம்'' என்று எழுதிய தொப்பிகள் வீதியில் சென்றோருக்கு வழங்கப்பட்டது.

பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்கு எதிரான வன்முறையை இல்லாதொழிப்பது குறித்த மனு ஒன்றை யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகத்திடம் பெண்கள் அமைப்பினர் கையளித்தனர்.

''யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள பால் நிலை சார் வன்முறைக்கு எதிரான செயற்பாட்டு மையம், பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள், பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் ஆகியவற்றுக்கு பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக மாதாந்தம் 100 இற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் பரவலாக வன்முறை சம்பவங்கள் இடம்பெறுவதை ஊடகத்தின் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. இத்தகைய சூழலில் அபிவிருத்தியின் பூரணத்துவம் என்பது சமத்துவ அடிப்படையிலான பகுப்பாய்வுக் கண்ணோட்டத்துடன் பார்க்கப்பட வேண்டியதற்கான கேள்வி அதிகரித்துள்ளது.

பால்நிலைசார் வன்முறையை இல்லாதொழிப்பதற்கு ஆண்கள் மத்தியில் வன்முறையற்ற வாழ்க்கையை ஊக்குவிக்க வேண்டும். முன்னெடுப்புக்கள் பொருத்தமான சமத்துவத்தின் அடிப்படையிலும் வன்முறையைத் தூண்டாத வகையிலும் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும்.

விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள் போன்ற சொற்பதங்கள் பாவிக்கப்படக்கூடாது. அரச கரும விடயங்களில் இருந்து இந்தச் சொற்கள் நீக்கப்பட வேண்டும். மாற்றீடாக 'பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்'' என்று பாவிக்கப்பட வேண்டும். இதே போன்று ''கற்பழிப்பு'' எனும் சொற்பதங்கள் ''பாலியல் பலாத்காரம்'' ''பாலியல் வல்லுறவு'' போன்ற சொற்பதங்களுக்கு மாற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.''- என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-13)

# புனரமைப்புகளின்போது அறிவுறுத்தல் அவசியம்

### இல்லையாயின் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 4
*பாலம் மற்றும் மதகு புனரமைப்பின்போது அது தொடர்பான அறிவுறுத்தல்கள் அந்த இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தவறின் அந்த வேலைகளுக்குப் பொறுப்பான நிறுவனங்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.*

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்ன இவ்வாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

குடாநாட்டில் அநேகமான இடங்களில் பாலங்கள், மதகுகள் மற்றும் வீதி திருத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இவற்றில் சில இடங்களில் உரிய அறிவுறுத்தல்கள், சமிக்ஞைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அண்மைய நாள்களாக பாலங்களை அண்மித்து இடம்பெற்ற விபத்துக்களும் அதன் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்களும் அந்த இடங்களில் உரிய அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டமையாலேயே ஏற்பட்டன.

அத்தகைய இடங்களில் பொதுவாக வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இரவில் அந்த இடங்களைப் பார்த்து உணரக் கூடிய வகையில் வெளிச்ச வீடுகளோ, சமிக்ஞைக் குறியீடுகளோ அமைக்கப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிய வந்துள்ளது.

எனவே அத்தகைய இடங்களில் உரிய சமிக்ஞைகள், அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்த வேண்டும்.

தவறின் அந்த வேலைகளுக்குப் பொறுப்பான நிறுவனங்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கருணாரத்ன மேலும் தெரிவித்தார்.(ம-4)

## ஊர்காவற்றுறையில் பரீட்சார்த்த பனை வெல்ல நிலையம்

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பரீட்சார்த்த பனை வெல்ல நிலையம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு திறந்து வைக்கப்படும். இ.ஜெறாட் ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் திருமதி அ.எழிலரசி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரீட்சார்த்த வெல்ல நிலையத்தை திறந்து வைப்பார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். உதவி கூட்டுறவு ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், யூ.என்.டி.பி. யாழ். தலைமை அதிகாரி செ.ஞானகணேசன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சீவரத்தினம், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ம.ஜெயகாந்தன் உட்படப் பலர் கலந்துகொள்வர். பரீட்சார்த்த பனை வெல்ல நிலையத்தின் உற்பத்திகள் தரமானவையாகவும் சந்தைப்படுத்தும் வாய்ப்பும் கிடைக்கும் பட்சத்தில் ரூபா ஒரு கோடி செலவில் பனை வெல்லத் தொழிலகம் ஒன்று பெரிய அளவில் நிறுவப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் மருந்து மாத்திரைகளுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.4
கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் மருந்து மாத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என வைத்தியசாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரி திருமதி பிறேமா சிவசண்முகராஜா தெரிவித்தார்.

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்கள் மருந்துகள் இல்லாத காரணத்தால் திருப்பி அனுப்பப்படுவது தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்குக் கொழும்பில் இருந்து 3 மாத காலத்துக்கு ஒரு தடவை மருந்துகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த மாதத்துக்கு உரிய மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்பட்டது. இதில் எண்ணெய் வகை மருந்துகள், பொடி மருந்து வகைகள் போதியளவு கிடைக்கப்பெற்றுள்ளன. ஆனால் மருந்து மாத்திரைகள் மட்டும் தட்டுப்பாடாக நிலவுகிறது.

இதனைவிட விடுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு போதியளவு மருந்து வகைகள் உள்ளன. நோயாளர் பிரிவில் மட்டும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.

எனினும் நோயாளர்களுக்கு வழங்கக் கூடிய மருந்துகள் வழங்கப்படுகின்றன. மாத்திரைகள் மட்டுமே தட்டுப்பாடாக உள்ளன என்று மேலும் தெரிவித்தார். (ம-14)

## முன்பள்ளிக் கட்டடம் வரணியில் திறந்து வைப்பு

தென்மராட்சி, ஏப்.4
வரணி கரம்பைக்குறிச்சியில் நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இ.சுதாகர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய முன்பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன், ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை முகாமையாளர் மயூரன், சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவர் ஆ.அலெக்ஸாண்டர் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகளும் இடம்பெற்றன. (ம-9-122)

## ஸ்தபதிக்கு மணிவிழா

யாழ்ப்பாணம், ஏப். 4
பல்துறை ஆளுமை கொண்ட ஸ்தபதி செல்லப்பா சண்முகநாதனின் மணிவிழா நிகழ்வு இன்று நீர்வேலி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும்.

மணி விழாக் காணும் சிற்பாச்சாரியாரை பெரியார்கள் பலரும் வாழ்த்தியுள்ளனர்.

இவரின் மணிவிழாவையொட்டி இன்றைய உதயனில் 12 ஆம், 13 ஆம் பக்கங்களில் சிறப்பிதழ் வெளியாகி உள்ளது.

(ஒ-400)

## மகளிர் தின விழா

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர் குழு நடத்தும் மகளிர்தின விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

மகளிர் குழுத் தலைவி ஜெபமணி ஜோசப் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு சமாசத் தலைவர் எஸ். இலகுநாதன், கூட்டுறவுச்சபைச் செயலர் திருமதி வே.செல்வரத்தினம் ஆகியோர் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்வர். (ம-17)

## யாழ்.ஹாட்லிக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடல் திருத்தம்



யாழ்ப்பாணம், ஏப். 4
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கூடைப் பந்தாட்ட மைதானம் புனரமைக்கப்பட்டுள்ளது.

சீன ரயில்வேத் திணைக்களத்தின் 5 ஆவது இலக்கப் பொறியியல் பிரிவினர் இந்தப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்த மைதானத்தை கல்லூரி நிர்வாகத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த மாதம் 27 ஆம் திகதி இடம் பெற்றது.

தற்போது இந்த மைதானம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சிகளை மேற்கொள்வதற்கும் உகந்ததாக மாறியுள்ளது.

இதன்மூலமாக சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார பிணைப்புக்கள் மேலும் இறுக்கமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஏப்ரல் மாத கொடுப்பனவு பட்டியல்கள் வந்தன

தென்மராட்சி,ஏப்.4
தென்மராட்சி பிரதேச பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு, நோயாளர்களுக்கான கொடுப்பனவு, 70 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கான ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஆகியவற்றைப் பெறுபவர்களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவுப் பட்டியல் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்குப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொடுப்பனவுகளை இன்று தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## 40 பயனாளிகளுக்கு மலசலகூடம்

மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியுடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு மலசல கூடம் அமைத்து வழங்கப்படவுள்ளன. தலா 60 ஆயிரம் ரூபா பெறுமதியில் சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை ஆகியற்றின் ஒத்துழைப்புடன் மலசல கூடம் அமைக்கப்படவுள்ளன.

கரம்பகம், எழுதுமட்டுவாழ் தெற்கு, தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தலா எட்டுப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (மு-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நினைவலைகள்



அமரர்

## சோதிலிங்கம் இலட்சுமிகாந்தன் B.A, J.P

(ஆசிரியர்/அகில இலங்கை சமாதான நீதிவான்
மண்டைதீவு)

புன்னகை தவழும் அழகுவதனம் வாடியதென்ன?
மாணவர்களின் கல்விக்கலங்கரை விளக்கு சாய்ந்ததென்ன?
அழகு நடை பயிலும் கால்கள் தளர்ந்ததென்ன?
கலகலப்பாக பேசும் குரல் ஓய்ந்ததென்ன?
உறவுகளை வரவேற்கும் கரங்கள் துவண்டதென்ன?
காலனவன் விரைந்து இன்னுயிர் கவர்ந்ததென்ன?
பரம்பொருள் பரமனின் பாதம் பற்றியதென்ன?
எம்மனங்களின் வேதனை ஆறாததென்ன?
ஆறாது ஆறாது ஆண்டுகள் நூறு சென்றாலும்
"ஓம் சாந்தி"

27. கருவேலடி லேன்,
கொக்குவில்.

**குடும்பத்தினர்.**

# விற்பனைக்கு

கெயார் பொட்டில் கூலர் பிறிச் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0758255439

# மரண அறிவித்தல்

## திருமதி சாந்தநாயகி இராசையா



இல. 6, விதானையார் வீதி, ஈச்சமோட்டையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தநாயகி இராசையா நேற்று (03.04.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசையாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், வாசுகி, தேவகி(லண்டன்), ஜானகி (லண்டன்), இளங்குமரன் (ஆஸ்திரேலியா), ஆகியோரின் அன்புத் தாயும், சந்திரகாந்தன்(லண்டன்), கலிரதன்(லண்டன்), ஜெயச்சந்திரிகா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 6, விதானையார் வீதி, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இராசையா(கணவர்)

வடக்கில் பெருகும் பனைகள் மேலும் வளம்பெற
பனங்குருத்துக்கள் எட்டுத்திக்கும் பரவி வளம்பெற
பனங் கருப்பட்டி காய்ச்சிடும் கரங்கள் வளம்பெற
சுன்னாகம், மானிப்பாய் வாழ் அனைவரின் உள்ளங்கள் வளம்பெற



பழைய உறவுகளை புதுப்பித்துக் கொள்ளவும்
புதிய உறவுகளை வளர்த்துக் கொள்ளவும்

உங்களின் சகல நிதித் தேவைகளையும் பூர்த்தி செய்திடும் வகையில் 2013 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் சுன்னாகம் மற்றும் மானிப்பாயில் நாம்

DFCC
வர்தன் வங்கி
உங்களுக்கு அதிநட்புறவான வங்கி

இல. 122, சேர் பொன்னம்பலம் இராமநாதன் மாவத்தை, சுன்னாகம். தொ. 021 2 242 145
இல. 172, 172/A, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய், தொ. 021 2 256 120
அழையுங்கள் 011 2 663 888, இணையத்தளம்: www.dfcc.lk

DFCC வர்தன வங்கி ஃபிட்ச் ரேடிங் லங்காவின் AA- (lka) தரப்படுத்தலை பெற்றுள்ளது.
DFCC வர்தன வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்வி. குழந்தைவேலு தங்கமுத்து

(ஓய்வுபெற்ற ஆசிரியை)



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு தங்கமுத்து நேற்று (03.04.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசா, ஞானப்பிரகாசம் (சின்னத்தம்பி), கியுபேட் இராஜதுரை, ஆசைமுத்து, அருளம்மா (நல்லம்மா), ஞானப்பு (பூமணி) மற்றும் றெஜீனா கனகம்மா (ஓய்வுபெற்ற தாதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.04.2013) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் கோப்பாய் தெற்கு, புதிய மரியன்னை தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புதிய மரியன்னை தேவாலய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறாம்பியடி வீதி, (35643)
யாழ்ப்பாணம். (23, 14-)

தகவல்:
சகோதரி.

## தடைசெய்யப்பட்ட வலைகள் கைப்பற்றப்பட்டன

மட்டக்களப்பு,ஏப்.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களில் 35 லட்சம் ரூபா பெறுமதியான தடைசெய்யப்பட்ட வலைகள் கைப்பற்றப்பட்டன என்று கடற்றொழில் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜ் தெரிவித்தார்.

இந்த வலைகள் மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் மற்றும் கடற்படையினரின் உதவியுடன் கைப்பற்றப்பட்டன என்று அவர் கூறினார்.

பிள்ளையாரடி, பாலமீன்மடு, புன்னைக்குடா, வாகரை, களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, ஊறணி, வலையிறவு உட்பட பல இடங்களில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்த நடவடிக்கையால் மட்டக்களப்பு வாவியில் உள்ள பல வகையான மீன் இனங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## புனரமைப்புப் பணிகளுக்காக மூடப்பட்டது பழைய பாலம்




மட்டக்களப்பு,ஏப்.4

மட்டக்களப்பு, கல்லடி பழைய பாலம் புனரமைப்புப் பணிகளுக்காக தற்போது தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தின் புனரமைப்பு பணிகள் முடிவடைந்தவுடன் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் வை. தர்மரட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்லடி புதிய பால நிர்மாண வேலைகளுக்காக மூடப்பட்டிருந்த லேடி மெனிங் வீதியின் அபிவிருத்தி வேலைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## ஜனாதிபதி செயலக காட்சிக்கூடம் அரச பயிற்சி நிறுவனமாக மாற்றம்



அம்பாறை,ஏப்.4

அம்பாறையில் நடைபெற்ற தேசத்தின் மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி செயலக காட்சிக்கூடம் அரச பயிற்சி நிறுவனமாகப் பயன்படுத்தப்படவுள்ளது என்று அம்பாறை மாவட்ட செயலர் நீல் டி அல்விஸ் தெரிவித்தார்.

இந்த கண்காட்சியை முன்னிட்டு 50 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிகளைக் கொண்ட குறித்த கட்டடமே அரச பயிற்சி நிறுவனமாக பயன்படுத்தப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு மும்மொழி உட்பட பல்வேறு பயிற்சிகள் வழங்கும் நிறுவனமாக அது பயன்படுத்தப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள், விரிவுரை அறைகளைக் கொண்ட இந்த நிறுவனத்தில் விரைவில் பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சினைகள் தீர்க்கப்படாவிடில் கிழக்கில் ஆட்சி மாறும்

### ■ தொடர்ந்தும் அமைதி காக்க முடியாது என்கிறார் சுபைர்

ஏறாவூர்,ஏப்.4

*முஸ்லிம் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அரசு தீர்க்கமானதொரு முடிவை மிக விரைவில் எடுக்காவிட்டால், கிழக்கு மாகாண சபையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியநிலை முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்படும்.*



இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் அல் முனீரா பாலிகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக தொடர்ச்சியானதும், நன்கு திட்டமிட்டதுமான அடக்குமுறைகளும் தாக்குதல்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் முஸ்லிம் சமூகம் அரசியல்வாதிகளாகிய எம்மீது கடும் அதிருப்தி கொண்டுள்ளது.

நாம் தொடர்ந்தும் அமைதி காக்க முடியாது. மக்கள் எங்களை நோக்கி கைகளை நீட்டக்கூடிய நிலை ஏற்படப் போகின்றது.

கிழக்கு மாகாண சபையில் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த 22 முஸ்லிம் உறுப்பினர்கள் இருக்கின்றோம்.

கட்சி வேறுபாடுகளை மறந்து நாம் ஒரே நோக்கில் சிந்தித்தால் பல்வேறு எதிர்பாராத திருப்பங்களை எதிர்காலத்தில் ஏற்படுத்த முடியும்.

கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ்பேசும் மக்களின் நலனை அடிப்படையாக கொண்டு நல்ல தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டும்.- என்றார். (ச)

## பெண் தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சி நாளை

மட்டக்களப்பு,ஏப்.4

பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வரை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியை மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் காவ்யா நிறுவனம் மற்றும் உலக தொழிலாளர் அமைப்பு ஆகியவை இணைந்து நடத்தவுள்ளன.

இந்தக் கண்காட்சியின் முதல் நாள் நிகழ்வில், அமைச்சர் பசீர் சேர்குதாவூத், பிரதி அமைச்சர் வி.முரளிதரன், மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் உட்பட பலர் கலந்துகொள்வர். (ச)

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பணிப்புரையை மட்டக்களப்பு மத்தி வலயம் பின்பற்றுவதில்லை

### ■ ஆசிரியர், மாணவர் விசனம்

மட்டக்களப்பு,ஏப்.4

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சுற்றறிக்கைக்கு மாறாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கான முதலாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டமை குறித்து அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

முதலாம் தவணைப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் அந்தந்தப் பாடசாலை மட்டத்திலும், இரண்டாம் தவணைக்கான வினாத்தாள்கள் கோட்ட மட்டத்திலும் மூன்றாம் தவணை வினாப்பத்திரம் வலய மட்டத்திலும் தயாரிக்கப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கி இருக்கின்றது.

இந்த நிலையில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் முதலாம் தவணைப் பரீட்சைக்கான வினாப்பத்திரம் வலயமட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ளமை குறித்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

வருட ஆரம்பத்தின் முதலாம் தவணைக் காலத்தில் ஏற்பட்ட அடைமழை, வெள்ளப்பெருக்கு என்பவற்றினாலும் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நிகழ்வுகளினாலும் பாடத்திட்டங்கள் உரியவேளையில் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

அதனைக் கருத்திற்கொண்டே முதலாந் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் பாடசாலை மட்டத்தில் தயாரிக்கப்பட வேண்டும் என்று மாகாணக் கல்விப் பணிப்பாளரால் விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, தேசத்தின் மகுடம் நிகழ்ச்சியை மாணவர்கள் கண்டுகளிப்பதற்கு வசதியாக கடந்த 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் வழங்கப்பட்ட விடுமுறைகளுக்குப் பதிலாக இந்தத் தினங்களில் பரீட்சைகளைத் தொடங்காது ஏப்ரல் முதலாம்திகதி ஆரம்பிக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் உத்தரவிட்டிருந்தார்.

எனினும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் இந்த உத்தரவைப் புறந்தள்ளிவிட்டு மார்ச் 30 ஆம் திகதியே தவணைப் பரீட்சையை ஆரம்பித்திருந்த விடயம் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் விசனத்தைத் தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சூதாட்டத்தில் ஈடுபட்டோர் செலுத்தினர் ரூ.1500

அம்பாறை,ஏப்.4

அம்பாறை, மத்தியமுகாம் பிரதேசத்தில் அரிசி ஆலையில் சூதாட்டத்தில் ஈடுபட்ட மூவரை அபராதமாக 1,500 ரூபா செலுத்துமாறு கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்ஏ.றிஸ்வி உத்தரவிட்டார்.

மத்தியமுகாம் நகர் பிரதேசத்தில் அமைந்துள்ள அரிசி ஆலை ஒன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூவரையும் மத்தியமுகாம் பொலிஸார் கைது செய்து பொலிஸ் பிணையில் விடுவித்திருந்தனர்.

சட்டவிரோதமாக பணத்துக்கு சூதாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த குற்றச்சாட்டில் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல் செய்யப்பட்டு, அவர்களை கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது அவர்களுக்கு தலா 500 ரூபா வீதம் ஆயிரத்து 500 ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் பட்டாபி படமாடம் கடைக்கு பக்கமாக 2½ பரப்புக் காணி (கடை கட்டக்கூடியது.) உடன் விற்பனைக்குண்டு. தொ.பே:- 0777037058, 021 205 3988


# மரண அறிவித்தல்

## கதிரவேலு பஞ்சாட்சரம் (ஆசாரியார்)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பஞ்சாட்சரம் (ஆசாரியார்) கடந்த (01.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நாகம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும் சின்னத்துரை - பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ருக்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் சிறிறஜனி, பவனீதரன், சிறீரதன், சிறீரதி (யூனியன் அஷ்யூரன்ஸ்), சிறீறஞ்சனா, சாந்தகுமார் (சவுதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கணேஷராசாவின் அன்புச் சகோதரனும் சந்திரமோகன், மனோஜ்சித்திரா, சுகந்தினியின் மாமனும் லக்ஷனா, சஜீவன், சந்துஜன், அபிஷனா, றம்மியா, மதுமிதா, டினோஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோயிலடி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.
(மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கை)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## கிருஷ்ணர் கணேசரத்தினம் (பட்டு)



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் நீரவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் கணேசரத்தினம் (பட்டு) கடந்த (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கிருஷ்ணர் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் யோகேஸ்வரியின் பாசமிகு கணவரும் வேணுஜாவின் (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும் இந்திரவதி, இந்திராதேவி, தவரத்தினம், நவரத்தினம், குகரத்தினம், இரஞ்சனாதேவி (சுவிஸ்), சிவதேவி, காலஞ்சென்ற தர்மரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகசபாபதி, இராசரத்தினம், ராணி, சுசிலா, வசந்தி, பாலசுப்பிரமணியம், ஜெயசீவரத்தினம், பொன்ராசா, ரவிச்சந்திரன், நாகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் தவமணி, றஞ்சினி, அந்தோனிப்பிள்ளை (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் கலைச்செல்வி, கலைமகள் தவயோகராசா பிரசாந்த், துனிஸ்ரா, சுதர்சினி, சியாமினி, இராசகுபேரன், தஜீபா, தர்வினன், அனோஜா, பிரித்தா, வினோதா, விதுஸா, டிலக்சனா, ரஞ்சனா, சுபா, ராஜன், ராஜா, நிசாந்தன், காலஞ்சென்ற பிரதாபன் ஆகியோரின் மாமனும் சியாமனா (டென்மார்க்), சிஸ்ரலா (பிரான்ஸ்), துசி (கனடா), ஜெஜினா (பிரான்ஸ்), சியாளன் (பிரான்ஸ்), தாட்சாயினி, செல்வராசா, வவி ஆகியோரின் சிறிய தந்தையும் பார்த்தீபன், சாரங்கன், சிந்துஜா, திசாஜினி, தரணிகா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2013) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4 மணியளவில் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பரமேஸ்வரா சனசமூக நிலையத்தடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னையா வெற்றிவேல்

(பொன் வெற்றிவேல்)



யாழ்ப்பாணம் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சட்டத்தரணியும், நொத்தாரிசுமாகிய பொன் வெற்றிவேல் என்று அழைக்கப்படும் பொன்னையா வெற்றிவேல் நேற்று (03.04.2013) புதன்கிழமை கால மானார்.

அன்னார் யோகசோதியின் அன்புக் கணவரும், குமுதினி, ரஞ்சித், சாந்தினி (கனடா), பிரபாகரன்(பிரான்ஸ்), யஜந்திரன்(உரிமையாளர், HOTEL LUX ETOILES - நல்லூர்), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செங்கல் வராயன் மற்றும் ராகவன், இந்திரகுமார், கொரின், வினிபிறீடா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.04.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பி.ப.2.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

122/10, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
(பழைய தபால் கந்தோர் அருகில்,
யாழ்ப்பாணம்)

தகவல்:
வெ.யஜந்திரன்
(மகன்-HOTEL LUX ETOILES- நல்லூர்)
விமலாதேவி
T.P:- 077 2306310


# 'உதயன்' இணைய வானொலியின் ஓராண்டு பூர்த்தியினை முன்னிட்டு மாபெரும் கலை, இலக்கிய போட்டிகள்

## கவிதை, சிறுகதை, வானொலி நாடகம், நேர்காணல், ஆக்கப் பாடல்

### ஆகிய துறைகளில் ஆக்கம் பிரதிவடிவமாகவும், ஒலிவடிவமாகவும் நடத்தப்படவுள்ளன.

| | |
|---|---|
| கவிதைகள் | (ஆக்கப்பிரதி) எழுத்துத் தாளில் 3பக்கத்துக்கு குறையாமலும் 4 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஒலிவடிவம்) 15 நிமிடத்துக்கு குறையாமலும் 20 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| சிறுகதை | (ஆக்கப்பிரதி) 4 பக்கத்துக்கு குறையாமலும் 5 பங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஒலிவடிவம்) 15 நிமிடத்துக்கு குறையாமலும் 20 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| வானொலி நாடகம் | (ஆக்கப்பிரதி) எழுத்துத்தாளில் 12 பக்கத்துக்கு குறையாமலும் 13 பக்கத்துக்கு மேற்படாமலும் அமையவேண்டும். (ஒலிவடிவம்) பாத்திரங்களின் நடிப்பு, இசையுடன் 20 நிமிடத்துக்குட்படாமலும் 25 நிமிடத்துக்கு மேற்பட மாலும் இருத்தல் வேண்டும். |
| நேர்காணல் | (ஒலிவடிவம்) 15 நிமிடத்துக்குட்படாமலும் 20 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். |
| ஆக்கப் பாடல் | (ஒலிவடிவம்) 5 நிமிடத்துக்குட்படாமலும் 7 நிமிடத்துக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும். |

## போட்டிகள்:

பாடசாலை மட்டத்திலும், சமூகமட்டத்திலும் இருபிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

- ஒருவர் எத்தனை பிரதிகளும் அனுப்பலாம்
- உங்கள் ஆக்கங்கள் அனைத்தையும் எதிர்வரும் ஏப்ரல் **25.2013** இக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி:

1. அஞ்சல் முகவரி:
**Online Uthayan**
இலக்கம்: 357,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
2. மின்னஞ்சல்:radio@uthayan.com

(சி/7168) (45.6.7)

மேலதிக விபரங்களுக்கு எமது கலையக தொலைபேசி இலக்கம் 021 567 2247 உடன் தொடர்புகொள்ளவும்.

ஒவ்வொரு போட்டியிலும் முதலாம், 2ஆம், 3ஆம் இடத்தினை பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org